# 8

# நிதியியல் துறைச் செயலாற்றம் மற்றும் முறைமை உறுதித்தன்மை

## 8.1 பொதுநோக்கு

*நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் ஏற்பட்ட மிக ஆழமான பொருளாதார நெருக்கடிகளிலிருந்து ஊடுகடத்தப்பட்ட தாக்கங்களை எதிர்த்து நிற்கக்கூடியதாக நிதியியல் முறைமையானது 2022 காலப்பகுதியில் காணப்பட்டது. அனைத்து தரமிடல் நிறுவனங்களினாலும் நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமை, வங்கித்தொழில் துறையின் உயர்ந்த இறையாண்மை வெளிப்படுத்துகைகள், பொருளாதாரச் சுருக்கம், கடுமையான வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை மற்றும் உயர்மட்ட பணவீக்கம் என்பனவற்றுடன் 2022 ஏப்பிறலில் இருபுடை மற்றும் வர்த்தகக் கடன்களின் பேரிலான வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகளை இடைநிறுத்துவது என்ற அரசாங்கத்தின் அறிவித்தலுடன் இணைந்து நிதியியல் துறையின் செயற்பாடுகள் மீதும் குறிப்பிடத்தக்கதும் முன்னொருபோதுமில்லாததுமான மோசமான தாக்கத்தினை உருவாக்கியதுடன் நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் சவாலுக்குட்படுத்தியது. எவ்வாறாயினும் கொடுகடனின் தரம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்றமை, திரவத்தன்மை மீதான கடுமையான அழுத்தம், உயர்ந்தளவிலான பெறுமதியிழப்புக் காரணமாக ஏற்பட்ட தாழ்ந்த மட்டத்திலான இலாபத்தன்மை மற்றும் எதிர்பாராத இழப்புக்களை ஈர்த்துக் கொள்வதற்கான மூலதன தாங்கிருப்புக்கள் தேய்வடையக்கூடிய தன்மையினைக் கொண்டிருந்தமை போன்றவற்றிலிருந்து தோன்றுகின்ற அச்சுறுத்தும் சவால்களுக்கு மத்தியில் 2022 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் உறுதித்தன்மை பேணப்பட்டிருக்கிறது. அதேவேளை, துறையானது சொத்துக்கள் மற்றும் வைப்புக்களின் நியதிகளில் வளர்ச்சியுற்றதுடன் மத்திய வங்கியின் முன்மதியுடைய இணங்குவிப்புத் தேவைப்பாடுகளுக்கும் பெருமளவிற்கு இணங்கிக் கொண்டது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையானது, 2022 காலப்பகுதியில் கொடுகடன் வளர்ச்சியில் காணப்பட்ட சுருக்கம், வீழ்ச்சியடைந்து செல்கின்ற இலாபத்தன்மை மற்றும் கட்டம் 3 கடன்களினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, செயற்படாக் கடன்களின் அதிகரிப்பு என்பனவற்றிலிருந்து தோன்றிய சவால்களுக்கு மத்தியிலும் போதுமான மூலதனம் மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்புடன் சொத்து மற்றும் வைப்பு நியதிகளில், தொடர்ந்தும் விரிவடைவதற்கு இயலக்கூடியதாக இருந்தது. 2022 மாச்சு முற்காலப்பகுதியில் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் உருவான அழுத்தத்தைக் கருத்திற்கொண்டு நாணயச் சபையானது செலாவணி வீதத்தில் அளவீட்டுச் சீராக்கத்தினை மேற்கொள்வதற்கு அனுமதியளித்தது. இருப்பினும், உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவிய கடுமையான திரவத்தன்மைப் பற்றாக்குறை மற்றும் சாதகமற்ற சந்தை மனோபாவங்கள் காரணமாக தொடர்ச்சியான காலப்பகுதியில் மிதக்கும் செலாவணி வீதமானது கடுமையான தேய்வொன்றினைத் தோற்றுவித்தது. இதன் விளைவாக, மத்திய வங்கி செலாவணி வீதத்தில் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை தொடர்பில் சந்தை வழிகாட்டலொன்றினை அறிமுகப்படுத்தியது. 2022இன் முதலரைப்பகுதியில் விடாப்பிடியாக உயர்ந்த மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்ட பணச்சந்தைப் பற்றாக்குறை 2022 திசெம்பர் இறுதியில் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளே முக்கிய காரணமாகும். அதிகரித்த இடர்நேர்வினைத் தவிர்க்கும் பங்கேற்பாளர்களுக்கு மத்தியில் பணச்சந்தை நடவடிக்கைகள்*

*குறைந்த செயலாற்றத்தினைப் பதிவுசெய்தன. நிலையான வருமானப் பிணையங்களுக்கான உயர்ந்த விளைவு வீதங்களையும் அப்போது நிலவிய பேரண்ட பொருளாதார நிலைமைகளின் மோசமான பின்னணியில் எதிர்மறையான சந்தை மனோபாவங்களையும் பிரதிபலித்து பங்குரிமைச் சந்தை 2022 காலப்பகுதியில் மிகக் குறைந்த செயலாற்றத்தினைப் பதிவுசெய்தது. நிதியியல் உட்கட்டமைப்பு, இச்சவால்மிக்க பொருளாதாரச் சூழலில் நிதியியல் துறையின் தொழிற்பாடுகளுக்குத் தொடர்ந்தும் ஆதரவளித்தது. இவ்வனைத்துச் சவால்களுக்கு மத்தியிலும், 2023 மாச்சு 20 ஆம் திகதி பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி அனுமதிக்கப்பட்டதுடன் மேம்பட்ட சந்தை நம்பகத்தன்மையால் ஆதரவளிக்கப்பட்டு வெளிநாட்டுச் செலாவணி மற்றும் பணச் சந்தைகளில் படிப்படியாக தளர்ந்துவருகின்ற திரவத்தன்மை அழுத்தம் மற்றும் அரச பிணையங்களின் விளைவு வீதங்களின் வீழ்ச்சியடைந்து செல்கின்ற நியதிகளில், 2023இன் ஆரம்பத்தில் மிதமான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. எனினும், கடன் மறுசீரமைப்பு நிதியியல் துறைக்கு சவால்களை ஏற்படுத்தக்கூடும். இருப்பினும் கூட, கடன் மறுசீரமைப்பின் போது நிதியியல் முறைமை உறுதித்தன்மையை அரசும் மத்திய வங்கியும் உறுதிப்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளும்.*

## 8.2 வங்கித்தொழில் துறையின் செயலாற்றம்

**தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்லும் கொடுகடன் தரம், திரவத்தன்மை மீதான கடுமையான அழுத்தம், இலாபத்தன்மையின் குறைந்த மட்டம் மற்றும் தேய்வடைந்து செல்கின்ற மூலதன மட்டங்கள் என்பனவற்றிலிருந்து விளைவிக்கும் சவால்களுக்கு மத்தியிலும் 2022 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் உறுதித்தன்மை பேணப்பட்டது.** இருப்பினும் கூட, வங்கித்தொழில் துறை அதன் வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணிய வேளையில், முன்மதியுடைய தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும் தன்மையினையும் பரந்தளவில் பேணியது.

அட்டவணை 8.1
நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்கள்

| விடயம் | 2021 (அ) | | 2022 (ஆ) | |
|---|---|---|---|---|
| | ரூ. பில் | பங்கு (%) | ரூ. பில் | பங்கு (%) |
| **வங்கித்தொழில்துறை** | **19,872.5** | **74.6** | **23,926.9** | **76.3** |
| மத்திய வங்கி | 3,046.3 | 11.4 | 4,510.3 | 14.4 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 14,724.3 | 55.3 | 17,225.2 | 54.9 |
| உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 2,101.9 | 7.9 | 2,191.4 | 7.0 |
| **வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள்** | **1,646.2** | **6.2** | **1,830.9** | **5.8** |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | 1,452.0 | 5.4 | 1,610.2 | 5.1 |
| கூட்டுறவு கிராமிய வங்கிகள் (இ) | 193.4 | 0.7 | 220.0 | 0.7 |
| சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கம் | 0.7 | 0.0 | 0.8 | 0.0 |
| **சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள்** | **369.4** | **1.4** | **328.9** | **1.0** |
| சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் | 35.7 | 0.1 | 1.0 | 0.0 |
| உரிமம்பெற்ற நுண்கடன் கம்பனிகள் | 8.3 | 0.0 | 9.9 | 0.0 |
| முதனிலை வணிகர்கள் | 78.7 | 0.3 | 131.7 | 0.4 |
| பங்குத்தரகர்கள் | 36.5 | 0.1 | 24.8 | 0.1 |
| நம்பிக்கைக் கூறுகள் / நம்பிக்கை கூறு முகாமைத்துவக் கம்பனிகள் | 198.5 | 0.7 | 153.5 | 0.5 |
| சந்தை இடையீட்டாளர்கள் (ஈ) | 11.8 | 0.0 | 8.0 | 0.0 |
| துணிகர மூலதனக் கம்பனிகள் | வி/கி | வி/கி | வி/கி | வி/கி |
| **ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்** | **4,758.2** | **17.9** | **5,292.3** | **16.9** |
| காப்புறுதிக் கம்பனிகள் | 881.8 | 3.3 | 947.3 | 3.0 |
| ஊழியர் சேம நிதியம் | 3,166.1 | 11.9 | 3,459.9 | 11.0 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 419.1 | 1.6 | 468.8 | 1.5 |
| அனுமதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேம நிதியங்கள் | 207.6 | 0.8 | 330.4 | 1.1 |
| அரச பணி சேம நிதியம் | 83.5 | 0.3 | 85.9 | 0.3 |
| **மொத்தம்** | **26,646.3** | **100.0** | **31,379.0** | **100.0** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தரவு இல்லாமையால் கூட்டுறவு கிராமிய வங்கியின் 2022 3ஆம் காலாண்டு இறுதி சொத்துத்தளம் 2022 இறுதியில் உள்ள சொத்துத்தளத்திற்கு சமமாகக் கொள்ளப்பட்டது.
(ஈ) சந்தை இடையீட்டாளர்களாக பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் நீங்கலாக.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
தொழில் திணைக்களம்
ஓய்வுதியத் திணைக்களம்
ஊழியர் நம்பிக்கை நிதியசபை
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
சணச கூட்டமைப்பு
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

அட்டவணை 8.2
வங்கிகள், வங்கிக் கிளைகள் மற்றும் ஏனைய வங்கி பணிநிலையங்களின் பரம்பல்கள்


| வகை | 2021 முடிவில் (அ) | 2022 முடிவில் (ஆ) |
|---|---|---|
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | | |
| **I. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை** | **24** | **24** |
| உள்நாட்டு வங்கிகள் | 13 | 13 |
| வெளிநாட்டு வங்கிகள் | 11 | 11 |
| **II. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிப்பணி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை** | **6,710** | **6,718** |
| கிளைகள்(இ) | 2,917 | 2,924 |
| உள்நாட்டு வங்கிகள் | 2,871 | 2,878 |
| வெளிநாட்டு வங்கிகள் | 46 | 46 |
| மாணவர் சேமிப்பு பிரிவுகள் | 3,793 | 3,794 |
| **III. தன்னியக்க கூற்றுப் பொறிகள்** | **5,972** | **6,204** |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | | |
| **I. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த எண்ணிக்கை** | **6** | **6** |
| தேசிய மட்ட சேமிப்பு வங்கிகள் | 1 | 1 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 2 | 2 |
| ஏனைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 3 | 3 |
| **II. உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிப்பணி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை** | **705** | **706** |
| கிளைகள் (இ) | 705 | 706 |
| தேசிய மட்ட சேமிப்பு வங்கி | 267 | 268 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 64 | 64 |
| ஏனைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 374 | 374 |
| **III. தன்னியக்க கூற்றுப் பொறிகள்** | **466** | **474** |
| **வங்கிக் கிளைகளினதும் ஏனைய பணி நிலையங்களினதும் மொத்த எண்ணிக்கை** | **7,415** | **7,424** |
| **தன்னியக்க கூற்றுப் பொறிகளின் மொத்த எண்ணிக்கை** | **6,438** | **6,678** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) மாணவர் சேமிப்புப் பிரிவுகள் தவிர்ந்த அனைத்து வங்கிப் பணிநிலையங்கள்.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

வரைபடம் 8.1
நிதியியல் துறையின் செயலாற்றம்




8

**வங்கித்தொழில் துறை[1], நிதியியல் தொழில்துறையில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தியதுடன், 2022 இறுதியில் மொத்தச் சொத்துக்களில் 61.9 சதவீதத்திற்கும் வகைகூறியது.** மத்திய வங்கியின் இறுக்கமான நாணயக் கொள்கை நிலை மற்றும் சவால்மிக்க பேரண்ட பொருளாதார நிலைமைகள் என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில், வங்கித்தொழில் துறையின் கொடுகடன் வளர்ச்சி 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. வைப்புக்கள் நிதியிடலின் ஆதிக்கம் பெற்ற மூலமாக தொடர்ந்தும் விளங்கிய வேளையில், நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமை மற்றும் ஏப்பிறல் 2022இல் இருபுடை மற்றும் வர்த்தகக் கடன்களின் பேரிலான வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவு இடைநிறுத்தப்பட்டமை தொடர்பான அரசாங்கத்தின் அறிவித்தல் என்பனவற்றின் விளைவாக 2022இல் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது.

**வியாபார விரிவாக்கம்**

**2022 இறுதியில் வங்கித்தொழில் துறையானது 11 வெளிநாட்டு வங்கிக் கிளைகள் உட்பட 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் 6 உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்கி 30 வங்கிகளைக் கொண்டிருந்தது.** வங்கித்தொழில் துறை, வங்கித்தொழில் பணிகளை அதிகரித்தமையின் மூலமும் வங்கித்தொழில் வலையமைப்பினை விரிவாக்கியதன் மூலமும் பொருளாதாரத்தின் நிதியியல் இடையேற்பாடுகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளித்தது. எனவே, 2022இல் 11 வங்கிக் கிளைகளும் 327 தன்னியக்கக் கூற்று பொறிகளும் நிறுவப்பட்ட வேளையில் 3 வங்கிக் கிளைகளும் 87 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் மூடப்பட்டன. இதன்படி, 2022 இறுதியில் வங்கித்தொழில் கிளைகளின் மொத்த எண்ணிக்கையும் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் முறையே 7,424 இற்கும் 6,678 இற்கும் அதிகரித்தன.

1 வங்கித்தொழில் துறையானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்குகின்றது. மத்திய வங்கி உள்ளடக்கப்படவில்லை.

அட்டவணை 8.3

**வங்கித் தொழில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளடக்கம்**

| விடயம் | 2021 (அ) | | 2022 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2021 (அ) | 2022 (ஆ) |
| **சொத்துக்கள்** | | | | | | |
| கடன்கள் மற்றும் பெறத்தக்கவை | 10,726.7 | 63.8 | 11,337.9 | 58.4 | 14.5 | 5.7 |
| முதலீடுகள் | 4,968.5 | 29.5 | 5,934.3 | 30.6 | 16.4 | 19.4 |
| ஏனையவை (இ) | 1,131.0 | 6.7 | 2,144.3 | 11.0 | 15.0 | 89.6 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வைப்புக்கள் | 12,879.2 | 76.5 | 15,299.1 | 78.8 | 13.3 | 18.8 |
| கடன் பெறுகைகள் | 2,172.9 | 12.9 | 1,872.5 | 9.6 | 27.1 | -13.8 |
| முதலீட்டு நிதிகள் | 1,348.3 | 8.0 | 1,593.4 | 8.2 | 13.1 | 18.2 |
| ஏனையவை | 425.8 | 2.5 | 651.5 | 3.4 | 20.4 | 53.0 |
| **மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | **16,826.2** | **100.0** | **19,416.6** | **100.0** | **15.1** | **15.4** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) காசு மற்றும் வங்கி மீதிகள், வைப்புகள், நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் உள்ளடங்கலாக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**2022 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறை சொத்துத் தள நியதிகளில் தொடர்ந்தும் விரிவடைந்தது.** இவ்வாண்டுப்பகுதியில் துறையின் சொத்துத் தளம் ரூ.2.6 றில்லியனால் அதிகரித்து 2022 இறுதியில் ரூ.19 றில்லியனை விஞ்சியதுடன், 2021இன் இறுதியின் வளர்ச்சியான 15.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 15.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மாச்சு மற்றும் ஏப்பிறல் மாத காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 44.1 சதவீதத்தினால் தேய்வடைந்தமையானது வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களின் வளர்ச்சியில் அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தது. எனினும், மத்திய வங்கியின் இறுக்கமான நாணயக் கொள்கை நிலை 2022 இறுதியில் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் வளர்ச்சி 2021 இறுதியின் 14.5 சதவீதத்திலிருந்து 5.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைய வழிவகுத்தது. அதேவேளை, முதலீடுகளின் வளர்ச்சியானது 2021இன் 16.4 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 19.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. இக்காலப்பகுதியில் முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு மதிப்பிறக்கச் செலவிலான நிதியியல் சொத்துக்களில் ஏற்பட்ட ரூ.1,635.2 பில்லியன் அதிகரிப்பும் இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியிலான நிதியியல் சொத்துக்களின் ரூ.29.9 பில்லியன் அதிகரிப்புமே முக்கிய காரணமாகும்.

**வைப்புக்கள் நிதியிடலின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்குவதுடன் 2022 இறுதியில் மொத்தப் பொறுப்புக்களில் 78.8 சதவீதத்தினைப் பிரதிபலித்த வேளையில் கடன்பாடுகள் மொத்தப் பொறுப்புக்களில் 9.6 சதவீதத்திற்கு வகைகூறின.** தவணை வைப்புக்கள் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்த வேளையில் மொத்த வைப்புக்களில் இவற்றின் பங்கு 2021 இறுதியின் 61.0 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 67.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, 2022 இறுதியில் மொத்த வைப்புக்களில் சேமிப்பு மற்றும் கேள்வி வைப்புக்கள்

அட்டவணை 8.4

**வங்கித்தொழில் துறையின் வைப்புக்களின் உள்ளடக்கம்**

| விடயம் | 2021 (அ) | | 2022 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2021 (அ) | 2022 (ஆ) |
| கேள்வி வைப்புக்கள் | 888.0 | 6.9 | 1,060.0 | 6.9 | 25.9 | 19.4 |
| சேமிப்பு வைப்புக்கள் | 4,011.8 | 31.1 | 3,713.0 | 24.3 | 19.7 | -7.4 |
| தவணை வைப்புக்கள் | 7,860.4 | 61.0 | 10,393.0 | 67.9 | 8.6 | 32.2 |
| ஏனைய வைப்புக்கள் | 118.9 | 0.9 | 133.2 | 0.9 | 80.0 | 12.0 |
| **மொத்த வைப்புக்கள்** | **12,879.2** | **100.0** | **15,299.1** | **100.0** | **13.3** | **18.8** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

சிறப்புக்குறிப்பு 9

## ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற நிதியியல் நெருக்கடியைத் தடுப்பதிலும் வங்கித்தொழில் துறையில் பொதுமக்கள் நம்பிக்கையினை மீளக்கட்டமைப்பதிலும் மத்திய வங்கிகளின் வகிபாகம்

### 1. அறிமுகம்

2021ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தச் சொத்துக்களின் 61.9 சதவீதத்திற்கு வகைகூறிய இலங்கையின் வங்கித்தொழில் துறையானது, நிதியியல் துறையில் ஒரு முக்கியமான வகிபாகத்தைக் கொண்டுள்ளதோடு, நாட்டினுடைய நிதியியல் இடையீட்டேற்பாடுகளில் ஒருங்கிணைந்த பெரும்பங்கை வகிக்கிறது. சமீபகாலத்தில் பன்முக சவால்கள் இருந்தபோதிலும், போதுமான மூலதனத்தாலும் இடர்தாங்கக்கூடிய திரவத்தன்மையாலும் பிரதிபலிக்கப்பட்ட இலங்கையின் வங்கித்துறை தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கும் தன்மையோடுயிருந்தது. இருப்பினும், 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட்-19 பெருந்தொற்றுநோய் சமீபத்தைய பாதகமான பேரண்டப் பொருளியல் அபிவிருத்திகள் ஆகியன உள்ளடங்களான பல்வேறு காரணங்களால் வங்கித்தொழில் துறையில் முன்னெப்போதுமில்லாத மட்டங்களில் ஏற்பட்டுள்ள அழுத்தங்களைக் நோக்குகையில், வலுவான நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பொன்று இருக்கவேண்டியது இன்றியமையாததாகின்றது.

### 2. வங்கியியல் துறையினுடைய உறுதிப்பாட்டின் முக்கியத்துவம் உலகளாவிய நெருக்கடிகளிலிந்து கற்றுக்கொண்ட பாடங்களும்

பொருளாதார வளர்ச்சியினையும் மக்களின் நலனோன்புகையினையும் ஊக்குவிப்பதற்கான வினைத்திறன்மிக்க நிதியியல் இடையேற்பாடுகளை வழங்குவதில் வங்கித்தொழில் துறை இன்றியமையாததாக விளங்குகின்றது. இது பொருளாதார அதிர்வுகளையும் அழுத்தமிக்க சூழ்நிலைகளையும் கொண்ட காலங்களில் மிக முக்கியமானதாகவிருக்கின்றது. எவ்வாறாயினும், வரலாறு முழுவதும் வங்கித்தொழில் துறை அமைப்பில் நம்பிக்கை மீறுவதும், வைப்பாளர்கள் விலகிச்செல்வதும் உலகமுழுவதும் பொருளாதார நடவடிக்கை மீது குறிப்பிடத்தக்க எதிர்மறையான தாக்கத்தினை விளைவித்து, ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற நிதியியல் நெருக்கடிகளுக்கு வழிவகுத்திருக்கிறது. இவ்வாறான ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற நெருக்கடிகளின் பொதுவான காரணங்களாக உயர்வான முடுக்கி, அதிகரிக்கின்ற கொடுகடன், மதிப்பீட்டு தரநியமங்கள் பலவீனமடைதல், ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்தில் குறைபாடுகள், ஆதன மற்றும் ஏனைய சொத்து பணவீக்கம், அரசாங்கத்திற்கான மிதமிஞ்சிய கடன் அளவு, குறைவான மேற்பார்வை, மற்றும் அவ்வப்போது ஏற்படுகின்ற உயர்வான வெளிநாட்டு நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறை ஆகியன பிரதானமாக இனங்காணப்படலாம். கிழக்காசிய நெருக்கடி (1997), உலகளாவிய நிதியியல் நெருக்கடி (2007-2008) மற்றும் ஐரோப்பிய நெருக்கடி (2010) போன்ற பன்னாட்டு உதாரணங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டவாறு ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற நெருக்கடியிலிருந்து விளைகின்ற நிதியியல் இடர்கள் பொதுவாக பல ஆண்டுகளுக்கு நீடித்து பெருமளவில் கணிசமான பொருளாதார சுருக்கங்கங்களையும் உயர்வான இறைசார்ந்த செலவுகளையும் தோற்றுவித்து ஒட்டுமொத்த சமூகத்தினையும் பாதிக்கின்றன.

#### உலகளாவிய நெருக்கடியிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள்

2007-2008 உலகளாவிய நிதியியல் நெருக்கடியானது கடந்த கால நெகிழ்வுகளை ஒத்த பண்புகளை கொண்டிருந்த போதிலும், நேரடியாக பாதித்த நாடுகளையும் தாண்டி எதிர்பாராத விதத்தில் உலகம் முழுவதும் தூர இடங்களுக்கும் துரிதமாக ஊடுகடத்தப்பட்டது. உலகளாவிய நிதியியல் நெருக்கடி விரைவான வேகத்தில் தொற்றியமைக்கான பிரதான காரணம், பரந்தளவான நிதியியல் வலையமைப்புக்கள் மற்றும் பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் இணைப்புக்கள் என்பவற்றுடன்கூடிய முன்னேறிய நாடுகளில் நெருக்கடி தோன்றியமையாகும். உலகளாவிய நிதியியல் நெருக்கடியிலிருந்து தோற்றம்பெற்ற புதிய மற்றும் கடுமையான சவால்கள், புத்தாக்கமிக்க நெருக்கடி முகாமைத்துவக் கருவிகளை அறிமுகப்படுத்துகின்ற அதேவேளை சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்புகளில் இடைவெளிகளையும் பலவீனங்களைப் புரிந்துகொள்வதற்கு உலக முழுவதுமுள்ள மத்திய வங்கிகளுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் வழிவமைத்தது.

மேற்குறித்த பலவீனங்களைத் தீர்க்கும் நோக்குடன், முறிவடைகின்ற நிதியியல் நிறுவனங்களின் ஒழுங்கான முகாமைத்துவத்திற்கு ஆதரவளிக்கும் பொருட்டு இதன் மூலம் நிதியியல் முறைமைக்கு தொற்றுகின்ற தாக்கத்தினையும் உண்மைப் பொருளாதாரத்திற்கான கசிவு தாக்கத்தினையும் தணிப்பதற்கும் வலுவான நிதியியல் பாதுகாப்பு வலையொன்றுடன்கூடிய செயல்திறன்வாய்ந்த நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பொன்று தேவைப்படுகின்றது என உலகளாவிய தலைவர்கள் ஒருமித்து அபிப்பிராயப்பட்டனர். செயல்திறன்வாய்ந்த நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பானது பொதுவாக பின்வரும் தூண்களை உள்ளடக்கும் (பன்னாட்டு நாணய நிதியம், 2020):

(i) நெருக்கடிக்கு முன்கூட்டிய தயார்நிலைக்கான நிறுவனசார் கட்டமைப்பு

(ii) மேற்பார்வையின் முன்கூட்டிய தலையீடு

(iii) அவசரகாலத் திரவத்தன்மை உதவி

(iv) நிதியியல் நிறுவனங்களின் மறுசீரமைப்பு

#### (i) நெருக்கடிக்கு முன்கூட்டிய தயார்படுதலுக்கான நிறுவனசார் கட்டமைப்பு

நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பு செயல்திறன்வாய்ந்ததாக இருக்கும் பொருட்டு, நிதியியல் பாதுகாப்பு வலையின் மைய நிறுவனங்களுக்கு இடையிலான செயல்திறன்வாய்ந்த கொள்கை ஒருங்கிணைப்புடன் கூடிய வலிமையான மற்றும் சுயாதீனமிக்க நிறுவனசார் கட்டமைப்பொன்று இன்றியமையாததாகும். நிதியியல் பாதுகாப்பு வலையின் மைய நிறுவனங்களாக மத்திய வங்கி, நிதியியல் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் முகவராண்மைகள், தீர்மான அதிகாரி மற்றும் நிதி அமைச்சு என்பன இனங்காணப்படக்கூடியது என்பதுடன் எந்தவொரு

8

சூழ்நிலையிலும் நெருக்கடி முகாமைத்துவ பணிகளைத் தயாரித்து, ஒருங்கிணைத்து நிறைவேற்றக்கூடியதாக இருப்பதற்கு இந்நிறுவனங்கள் தெளிவான பொறுப்பாணைமைகளையும் போதுமான சுயாதீனத்தையும் கொண்டிருக்கவேண்டும்.

**(ii) மேற்பார்வையின் முன்கூட்டிய தலையீடு**

வங்கித்தொழில் நிறுவனங்களின் நிதியியல் நிலைமையின் குறைபாடுகளின் எச்சரிக்கை சமிக்ஞைகளை செயலூக்கத்துடன் கண்டுபிடித்து, இதனூடாக அத்தகைய நிறுவனங்களின் நிதியியல் இடர்பாட்டுகளின் நிகழ்தகவையும் செலவுகளையும் குறைப்பதை முன்கூட்டிய மேற்பார்வை நடவடிக்கை இயலச்செய்கின்றது. செயலூக்கமிக்க மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய மேற்பார்வையினை உறுதிசெய்யும் பொருட்டு, போதுமான வளங்கள், வலுவான சட்ட அதிகாரம் மற்றும் பாதுகாப்பு, வலுவான ஆளுகைக் கட்டமைப்புடன்கூடிய தெளிவான பொறுப்பாணை மற்றும் தொழிற்பாட்டு சுயாதீனம் என்பன மேற்பார்வையாளர்களுக்கு வேண்டப்படுகின்றன.

**(iii) மத்திய வங்கியின் மூலம் வழங்கப்படும் அவசரகாலத் திரவத்தன்மை உதவி**

நிறுவனங்களின் கடன்தீராற்றலற்ற தன்மைக்கும் ஒட்டுமொத்தமாக நிதியியல் உறுதிபாட்டின்மைக்குப் பாதிப்பினை ஏற்படுத்துவதற்கும் வழிவகுக்கின்ற ஒரு அல்லது சில நிதியியல் நிறுவனங்களின் தற்காலிக திரவத்தன்மையில்லாத இடர்நேர்வினைத் தணிப்பதற்கு அவசரகால திரவத்தன்மை உதவி மத்திய வங்கிகளை இயலச்செய்கின்றமையினால் நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பில் இன்றியமையாத பாகமொன்றினை இது வகிக்கிறது. அதற்கமைய, நெருக்கடி தயார்நிலைக் கருவியொன்றாக அவசரகால திரவத்தன்மை உதவிக்கான கட்டமைப்புகள் மத்திய வங்கிகளினால் சிறப்பான முறையில் தாபிக்கப்படவேண்டும். எனினும், அவசரகால திரவத்தன்மை உதவியினை வழங்குதல் மத்திய வங்கிகளின் தற்றுணிபில் அமைந்திருக்கவேண்டும். மேலும், அவ்வாறு திரவத்தன்மை வழங்குவது மத்திய வங்கி ஐந்தொகையினைப் பாதுகாக்கின்ற அதேவேளை நெறிமுறை சார்ந்த அபாயங்களைக் குறைக்கின்ற பாதுகாப்புகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்கு முன்னர், சிறந்த பிணையுறுதி இல்லாத வங்கி கடன்தீராற்றலற்றது என்ற ஊகத்துடன் அத்தகைய வங்கிகளுக்கு மாத்திரம் மத்திய வங்கிகள் அவ்வாறான பிணையுறுதிகளை கடனாக வழங்கவேண்டும் என்பது அவசரகால திரவத்தன்மை உதவி பற்றி துணையளிக்கின்ற எண்ணக்கருவாகவிருந்தது. அவசரகால திரவத்தன்மை உதவி கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளை ஏற்படுத்துவதற்கு மத்திய வங்கிகளுக்கு உதவிய உலகளாவிய நிதியியல் நெருக்கடியிலிருந்து கற்றுக்கொண்ட முக்கிய பாடங்கள் பின்வருமாறு தொகுக்கப்படலாம் (பன்னாட்டு நாணய நிதியம் 2020):

(அ) தகைமை - அவசரகால திரவத்தன்மை உதவிக்கு ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற முக்கிய வங்கிகள் மாத்திரமின்றி அனைத்து வங்கிகளும் தகைமை பெற்றதாக இருக்கவேண்டும். சில சந்தர்ப்பங்களில் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணிப்பாதுகாப்பதற்கு ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற வங்கியல்லா நிதியியல் கம்பனிகளுக்கும் அவசரகால திரவத்தன்மை உதவியினை வழங்குவதற்கு இயலுமை இருக்கவேண்டும்.

(ஆ) கடன்தீராற்றல் - கடன்தீராற்றல்மிக்கதும் வளம்பெறக்கூடியவையுமாக மேற்பார்வையாளரால் கருதக்கூடிய நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியின் தற்றுணிபில் அவசரகால திரவத்தன்மை உதவி வழங்கப்படவேண்டும். கடன்தீராற்றல் மற்றும் வளம்பெறக்கூடிய தன்மை மதிப்பீடானது முன்னோக்கிய மற்றும் பின்னோக்கிய நிபுணத்துவ தீர்மானங்களை ஈடுபடுத்தவேண்டும். கடன்தீராற்றலற்ற நிறுவனங்களுக்கு அவசரகால திரவத்தன்மை உதவி வழங்கப்படுகின்ற விடத்தான சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திடமிருந்து நட்டோத்தரவாதம் கோரப்படவேண்டும்.

(இ) பிணையுறுதி - அவசரகால திரவத்தன்மை உதவி வசதிகள், எப்போதும் போதுமானளவு பிணையுறுதியளிக்கப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதுடன் பிணையுறுதிகளாக பலவகையான பொறுப்பளிக்கப்படாத சொத்துகளை ஏற்றுக்கொள்வதற்கு மத்திய வங்கிகள் இயலுமானதாக இருக்கவேண்டும். இணைத்தரப்பினர் தவணை தவறுகின்ற சந்தர்ப்பத்தில் பிணையுறுதியினைத் தீர்ப்பனவுசெய்து, முகாமைசெய்து, தேறல்செய்வதற்கான ஆற்றல்வாய்ந்த செயன்முறையுடன் ஒன்றிணைந்த முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்புகள் உள்ளடங்கலாக அத்தகைய சொத்துக்களை பெறுமதிமதிப்பீடு செய்வதற்கான முறைமைகளும் நடைமுறையில் இருக்கவேண்டும்.

**அவசரகால திரவத்தன்மை உதவி வழங்குவதில் காணப்படும் முக்கிய சவால்கள்** - ஏற்றுக்கொள்ளாத நிலை, அதாவது, சாத்தியமாக பொதுமக்களின் நம்பிக்கை இழப்பு, வெளிநாட்டு நாணயத்தில் அவசரகால திரவத்தன்மை உதவி வழங்குவது பற்றிய கரிசனைகள் மற்றும் தீர்மானத்திற்கு உட்பட்டுள்ள வங்கியொன்றுக்கு அவசரகால திரவத்தன்மை உதவி வழங்குவதல் போன்றன காரணமாக மத்திய வங்கி திரவத்தன்மை உதவியை அணுகுவதற்கு வங்கிகளின் விருப்பமின்மை என்பன மத்திய வங்கிகளால் எதிர்கொள்ளப்படுகின்ற முக்கிய சவால்களாகும்.

**(iv) நிதியியல் நிறுவனங்களின் மறுசீரமைப்பு**

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு பங்கம் ஏற்படுத்தாது நலிவான அல்லது முறிவடைகின்ற வங்கிகளின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் செயல்திறன்வாய்ந்த தீர்மானக்கட்டமைப்பு மிகவும்

8

முக்கியமானது என்ற காரணத்தினால் வலுவான நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பிற்கு அவ்வாறான செயல்திறன்வாய்ந்த தீர்மானக் கட்டமைப்பு மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றது. வங்கித்தொழில் நிறுவனமொன்று கடன்தீராற்றலற்றதாகின்ற சாத்தியமிக்கதாக இனங்காணப்பட்டதுடன் அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளின் கடுமையான மீறுகையிலிருப்பதாக இனங்காணப்பட்டவுடன் பொதுமக்களின் நம்பிக்கையினைப் பேணுகின்ற அதேவேளை பாரிய பொருளாதாரத்திற்கான ஏதேனும் கசிவுத்தாக்கங்களைத் தடுக்கும்பொருட்டு ஆற்றல்வாய்ந்த, தீர்க்கமான மற்றும் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டிய தேவை காணப்படுகின்றது. சர்வதேச ரீதியாக சிறந்த தீர்மான நடத்தைகளில் உள்ளடங்கியுள்ள கோட்பாடுகள் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பேணிக்காக்கின்ற அதேவேளை வைப்பாளர்களின், மற்றும் கடன்கொடுநர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு துரிதமாக செயற்படுவதற்கான அதிகாரங்களையும் கருவிகளையும் அதிகாரிகள் கொண்டுள்ளனர் என்பதை உறுதிசெய்வதை இலக்காகக் கொள்கின்றது.

மிதமிஞ்சிய பணவீக்கம், அதிகரிக்கும் வட்டிவீதம் மற்றும் ஏற்றத்தாழ்வுடனான நிதிச் சந்தைகளால் சுட்டப்படுகின்றவாறு குறிப்பாக கொவிட்-19 பரவத்தொடங்கியதிலிருந்து. உலகப் பொருளாதார நெருக்கடியிலிருந்து பதினைந்து ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட உலக நிதி உறுதிப்பாட்டு இடர்பாடுகள் அதிகரிக்கும் போக்கினையே பிரதிபலிக்கின்றன. ஐரோப்பிய சந்தைகளின் நிச்சயமற்ற தன்மைகள் செயற்றிறன் வாய்ந்த நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பின் அவசியத்தை கோடிகாட்டியபோது கலிபோனிய சிலிக்கன் வலி வங்கி, நியூயோர்க் சிக்நேச்சர் வங்கி போன்றவற்றின் சமீபத்திய முறிவுகள் உலகளாவிய நிதியியல் முறைமைகளில் பாரிய அதிர்வுகளைத் தோற்றுவித்துள்ளது.

## 3. நிதியியல் முறைமை நெருக்கடியைத் தவிர்ப்பதும், இலங்கை வங்கித்தொழிற்றுறை மீதான பொதுமக்கள் நம்பிக்கையை கட்டியெழுப்புதலும்

வரலாற்றிலேயே பாரிய சுகாதார மற்றும் பொருளாதார அனர்த்தத்தை ஏற்படுத்திய கொவிட்-19 உலகளலாவிய நோய்த்தொற்று பரவலுடன் 2020ஆம் ஆண்டிலிருந்து கடந்த 3 வருடங்களாக இலங்கை பல கோணங்களைக் கொண்ட சவால்களுக்கு முகங்கொடுத்தது. பொருளாதார நடவடிக்கைகள் மெதுவாக மீளுகின்றமை அத்துடன் அரசியல் ஸ்த்திரமின்மைகள் மற்றும் பொருளாதாரத்தின் கட்டமைப்புசார் பிரச்சனைகள் என்பவற்றுடன் ஒன்றிணைந்து வெளிநாட்டு ஒதுக்குகள் வீழ்ச்சியடைதல் நாணயப்பெறுமதி இறக்கம், இறைசார்ந்த துறை சமமின்மைகள், உயர்வான பணவீக்கம், அத்தியாவசியப் பொருட்கள் நுகர்வோர் பொருட்கள் மற்றும் மூலப்பொருட்கள் பற்றாக்குறை என்பன உள்ளடங்கலாக அசாதாரண பேரண்டப் பொருளாதார நிலைமைகள் தோன்றுவதற்கு இலங்கையில் நோய்த்தொற்றுக்கு பிந்திய இடையூறுகள் வழிவகுத்தன. இவ்வசாதாரண சூழ்நிலைகள் வங்கித்தொழில் மீது எதிர்பாராத அழுத்த மட்டத்தினைத் தோற்றுவித்து பல்வேறு சவால்களுக்கு இட்டுச்சென்றுள்ளது.

### 3.1 சவால்களுக்கு மத்தியில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பேணுவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் வழிமுறைகள்

கீழ்க்கட்டப்பட்டவாறு சாதாரண சூழ்நிலையின்போது இலங்கை மத்திய வங்கியிடமிருந்து திரவத்தன்மையினைப் பயன்படுத்திக் கொள்வதற்கு உரிமம்பெற்ற வணிக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கு (இதற்குப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனப்படும்) பல வகையான மாற்றுவழிகள் காணப்படுகின்றன.

(அ) துணைநில் கடன்வழங்கல் வசதிகள் - உரிமம்பெற்ற வங்கிகளுக்கான பிணையத் தேவையுள்ள ஓரிரவுக் கடன்கள்

(ஆ) நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிகள் - உரிமம்பெற்ற வணிக வங்கிகளுக்கான பிணையத் தேவையுள்ள நாளுக்குள்ளான கடன்கள்

(இ) தவணை மீள்கொள்வனவு வசதிகள் திறந்த சந்தை நடவடிக்கைகள் ஏலம் ஊடாக உரிமம்பெற்ற வணிக வங்கிகளுக்கு வழங்கப்படும் திரவத்தன்மை

எனினும், இம்மாற்றுவழிகள் கடுமையான பாதகமான பொருளாதார மற்றும் சந்தை அபிவிருத்திகளில் தோற்றம்பெறுகின்ற அசாதாரண சூழ்நிலைகளின்போது வங்கித்தொழில் துறைக்கான போதுமான திரவத்தன்மையினை உறுதிசெய்யதிருக்கலாம்.

### 3.2 இலங்கை மத்திய வங்கியினால் பின்பற்றப்படும் நெருக்கடி முகாமைத்துவக் கருவிகள்

உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவல் தொடங்கியதிலிருந்து இலங்கையில் தொடர்ந்த அண்மைக்கால அசாதாரண பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளுக்கு மத்தியில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாக்கின்ற அதேவேளை நிதியியல் முறைமை மீதான பொதுமக்கள் நம்பிக்கையைப் பாதுகாக்கும் குறிக்கோளுடன் போதிய மட்டங்களுக்கு துறையின் திரவத்தன்மையினை மேம்படுத்துவதன் மூலம் வங்கித்தொழில் துறையின் நெருக்கடிக்கு முன்னரான தயார்நிலையினை வலுப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி மூலம் பல்வேறு வழிமுறைகள் தொடங்கப்பட்டன. ஏனையவற்றுக்கு மத்தியில், இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட முன்கூட்டிய வழிமுறைகளை வங்கித்தொழில் துறைக்கான அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான கட்டமைப்பு வங்கித் தீர்மானக் கட்டமைப்பை வலுப்படுத்தல், நெருக்கடி முகாமைத்துவக் குழுவை நிறுவுதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட மேற்பார்வை அணுகுமுறைகள் என்பன பற்றி இக்கட்டுரை பிரதானமாக விளக்குகின்றது.

### 3.2.1 இறுதிக்கடன் ஈவோன் - அவசரகாலத் திரவத்தன்மை உதவி மீதான கட்டமைப்பு

தற்போதுள்ள நாணயவிதிச் சட்டத்தின் கீழ், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை பேணுதல் எனும் இலங்கை மத்திய வங்கியின் மையக் குறிக்கோளின் கீழ் நிதியியல் முறைமையில் பொதுமக்களின் நம்பிக்கையினை உறுதிசெய்கின்ற அதிஉச்சப் பொறுப்புடமை மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் பின்னணியில், நிதியியல் நிறுவனங்களின் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் ஊக்குவிப்பதனூடாக நிதியியல் முறைமையில் தோன்றக்கூடிய எவையேனும் பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கு இறுதிக்கடன் ஈவோனாகச் செயற்படுதல் இலங்கை மத்திய வங்கியினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள முக்கிய வகிபாகங்களில் ஒன்றாகும்.

இலங்கை வங்கித்தொழில் துறைக்கான இறுதிக்கடன் ஈவோன் என்ற வகையில் ஏதேனும் ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற நிதியியல் பீதியினைத் தோற்றுவிக்கக்கூடிய ஏதேனும் பாதகமான அபிவிருத்திகளுக்கு முன்கூட்டியே நாணய விதிச் சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெறுகின்ற ஏற்புடைய ஏற்பாடுகளை /வழிமுறைகளை செயற்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டு பொறுப்புடையதாகவிருக்கின்றது. அதற்கமைய, நாணய மற்றும் வங்கித்தொழில் உறுதிப்பாடு மீதான ஏதேனும் அச்சுறுத்தலைத் தடுப்பதற்கு நாணய விதிச் சட்டத்தின் 86ஆம் பிரிவின் கீழ் அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீது 2020இல் கட்டமைப்பொன்றினை இலங்கை மத்திய வங்கி நிறுவியது. பொருளாதாரத்திற்கு தொடர்ச்சியான கொடுகடன் வழங்களை உறுதிசெய்வதற்கும் வங்கித்தொழில் நிறுவனங்களின் திரவத்தன்மை நிலையினை வலுப்படுத்தி இதனூடாக நிதியியல் முறைமையின் மீதான பொதுமக்கள் நம்பிக்கையினைப் பேணுவது அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட முக்கிய வெளிவரும் விளைவாகயிருந்தது.

2022இல் இலங்கை மத்திய வங்கியின் அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பானது பரந்தளவிலான விலைமதிப்பீட்டு முறையுடன்கூடிய பிணையுறுதிகள், திரவத்தன்மை மற்றும் கடன்தீராற்றல் மதிப்பீடு மீதான மூலப்பிரமாணம், மேற்பார்வை நடவடிக்கைகள் அத்துடன் கட்டமைப்பு என்பவற்றை நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ள இலங்கை மத்திய வங்கியின் திணைக்களங்கள் மத்தியில் மேம்பட்ட ஒருங்கிணைப்புப் பொறிமுறை என்பவற்றை கூட்டிணைப்பதன் வாயிலாக மேலும் மேம்படுத்தப்பட்டது.

### 3.2.2 கட்டமைப்பின் முக்கிய அம்சங்கள்

(அ) **தகைமையுடைய நிதியியல் நிறுவனங்கள்:** கிடைக்கப்பெறுகின்ற அனைத்து திரவத்தன்மைகளையும் வங்கிகள் பயன்படுத்தியுள்ளவிடத்து, தற்காலிக திரவத்தன்மை இடர்பாடொன்றில் காணப்படுகின்ற அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளும்

(ஆ) **அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பின் வழங்குதல்** இலங்கை மத்திய வங்கியின் தற்றுணிவில் காணப்படும். ஆகையினால், உரிமம்பெற்ற வங்கிகளின் உரிமையாக கருத்திற்கொள்ளப்படாது.

(இ) **நாணயம்:** அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பானது எல்லா நேரங்களிலும் இலங்கை ரூபாவில் மாத்திரம் வழங்கப்படும் என்பதுடன் எவையேனும், சாத்தியமான செலாவணிவீத இடர்நேர்வுகள் நாணய பொருத்தமின்மைகள் மற்றும் அறவீட்டு இடர்நேர்வுகள் என்பவற்றைத் தணிக்கும் பொருட்டு வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்படாது.

(ஈ) **வட்டிவீதம்:** நிலவுகின்ற சந்தை வட்டிவீதங்கள் மற்றும் நாணயக் கொள்கை நிலை என்பவற்றைக் கருத்திற்கொண்டு நாணயச் சபையினால் வட்டிவீதம் நிர்ணயிக்கப்படும்.

(உ) **அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பை வழங்குவதற்கான ஏற்றுக் கொள்ளத்தக்கதான பிணையுறுதிகள்:** இலங்கை அரச பிணையங்கள், காணிகள் மற்றும் கட்டடங்கள் அத்துடன் தெரிவுசெய்யப்பட்ட பிணையுறுதிகளால் பிணையளிக்கப்பட்ட கிடைக்கப்பெறத்தக்க கடன்கள் போன்றவற்றைக் கொண்ட பலவகையான பிணையுறுதிகளை உள்ளடக்குகின்றது.

(ஊ) **கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பு கோரிக்கையை மதிப்பிடுதல்:** இலங்கை மத்திய வங்கியின் ஐந்தொகை மீதான ஏதேனும் பாதகமான தாக்கத்தினை தடுக்கும் நோக்குடன் கடன்தீராற்றல்மிக்கதாக கருதப்படுகின்ற உரிமம்பெற்ற வங்கிக்கு மாத்திரம் கடன்கள் மற்றும் முற்பணங்கள் வழங்கப்படும். அவசரகால கடன் உதவி கோரும் வங்கிகள் போதுமான பிணையங்களைக் கொண்டிராத பட்சத்தில் இலங்கை மத்திய வங்கிக்கு இலங்கை அரசாங்கத்தால் வெளிப்படையாக வழங்கப்படும் உத்தரவாதத்தோடு, விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் ஏதேனும் ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற இடர்நேர்வுகளைக் தணிப்பதற்கு அசாதாரண சூழ்நிலைகளின் கீழ் எதிர்காலத்தில் கடன்தீராற்றதாகவிருப்பதனை அல்லது எதிர்காலத்தில் கடன்தீராற்றதாக வரக்கூடிய சாத்தியத்தினை மதிப்பிட்டு வங்கியொன்றிற்கு கடன்கள் மற்றும் முற்பணங்கள் வசதி வழங்கப்படலாம்.

(ஏ) **கடன்கள் மற்றும் முற்பணங்கள்** வசதியைப் பெற்றுக்கொள்கின்ற வங்கிகள் மீதான மேற்பார்வை நடவடிக்கைகள் கடன்கள் மற்றும் முற்பணங்கள் வசதியைப் பெற்றுக்கொள்கின்ற வங்கிகள், இலங்கை மத்திய வங்கியின் தீவிரமான மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுகின்ற அதேவேளை கடன்வழங்கல் சொத்துப்பட்டியலை விரிவுபடுததல் மற்றும் தற்றுணிவுக் கொடுப்பனவுகள் என்பன தொடர்பில் அத்தகைய வங்கிகள் மீது பல்வேறு மேற்பார்வை கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

### 3.2.3 நிதியியல் நிறுவனங்களின் மறுசீரமைப்புக் கட்டமைப்பை வலுப்படுத்தல்

வங்கித்தொழில் துறைக்கான சவால்மிக்கத் தோற்றப்பாட்டினையும் நிதியியல் துறை பாதுகாப்பு வலை வழிமுறைகளை வலிமைப்படுத்துவதற்கான தேவையினையும் பரிசீலனையில் கொண்டு நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பின் கீழ் அவசர முன்னுரிமையொன்றாக உரிமம்பெற்ற வங்கிகளின் தீர்மானக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதை இலங்கை மத்திய வங்கி இனங்கண்டுள்ளது. அதன் பிரகாரம் உரிமம்பெற்ற வங்கிகளின் தீர்மானம், வைப்பு மற்றும் முடிவுறுத்தல் தொடர்பிலான ஏற்பாடுகளை உள்ளடக்குவதன் மூலம் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திற்கான துணை நிரப்பியாக வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினை வரைவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டன.

வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை வரைகின்றபோது நிதியியல் உறுதிப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்கான செயல்திறன்வாய்ந்த தீர்மானக் கட்டமைப்புகளின் முக்கிய கூறுகளையும் வைப்புக் காப்புறுதியாளர்களுக்கான பன்னாட்டு அமைப்பினால் வழங்கப்பட்ட செயல்திறன்வாய்ந்த வைப்புக் காப்புறுதி முறைமைகளுக்கான மையக் கோட்பாடுகளையும் இலங்கை மத்திய வங்கி கருத்திற்கொண்டது. முன்மொழியப்பட்ட வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை 2023 காலப்பகுதியில் இயற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3.2.4 நெருக்கடி முகாமைத்துவக் குழுவொன்றைத் தாபித்தல்

தற்போது இலங்கையில் எதிர்பாராத மட்டத்தில் காணப்படும் நிதியியல் மற்றும் பொருளாதார இடர்பாடுகள் நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவம் மீதான தகைமைவாய்ந்த அதிகாரிகளுக்கு இடையில் கொள்கை ஒருங்கிணைப்பினை வலுப்படுத்துவதற்கான அவசரத் தேவையினை தோற்றுவித்துள்ளன. நெருக்கடி முகாமைத்துவத்திற்கு நிறுவனசார் கட்டமைப்பொன்று இல்லாமை ஒருங்கிணைப்பு தோல்வியடையும் இடர்நேர்வினைக் குறைப்பதற்கும் நிதியியல் நெருக்கடி தாக்கத்தினைக் குறைப்பதற்கும் நெருக்கடி முன்கூட்டிய தயார்நிலைமீது கவனம் செலுத்துவதற்கான இலங்கை மத்திய வங்கிக்கும் நிதியமைச்சிற்கும் இடையிலான கொள்கைசார்ந்த ஒருங்கிணைப்பிற்கான நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவொன்றினை ஏற்படுத்துவதற்கு தூண்டியுள்ளது. முன்மொழியப்பட்ட நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவானது நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவம் மீதான தொழில்நுட்பக்குழுவொன்றினால் வழங்கப்படும் உதவியினைப் பெற்றுக்கொள்ளும் என்பதுடன் நெருக்கடியான மற்றும் நெருக்கடியில்லாத காலங்கள் இரண்டிலும் தொழிற்படும். நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழு ஆளுநரைத் தலைவராகவும் நாணயச் சபை உறுப்பினரொருவர், நிதியமைச்சின் செயலாளர், நிதியமைச்சின் பிரதிச் செயலாளர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்டது.

### 3.2.5 இலங்கை மத்திய வங்கியினால் பின்பற்றப்படுகின்ற மேம்படுத்தப்பட்ட மேற்பார்வை அணுகுமுறைகள்

வங்கித்தொழில் துறை மீது அண்மைக்கால பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தின் காரணமாக வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை மற்றும் மூலதன நிலைமைகள் தொடர்பில் நாணயச் சபைக்கு அறிக்கையிடுகின்ற அதேவேளை முன்மதிமிக்க தேவைப்பாடுகள் மீதான உரிமம்பெற்ற வங்கிகளின் முனைப்பான கண்காணித்தலையும் மேற்பார்வையையும் தீவிரப்படுத்துவதை அவ்வப்போது மேம்படுத்துகின்றது. நிதிக்குறிக்காட்டிகளை முனைப்புடன் கண்காணித்தல், அடையாளப்படுத்தப்பட்ட வங்கித்தொழில் செயற்பாடுகளுடைய கருத்தாய்வுகளை மேற்கொள்ளல், திரவத்தன்மை மற்றும் மூலதன நிலைமைகள் தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அதிகாரிகளோடும் பிரதான முகாமைத்துவப் பணியாளர்களோடும் கிரமமான சந்திப்புக்களை மேற்கொள்ளல் போன்றன தீவிரப்படுத்தப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளுள் அடங்குகின்றன. மேலும், தனிப்பட்ட வங்கிகளின் நிலைப்பாடுகள் மற்றும் நெருக்கடிக்கான அவற்றின் தயார்நிலைமைகளை நன்றாக அறிந்துகொள்வதற்காக உரிமம்பெற்ற வங்கிகளின் இயக்குநர் சபைகளுடனும் முதன்மை நிறைவேற்றுப் பணிப்பாளர்களுடனும் நாணயச் சபை தொடர்ச்சியான சந்திப்புக்களை நடாத்தியது.

### 3.2.6 தொடர்பாடல் தந்திரோபாயம்:

வங்கித்தொழில் துறையில் பொதுமக்களின் நம்பிக்கைளை உறுதிப்படுத்தலை இலக்காகக் கொண்டு தற்போதுள்ள தொடர்பாடல் தந்திரோபாயமானது நெருக்கடித் தயார்நிலைக்கான பரந்துபட்ட விடயங்களை உள்ளடக்கியதாக விரிவாக்கப்படுகின்றது.

**முன்னோக்கிய பாதை:** நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினையும் பொதுமக்கள் நம்பிக்கையினையும் பாதுகாக்கும் நோக்குடன் முன்மொழியப்பட்ட வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை தொழிற்படுத்தி) உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அவசரகால கடன் மற்றும் முற்பணங்கள் வழங்குவதற்கான தயார்நிலையினை உறுதிப்படுத்துவதை மேலும் வலுப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி முனைகின்றது.

**உசாத்துணைகள்:**


1. International Monetary Fund. (2020). Managing Systemic Banking Crises - New Lessons and Lessons Relearned. Departmental Paper No. 2020/003. International Monetary Fund, Washington D.C.

முறையே 24.3 சதவீதத்திற்கும் 6.9 சதவீதத்திற்கும் வகைகூறின. இதற்கிணங்க, நடைமுறை மற்றும் சேமிப்பு கணக்கு விகிதம் 2021இன் 38.0 சதவீதத்திலிருந்து 2022இல் 31.2 சதவீதத்திற்கு குறைவடைந்தது. வங்கித்தொழில் துறையின் மொத்தக் கடன்பாடுகள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் காணப்பட்ட ரூ.462.8 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.300.4 பில்லியனால் வீழ்ச்சியடைந்து 13.8 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. 2021இல் இது 27.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியாகக் காணப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு, 55.2 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்த வெளிநாட்டுக் கடன்பாடுகள் முக்கிய காரணமாக விளங்கி நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமையின் தாக்கத்தினைப் பிரதிபலித்த வேளையில் ரூபாக் கடன்பாடுகள் ரூ.171.5 பில்லியனால் குறைவடைந்து, 2022 காலப்பகுதியில் 11.5 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்தது.

**சவால்மிக்க வியாபாரச் சூழலின் காரணமாக ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் ரூ.26.3 பில்லியனால் வீழ்ச்சியடைந்து, 2021இன் 2.7 சதவீத சுருக்கமான ரூ.131.5 பில்லியன் கொண்ட குறைப்புடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டில் 0.6 சதவீதம் கொண்ட சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தன.** ஏற்றுக்கொள்ளல்கள், ஆவண ரீதியான கொடுகடன், வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் என்பனவற்றில் முறையே ரூ.318.3 பில்லியன், ரூ.204.2 பில்லியன், ரூ.172.4 பில்லியன் மற்றும் ரூ.171.7 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டன. அதேவேளை, எடுப்பனவு செய்யப்படாத கொடுகடன் தொடர்கள், உத்தரவாதங்கள் மற்றும் முறிகள் 2022 காலப்பகுதியில் முறையே ரூ.470.9 பில்லியன், ரூ.122.6 பில்லியன் கொண்ட அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.

வரைபடம் 8.2

வங்கித்தொழில் துறையின் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் - (2022 இறுதியில் உள்ளவாறு)




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


## வங்கித்தொழில் துறையின் இடர்நேர்வுகள்

**கொடுகடன் இடர்நேர்வு**

**2022ஆம் ஆண்டுப்பகுதியில் தொடர்ச்சியாக காணப்பட்ட சாதகமற்ற வியாபார நிலைமைகளின் காரணமாக, குறிப்பிட்ட துறைகளிலுள்ள பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்கும் கடன் மீள்கொடுப்பனவுகள் மீது படுகடன் சட்ட இசைவுத்தாமதங்களும் சலுகைகளும் நீடிக்கப்பட்டன.** இதன்படி, கடன்களையும் பெறத்தக்கவைகளையும் செயற்படா வகைகளுக்குள் வகைப்படுத்துவது சட்ட இசைவுத்தாமதம்/ சலுகைக் காலப்பகுதியில் முடக்கப்பட்டிருந்ததுடன், சட்ட இசைவுத்தாமதம்/ சலுகைகள் நிறுத்தப்பட்டதனைத் தொடர்ந்து வழமையான வகைப்படுத்தல் விதிகள் பிரயோகிக்கப்பட்டன. எனினும், வங்கிகள் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களை மதிப்பிடுகின்ற நோக்கங்களுக்காக இடர்நேர்வுகள் அதிகரித்துள்ள துறைகளை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்தன. சட்ட இசைவுத்தாமதத்தின் கீழ், கொடுகடன் வசதிகளை வகைப்படுத்துவது முடக்கப்பட்டுள்ள போதும், கட்டம் 3 கடன்களினால் (எடுப்பனவு செய்யப்படாத தொகைகள் உட்பட) எடுத்துக்காட்டப்பட்டவாறு செயற்படாக் கடன்கள் 2021ஆம் ஆண்டுப்பகுதியின் ரூ.20.1 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் ரூ.447.3 பில்லியனால் அதிகரித்து 53.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்து, 2022 இறுதியில் ரூ.1.3 றில்லியனை அடைந்தது.


**மொத்தக் கடன்களுக்கான கட்டம் 3 கடன்களினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு (எடுப்பனவு செய்யப்படாத தொகைகள் உட்பட) செயற்படாக் கடன் விகிதம் 2021 இறுதியின் 7.6 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 11.3 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு கட்டம் 3 கடன்களில் ஏற்பட்ட உயர் வளர்ச்சியும் கொடுகடனில் ஏற்பட்ட குறைந்த வளர்ச்சியுமே காரணமாகும்.** அதேவேளை, மொத்த பெறுமதி இழப்பு இக்காலப்பகுதியில் 60.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் 2022 இறுதியில் ரூ.909 பில்லியனை அடைந்தது.

வரைபடம் 8.3
வங்கித்தொழில் துறையின் கட்டம் 3 கடன்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.4
வங்கித்தொழில் துறையின் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளுக்கான பழுதுறல்




*மூலம்:*இலங்கை மத்திய வங்கி

**வங்கித்தொழில் துறையின் மொத்தக் கடன் சொத்துப்பட்டியலில் 68.2 சதவீதமான கடன்கள் நுகர்வு, கட்டடவாக்கம், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், தயாரிப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகிய 5 துறைகளில் குவிந்து காணப்பட்டன.** போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், சுற்றுலா, கட்டடவாக்கம், தயாரிப்பு, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், கலைகள், பொழுதுபோக்கு மற்றும் களியாட்டம் மற்றும் கல்வித் துறைகளின் மொத்தக் கடன்களுக்கான கட்டம் 3 கடன்களின் விகிதம் (எடுப்பனவு செய்யப்படாத தொகை நீங்கலாக) 2022 இறுதியில் மொத்த வங்கித்தொழில் துறையின் சராசரியான 11.1 சதவீதத்திலும் பார்க்க உயர்வானதாக இருந்தது. மொத்தக் கடன்களுக்கான கட்டம் 3 கடன்கள் குறிப்பிட்ட சில துறைகளில் உயர்ந்தளவில் பதிவுசெய்யப்பட்டமையோடு இத்துறைகளில் வங்கித்தொழில் துறையின் உயர்ந்த வெளிப்படுத்துகைகளை எடுத்துக்காட்டுவதனால் வங்கிகள், இத்துறைகள் தொடர்பிலான வெளிப்படுத்துகைகளுக்காக, உள்ளக ரீதியாக மிகக் கடுமையான கொடுகடன் இடர்நேர்வு தணிப்பு பொறிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

### சந்தை இடர்நேர்வு

**வட்டி வீத உணர்திறன் விகிதம்[2] 2021 இறுதியின் 79.6 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 76.3 சதவீதத்திற்கு குறைவடைந்தமையின் மூலம் வட்டி வீத இடர்நேர்வுகளுக்கான வெளிப்படுத்துகை 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் அதிகரித்தது.** 2022 காலப்பகுதியில் இலாபம் மற்றும் நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம் ரூ.11.5 பில்லியனாக விளங்கியதுடன் இது 2021 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.2.4 பில்லியனிலும் பார்க்க உயர்வானதாகும். இதற்கு, இவ்வாண்டுப்பகுதியில் நிலவிய அரச பிணையங்கள் மீதான உயர் விளைவுகளின் விளைவாக, 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் அரச பிணையங்களை நோக்கி கூடுதலான நிதியங்கள் திசைதிருப்பப்பட்டமையே காரணமாகும்.

**வங்கித்தொழில் துறையின் பங்குரிமை இடர்நேர்வு 2022ஆம் ஆண்டு முழுவதும் மிகக் குறைவாகவே காணப்பட்டது.** இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதி மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய ஏனைய வருமான சொத்துப்பட்டியலூடான சந்தைப் பெறுமதியின் கீழும் பட்டியலிடப்பட்ட பங்குரிமைகள் 2022 இறுதியில் முறையே ரூ.7.4 பில்லியனாகவும் ரூ.2.2 பில்லியனாகவும் விளங்கின. மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டிலில் பங்குரிமை முதலீடுகளின் குறைந்த பங்கு, பங்குரிமை விலைத் தளம்பல்கள் காரணமாக வங்கித்தொழில் துறைக்கு ஏற்படக்கூடிய இடர்நேர்வுகள் குறைவாக இருக்கும் என்பதனை உறுதிப்படுத்தியது.

**வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை 2021 இறுதியின் ஐ.அ.டொலர் 133.2 மில்லியன் கொண்ட நீண்ட நிலைமையுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 659.4 மில்லியன் கொண்ட நீண்ட நிலைமைக்கு அதிகரித்தது.** 2022 காலப்பகுதியில் ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களில் ஏற்பட்ட உயர்ந்தளவிலான வீழ்ச்சி தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகையின் நீண்ட நிலைமை அதிகரிப்பதற்குப் பங்களித்தது. ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் வங்கிகளுடனான கடன்கள் மற்றும் வைப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். இதன்படி, வங்கிகளின் ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் சதவீதமாக தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை 2022 இறுதியில் 4.7 சதவீதமாகக் காணப்பட்டது. வங்கித்தொழில் துறை 2022 காலப்பகுதியில் தேறிய வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீட்டு இலாபமாக, 2021 காலப்பகுதியின் ரூ.26.3 பில்லியன் கொண்ட இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூ.28.1 பில்லியனைப் பதிவுசெய்தது.

2 12 மாதங்களுக்கும் குறைவான முதிர்ச்சிகளுடன் கூடிய வட்டி உழைக்கும் பொறுப்புக்களின் பங்காக வட்டி உழைக்கின்ற சொத்துக்களின் விகிதம் கணிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 8.5
வங்கித்தொழில் துறையின் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் துறைசார் உள்ளடக்கம்

| துறைகள் | தொகை ரூ.பில் (அ) | மொத்தக் கடன்களின் பங்கு (%) | மொத்தக் கடன்களுக்கான கட்டம் 3 கடன்கள் (%) |
|---|---|---|---|
| நுகர்வு | 1,864.4 | 16.4 | 4.7 |
| கட்டடவாக்கம் | 1,795.5 | 15.8 | 16.1 |
| மொத்த மற்றும் சில்லறை வாணிபம் | 1,716.3 | 15.1 | 12.8 |
| தயாரிப்பு | 1,243.9 | 11.0 | 14.7 |
| உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் | 1,115.3 | 9.8 | 4.8 |
| வேளாண்மை, காடாக்கம் மற்றும் மீன்பிடி | 920.3 | 8.1 | 11.8 |
| வெளிநாட்டு நிறுவனங்களுக்கான கடன் வழங்கல் | 593.4 | 5.2 | 6.1 |
| சுற்றுலா | 525.7 | 4.6 | 23.4 |
| நிதியியல் சேவைகள் | 458.9 | 4.0 | 5.5 |
| சுகாதார நலன், சமூக சேவைகள் மற்றும் துணைச் சேவைகள் | 400.2 | 3.5 | 7.4 |
| போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் | 302.7 | 2.7 | 26.1 |
| தொழில்சார், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செற்பாடுகள் | 133.2 | 1.2 | 7.0 |
| நிதி அமைச்சுக்கான கடன் வழங்கல்கள் | 109.2 | 1.0 | - |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் சேவைகள் | 81.0 | 0.7 | 10.9 |
| கல்வி | 65.1 | 0.6 | 12.5 |
| கலைகள், பொழுதுபோக்கு மற்றும் மனமகிழ்வு | 12.8 | 0.1 | 12.7 |
| மொத்தக் கடன்கள் | 11,337.9 | 100.0 | 11.1 |


(அ) தற்காலிகமானது *மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## திரவத்தன்மை இடர்நேர்வு

**2022 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறை திரவத்தன்மையின் மீது கடுமையான அழுத்தங்களைக் அனுபவித்தது.** வங்கித்தொழில் துறையின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் குறைந்தபட்சத் தேவைப்பாடான 20 சதவீதத்திற்கும் மேலாக நியதி திரவத்தன்மைச் சொத்து விகிதத்தினைப் பேணிய போதும் இது 2021 இறுதியில் காணப்பட்ட 33.8 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 29.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டுப்பகுதியில், குறிப்பிட்ட சில உள்நாட்டு வங்கிகள் அவர்களது நாளாந்தத் திரவத்தன்மையினை முகாமைப்படுத்துவதற்கு மத்திய வங்கியினால் வழங்கப்படும் துணைநில் வசதிகளின் மீது பெருமளவிற்கு தங்கியிருந்தன. வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கான கொடுகடன் விகிதம் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு 2022 காலப்பகுதியில் கொடுகடனில் ஏற்பட்ட குறைந்த வளர்ச்சி காரணமாக அமைந்த வேளையில், மொத்த சொத்துக்களுக்கான திரவச் சொத்துக்களினதும் வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதமும் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.

**2022இன் இறுதியில் வங்கித்தொழில் துறையின் ரூபா மற்றும் அனைத்து நாணய திரவத்தன்மைக் காப்பு விகிதம் முறையே 237.5 சதவீதமாகவும் 191.2 சதவீதமாகவும் விளங்கி குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடான**


வரைபடம் 8.5
வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை விகிதங்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**90 சதவீதத்தினைவிட மிக உயர்வாகக் காணப்பட்டது.** திரவத்தன்மை காப்பு விகிதம் என்பது பிரச்சனைகளேதுமற்ற உயர்தர திரவச் சொத்துக்களின் இருப்பாக விளங்குவதுடன், இது திரவத்தன்மை அழுத்த சூழ்நிலையின் கீழ் 30 நாட்கள் காலப்பகுதிக்கான வங்கிகளின் திரவத்தன்மை தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இரண்டாந்தரச் சந்தையில் இலகுவாகவும் உடனடியாகவும் மாற்றப்படத்தக்கதாகும். மேலும், போதுமான உறுதிப்பாட்டு நிதியியல் மூலங்களைப் பேணுமாறு வங்கிகளைத் தேவைப்படுத்துகின்ற, 2019இல் அறிமுகப்படுத்தப்பட்ட தேறிய உறுதிப்பாட்டு நிதியிடல் விகிதம் 2022 இறுதியில் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடான 90 சதவீதத்திற்கு மிக மேலே 140.8 சதவீதமாக விளங்கியது. 2022 இறுதியில் மொத்த திரவத்தன்மைச் சொத்துக்கள் ரூ.5.3 றில்லியனாக விளங்கியதுடன் அரச பிணையங்களில் இதன் முதலீடுகள் 62.9 சதவீதமாகக் காணப்பட்டது. முதிர்ச்சி இடைவெளியினைக் கண்காணிப்பதற்கான புதிய பொறிமுறையொன்று 2022இன் ஆரம்பத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, 12 மாத காலப்பகுதிக்கும் குறைவான முதிர்ச்சிக் கூடைகளுக்கான வங்கித்தொழில் துறையின் ஒன்றுசேர்ந்த வெளிப்பாய்ச்சல்களின் சதவீதமாக ஒன்றுசேர்ந்த முதிர்ச்சி இடைவெளி உயர்ந்த

வரைபடம் 8.6
திரண்ட வெளிப்பாய்ச்சல்களின் சதவீதமாக திரண்ட முதிர்ச்சி இடைவெளி




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.6
வங்கித்தொழில் துறையின் திரவச் சொத்துக்களின் உள்ளடக்கம்

| விடயம் | 2021 (அ) | | 2022 (ஆ) | | மாற்றம் (ரூ.பில்) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2021 (அ) | 2022 (ஆ) |
| திறைசேரி உண்டியல்கள் | 1,040.6 | 20.8 | 982.6 | 18.5 | -109.3 | -58.0 |
| திறைசேரி முறிகள் | 2,142.3 | 42.9 | 1,887.8 | 35.6 | 457.1 | -254.5 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 577.0 | 11.5 | 466.2 | 8.8 | -78.8 | -110.9 |
| காசு | 231.8 | 4.6 | 273.3 | 5.2 | 28.7 | 41.6 |
| அழைப்புப் பணம் | 177.2 | 3.5 | 385.5 | 7.3 | -160.5 | 208.4 |
| வெளிநாட்டிலுள்ள வங்கிகளுடனான மீதிகள் | 538.9 | 10.8 | 1,144.4 | 21.6 | 69.0 | 605.5 |
| ஏனையவை | 290.3 | 5.8 | 161.6 | 3.0 | -203.3 | -128.7 |
| **மொத்த திரவச் சொத்துக்கள்** | **4,998.0** | **100.0** | **5,301.4** | **100.0** | **2.9** | **303.4** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


பெறுமதிகளை எடுத்துக்காட்டியமையானது நீண்டகாலச் சொத்துக்கள் குறுங்கால நிதியிடல் சாதனங்களின் மூலம் நிதியிடப்பட்டமையினை எடுத்துக்காட்டியது. வங்கிகள் குறைந்தபட்ச திரவத்தன்மைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யக்கூடியனவாக இருந்த போதும் முதிர்ச்சி இடைவெளியின் மிகையான விரிவு திரவத்தன்மை இடர்நேர்வு அதிகரிப்பதற்கு வழிவகுக்கலாம்.

## இலாபத்தன்மை மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை

**இவ்வாண்டுக் காலப்பகுதியில் இலாபத்தன்மை குறைவடைந்து போனமைக்கு பெறுமதி இழப்பில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.** வங்கித்தொழில் துறையின் வட்டி வருமானம் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் வட்டிச் செலவினங்கள் 106.2 சதவீதத்தினால் அதிகரித்தமையுடன் ஒப்பிடுகையில் 74.7 சதவீதத்தினால் அதிகரித்து தேறிய வட்டி வருமானத்தில் 37.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைத் தோற்றுவித்தது. இதன் விளைவாக தேறிய வட்டி இலாபம் 2021 இறுதியின் 3.5 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 4.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2022 காலப்பகுதியில் தேறிய வட்டி வருமானம் ரூ.207.7 பில்லியனால் அதிகரித்த வேளையில் வட்டியல்லா வருமானம் ரூ.124.1 பில்லியனால் அதிகரித்தமைக்கு 2022இல் உயர்ந்த கட்டண மற்றும் தரகு வருமானங்கள் முக்கிய காரணங்களாக அமைந்தன. வட்டியல்லா செலவினங்கள் ரூ.59.1 பில்லியனால் அதிகரித்தமைக்கு முக்கிய காரணம் அலுவலர் செலவு ரூ.26.8 பில்லியனால் அதிகரித்தமையாக விளங்கிய வேளையில் கடன்களுக்கான பெறுமதி இழப்புக்களும் ஏனைய இழப்புக்களும் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.298.5 பில்லியனால் அதிகரித்தன. இதன் விளைவாக ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடலின்படி கூட்டாண்மை வரிக்கு முன்னரான இலாபம் 2022இல் ரூ.192.2 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இது, முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட இலாப மட்டத்திலும் பார்க்க ரூ.35.3 பில்லியன் குறைவானதாகும்.

**2022 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் ரூ.150.2 பில்லியனாக விளங்கியதுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 12.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.** வங்கிகளின் நிலையான வருமான சொத்துப்பட்டியல் வட்டி வீத அசைவுகளால் சாத்தியமான நட்டங்கள், முதலீடுகள் அனைத்தையுமுள்ளடக்கிய ஏனைய வருமான சொத்துப்பட்டியலிலிருந்து மதிப்பிறக்கச் செலவிலான சொத்துப்பட்டியலுக்கு கணக்கீட்டு நெகிழ்ச்சித்தன்மை நியதிகளில் ஒருமுறை மறுவகைப்படுத்தப்பட்டமையின் மூலம் ஓரளவு தணிக்கப்பட்டது. இலாபத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி சொத்துக்கள் மீதான வருவாயில் - வரிக்கு முன்னர் பிரதிபலிக்கப்பட்டதுடன் இது 2021 இறுதியின் 1.4 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 1.0 சதவீதத்திற்கு குறைவடைந்த வேளையில் பங்குரிமை மீதான வருவாய் - வரிக்குப் பின்னர் 2021இன் 13.4 சதவீதத்திலிருந்து 2022இல் 10.2 சதவீதத்திற்கு குறைவடைந்தது. மேலும், வினைத்திறன் விகிதம் 2021இன் 38.0 சதவீதத்திலிருந்து 2022இல் 31.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு தேறிய வட்டி வருமானம் மற்றும் வட்டியல்லா வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.

வரைபடம் 8.7
வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை விகிதங்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.7
வங்கித்தொழில் துறையின் இலாபம்

| விடயம் | 2021 (அ) | | 2022 (ஆ) | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.பில்) | சராசரி சொத்தின் % ஆக | தொகை (ரூ.பில்) | சராசரி சொத்தின் % ஆக |
| **தேறிய வட்டி வருமானம்** | **549.9** | **3.5** | **757.6** | **4.0** |
| வட்டி வருமானம் | 1,193.8 | 7.5 | 2,085.2 | 11.0 |
| வட்டிச் செலவினம் | 643.9 | 4.1 | 1,327.6 | 7.0 |
| **வட்டியல்லா வருமானம்** | **152.9** | **1.0** | **2,77.0** | **1.5** |
| தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் | 88.6 | 0.6 | 127.5 | 0.7 |
| **வட்டியல்லா செலவினம்** | **266.8** | **1.7** | **325.9** | **1.7** |
| ஊழியர் செலவுகள் | 147.0 | 0.9 | 173.8 | 0.9 |
| **கடன் இழப்பீட்டு ஏற்பாடுகள்** | **157.6** | **1.0** | **456.1** | **2.4** |
| **வரிக்கு முன்னரான இலாபம் (பெறுமதி சேர் வரிக்குப் பின்னரான)** | **227.5** | **1.4** | **192.2** | **1.0** |
| **வரிக்கு பின்னரான இலாபம்** | **172.1** | **1.1** | **150.2** | **0.8** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


அட்டவணை 8.8
வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் உள்ளடக்கம்

| விடயம் | தொகை (ரூ.பில்) | | உள்ளடக்கம் (%) | |
|---|---|---|---|---|
| | 2021 (அ) | 2022 (ஆ) | 2021 (அ) | 2022 (ஆ) |
| **அடுக்கு I மூலதனம்** | **1,083.8** | **1,152.0** | **100.0** | **100.0** |
| பங்கு மூலதனம் | 352.1 | 366.7 | 32.5 | 31.8 |
| நியதி ஒதுக்கு நிதிகள் | 66.7 | 74.3 | 6.2 | 6.4 |
| பிடித்து வைத்திருக்கப்பட்ட இலாபம் | 480.5 | 544.5 | 44.3 | 47.3 |
| பொது மற்றும் ஏனைய ஒதுக்குகள் | 250.5 | 295.2 | 23.1 | 25.6 |
| ஏனையவை | 21.6 | 67.2 | 2.0 | 5.8 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள் | -87.5 | -195.9 | -8.1 | -16.9 |
| **அடுக்கு II மூலதனம்** | **279.8** | **278.0** | **100.0** | **100.0** |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் | 35.3 | 35.4 | 12.6 | 12.7 |
| கீழ்மட்ட தவணை படுகடன் | 160.2 | 135.4 | 57.2 | 48.7 |
| பொது ஏற்பாடுகள் மற்றும் ஏனையவை | 84.7 | 107.3 | 30.3 | 38.6 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள் | -0.4 | -0.2 | -0.1 | -0.1 |
| **மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தளம்** | **1,363.6** | **1,429.9** | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**2022 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறை மூலதனத் தேவைப்பாடுகளுடன் பெருமளவிற்கு இணங்கியொழுகுவதாகக் காணப்பட்டது.** எனினும், தற்போது நிலவுகின்ற பேரண்டப் பொருளாதார நிலைமையில் புதிய மூலதனங்களைத் திரட்டுவதில் காணப்படும் சவால்களைப் பரிசீலனையில் கொண்டு உள்நாட்டு ரீதியாக கூட்டிணைக்கப்பட்டுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான உயர்த்தப்பட்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடான ரூ.20.0 பில்லியனையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான உயர்த்தப்பட்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடான ரூ.7.5 பில்லியனையும் பூர்த்திசெய்வதற்கான கால அவகாசம் 2023 திசெம்பர் வரை நீடிக்கப்பட்டது. சவால் நிறைந்த வியாபார நிலைமைகளிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளினால் ஏற்படக்கூடிய இழப்புக்களை ஈர்த்துக் கொள்ளக்கூடிய உயர்தரத்திலான மூலதனத்தினைத் திரட்டுவதற்கு வங்கிகள் ஊக்குவிக்கப்பட்டன. இதன் விளைவாக, வங்கிகள் 2022 ஆண்டுப்பகுதியில் இலாபத்தினைப் பிடித்துவைத்துக் கொண்டதனூடாகவும் (ரூ.64.0 பில்லியன்) ஒதுக்குகளை அதிகரித்துக் கொண்டதனூடாகவும் (ரூ.44.7 பில்லியன்) புதிய பங்குகளை வழங்கியதன் மூலமும் (ரூ.14.6 பில்லியன்) அடுக்கு 1 மூலதனத்தினை அதிகரித்துக் கொண்டன. இவ்வாண்டுப்பகுதியில், வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் 4.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இது, அடுக்கு 1 மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் மூலம் முக்கியமாக ஆதரவளிக்கப்பட்டது.

வரைபடம் 8.8
வங்கித்தொழில் துறையின் மூலதன விகிதங்கள்



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## 2022ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் அபிவிருத்திகள்

**2022ஆம் ஆண்டுப்பகுதியில், இலங்கை மத்திய வங்கி, தற்பொழுது நிலவுகின்ற குழப்பம் நிறைந்த பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் வங்கித்தொழில் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பேணுவதற்காக ஒழுங்குவிதிகளை வெளியிடுவது மற்றும் மேற்பார்வை அணுகுமுறைகளைப் பலப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு முன்மதியுடைய கொள்கை தலையீடுகளை மேற்கொண்டது.** அதேநேரம், பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியிலும் திரவத்தன்மையினைப் பேணுவதற்கும் காத்திரமான நிதியியல் இடையேற்பாடுகளுக்கு வசதியளிப்பதற்கும் வங்கித்தொழில் துறையினை அனுமதிப்பதற்காக, மத்திய வங்கி சில ஒழுங்குவிதிகளை எச்சரிக்கையுடன் தளர்த்தியது.

**இதன்படி, தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் காரணமாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளைக் கவனமாகப் பரிசீலனையில் கொண்டதன் பின்னர், மத்திய வங்கி குறிப்பிட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை அறிமுகப்படுத்தியது.** இவை, மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்புக்களின் மீது எடுப்பனவுகளை மேற்கொள்ள

அனுமதித்தல், திரவத்தன்மை காப்பு விகிதம் மற்றும் தேறிய உறுதிப்படுத்தல் நிதியிடல் விகிதங்களுக்கான குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளைக் குறைத்தல், அரச பிணையங்கள் மீதான சந்தைப்படியான நட்டங்களை இரண்டாண்டு காலப்பகுதிக்குள் படிப்படியாக கணக்கிட உரிமம்பெற்ற வங்கிகளை அனுமதித்தல், மூலதனப் போதுமாந்தன்மைத் தேவைப்பாடுகளின் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்காக இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களைக் கணிப்பதற்காக மிக நவீனத்துவம் நிறைந்த அணுகுமுறைகளை நோக்கி உரிமம்பெற்ற வங்கிகள் நகர்வதற்கு ஊக்குவித்தல், குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான கால அவகாசத்தினை நீடித்தல் மற்றும் உள்ளக மூலதனப் போதுமாந்தன்மை மதிப்பீட்டுச் செய்முறை ஆவணத்தினைச் சமர்ப்பித்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலும், மறுஅறிவித்தல் வரை, ஒட்டுமொத்த வங்கிக்குமாக, திரட்டப்பட்ட அடிப்படையொன்றின் மீது மொத்த சீராக்கப்பட்ட பொறுப்புக்களில் 20 சதவீதத்திற்கு குறையாததொரு தொகையினை திரவச் சொத்துக்களாக பேணவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்ற வழிகாட்டல்கள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்டன. உரிமம்பெற்ற வங்கிகள் மேம்படுத்தப்பட்ட மேற்பார்வை மற்றும் அடிக்கடி அறிக்கையிடல் என்பனவற்றுடன், 2022 திசெம்பர் இறுதி வரை 90 சதவீதத்திற்குக் குறையாததொரு மட்டத்தில் திரவத்தன்மை காப்பு விகிதத்தினையும் தேறிய உறுதிப்பாட்டு நிதியிடல் விகிதத்தினையும் பேணுவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டன.

**மேலும், தற்பொழுது நிலவுகின்ற பேரண்ட பொருளாதார நிலைமைகளின் காரணமாக உரிமம்பெற்ற வங்கிகளின் திரவத்தன்மை மற்றும் ஏனைய முக்கிய செயலாற்ற குறிகாட்டிகளின் மீதும் ஏற்படக்கூடிய மோசமான தாக்கத்தினையும் அத்துடன் திரவத்தன்மையினையும் மூலதனத் தாங்கிருப்புக்களையும் பொருத்தமான மட்டத்தில் பேணுவதன் முக்கியத்துவத்தினையும் பரிசீலனையில் கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள் மீளஅறிமுகப்படுத்தப்பட்டன.** இதற்கமைய, உரிமம்பெற்ற வங்கிகள் 2022ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள்/ இடைக்கால நிதியியல் கூற்றுக்கள் இறுதிப்படுத்தப்பட்டு வெளிவாரிக் கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படும் வரை ஏற்கனவே பிரகடனப்படுத்தப்படாத காசு பங்கிலாபங்களை வழங்குதல் மற்றும் இலாபங்களை தாய்நாட்டிற்கு அனுப்புதல் என்பனவற்றைப் பிற்போடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் பங்குகளை மீண்டும் வாங்குதல், முகாமைத்துவப் படிகள் மற்றும் பணிப்பாளர் சபைக்கான கொடுப்பனவுகளை அதிகரித்து இன்றியமையாதன அல்லாத அத்துடன்/ அல்லது அவசரமல்லாத செலவினங்களை ஏற்படுத்தல் என்பனவற்றில் ஈடுபடுவதிலிருந்தும் விலகியிருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட வேளையில் 2022 இறுதிவரை மூலதனச் செலவினங்களை மேற்கொள்ளும் போது உரிய விழிப்புக் கவனத்தினையும் முன்மதியுடைய தன்மையினையும் பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டன.

**நாணயக் கொள்கை வழிமுறைகள் மற்றும் செலாவணி வீத அசைவுகளைப் பரிசீலனையில் கொண்டு வெளிநாட்டு நாணய வைப்புக்கள் உட்பட உரிமம்பெற்ற வங்கிகளின் கடன்வழங்கல் மற்றும் வைப்புச் சாதனங்களின் வட்டி மீதான வரையறைகளுக்கான திருத்தங்கள் உள்ளடங்கலாக 2022இன் முதலரைப்பகுதியில் 1949இன் 58ஆம் இலக்கமிடப்பட்ட நாணய விதிச் சட்டத்தின் கீழ் பல சட்டக் கட்டளைகள் விடுக்கப்பட்டன.** அதன் பின்னர் சந்தை அபிவிருத்திகள் மற்றும் மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நிலை என்பனவற்றின் பின்னணியில் அத்தகைய வரையறைகள் இரத்துச் செய்யப்பட்டன. இதேபோன்று, வெளிநாட்டு நாணயங்களின் முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும் இரத்துச் செய்யப்பட்ட வேளையில் வங்கித்தொழில் முறைமையில் வெளிநாட்டு நாணயத்தின் திரவத்தன்மையினையும் வெளிநாட்டுச் செலாவணி வீத உறுதிப்பாட்டினையும் பேணுவதற்காக இன்றியமையாதனவல்லாத மற்றும் அவசரமல்லாத பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக இறக்குமதிகளுக்கெதிராக அளவு வைப்புத் தேவைப்பாடுகள் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டன.

**மேலும், 2022இல் நீடித்துநிலைத்திருக்கும் நிதி தொடர்பில் வங்கிகளுக்குப் பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.** நீடித்துநிலைத்திருக்கும் நிதியியல் முன்னெடுப்புக்களை ஊக்குவிக்கின்ற தேசிய முக்கியத்துவத்தினையும் நீடித்துநிலைத்திருக்கும் நிதி நடவடிக்கை தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினையும் பரிசீலனையில் கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகளின் நீடித்துநிலைத்திருக்கும் நிதி நடவடிக்கைகள் தொடர்பில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் இலங்கையின் நீடித்துநிலைத்திருக்கும் நிதிக்கான வழிகாட்டலுடன் இசைந்து செல்லும் விதத்தில் விடுக்கப்பட்டன.

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினாலும் அதனையடுத்து ஏற்பட்ட அசாதாரண பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளினாலும் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு பொதுவான மற்றும் சுற்றுலா சட்ட இசைவுத்தாமதங்களைத் தளர்த்தும் விதத்தில் பரந்தளவு சலுகைகளை வழங்குமாறு மத்திய வங்கி உரிமம்பெற்ற வங்கிகளைக் கேட்டுக் கொண்டது.** உரிமம்பெற்ற வங்கிகள், தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலைமகளினாலும் அத்துடன்/ அல்லது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினாலும் வருமானம் அல்லது வியாபாரம் மோசமாகப் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு, தனிநபர்களின் எதிர்கால மீள்கொடுப்பனவு இயலாற்றலினதும் வியாபாரத்தின்/ செயற்றிட்டங்களின் இயலாற்றலினதும் அடிப்படையில், தனித்தனி அடிப்படையில் ஆராய்ந்து, 2022 திசெம்பர் இறுதிவரையான ஆறு மாத காலப்பகுதிக்குப் பொருத்தமான சலுகைகளை வழங்குமாறும் அதேவேளை,

வங்கித்தொழில் துறை உறுதிப்பாட்டின் மீதான ஏதேனும் தேவையற்ற அழுத்தங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. மேலும், கொவிட்-19இனால் பாதிக்கப்பட்ட, மற்றும் வருமானம் அல்லது விற்பனைக் குறைப்பு, வியாபாரத் தொழிற்பாடுகளின் குறைப்பு அல்லது பெறுமதி இழப்பு அல்லது வியாபாரம் மூடப்பட்டமை போன்ற காரணங்களினால் நிதியியல் இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்ற செயற்பாடு குறைந்த அல்லது செயற்படாத கடன்பாட்டாளர்களை அடையாளம் கண்டு உதவுவதற்காக, கொவிட்-19 இற்குப் பின்னரான புத்துயிர்ப்பு அலகுகளை நிறுவுவதற்கான வழிகாட்டல்களை வழங்கும் பொருட்டு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

**மேலே குறிப்பிடப்பட்ட வழிமுறைகளுக்குப் புறம்பாக, 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல முக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** இவை, உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனத்தினைத் திருத்துதல், விசேட தேவையுடைய வாடிக்கையாளர்கள் வங்கித்தொழில் பணிகளை அணுகுவதனை மேம்படுத்துவதற்காக குறித்துரைக்கப்பட்ட வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டமை, இந்திய ரூபாவினைக் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக நிர்ணயித்தல், 2023ஆம் கலண்டர் ஆண்டிற்கான வருடாந்த உரிமக் கட்டணத்தினை வங்கிகளுக்கு அறிவித்தல் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்தலை கட்டாயமாக்குதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

## 8.3 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றம்

### உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை

நாடு பொருளாதாரத்தில் கடுமையான சுருக்கத்தினை **அனுபவித்தமைக்கிடையிலும் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை அதன் விரிவாக்கத்தினைத் தொடர்ந்தும் பேணக்கூடியதாக இருந்தது.** சுருக்கமடைந்துவரும் கொடுகடன் வளர்ச்சி, வீழ்ச்சியுற்று வருகின்ற இலாபத்தன்மை மற்றும் கட்டம் 3 கடன்களின் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றவாறு அதிகரித்துவரும் செயற்படாக் கடன்கள் என்பனவற்றிலிருந்து எதிர்நோக்கப்படும் சவால்களுக்கு மத்தியிலும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறைச் சொத்துக்கள் மற்றும் வைப்புக்கள் நியதிகளில் வளர்ச்சியடைந்ததுடன் 2022இல் போதுமான மூலதன மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்புக்களையும் கொண்டிருந்தது. வைப்பாளர்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு நடுத்தர காலத்தில் உறுதியான மற்றும் நிலையான வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையினை நிறுவுவதற்கும் மற்றும் நிதியியல் துறையின் நிலையான தன்மையைப் பாதுகாப்பதற்கும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்கான முதன்மைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அட்டவணை 8.9
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் மாகாண ரீதியான கிளைகளின் பரம்பல்

| மாகாணம் | 2021 முடிவில் | 2022 முடிவில் (அ) | ஆண்டுக்காலப் பகுதியில் அசைவு |
|---|---|---|---|
| மத்திய | 184 | 193 | 9 |
| கிழக்கு | 142 | 154 | 12 |
| வடமத்திய | 111 | 120 | 9 |
| வடமேல் | 180 | 187 | 7 |
| வடக்கு | 119 | 139 | 20 |
| சப்ரகமுவ | 122 | 127 | 5 |
| தென் | 178 | 193 | 15 |
| ஊவா | 82 | 91 | 9 |
| மேல் | 589 | 630 | 41 |
| மொத்தம் | 1,707 | 1,834 | 127 |

(அ) திருத்தப்பட்டது *மூலம்:* இலங்கை மத்திய வங்கி

#### வியாபார விரிவாக்கம்

**2022 இறுதியில் துறையின் மொத்தச் சொத்துக்கள் ரூ.1,611.2 பில்லியனாக விளங்கி இலங்கையின் நிதியியல் முறைமையில் மொத்தச் சொத்துக்களில் 5.2 சதவீதத்தினை பிரசன்னப்படுத்தின.** 2022 இறுதியளவில் துறையானது 36 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும்[3] ஒரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியினையும் உள்ளடக்கியிருந்ததுடன் அவை 1,834 கிளைகளையும் கொண்டிருந்தன. இதில் 1,204 கிளைகள் (65.6 சதவீதம்) மேல் மாகாணத்திற்கு வெளியே அமைந்திருந்தன. மேலும், 2022 காலப்பகுதியில் இத்துறையினால் 127 புதிய கிளைகள் நிறுவப்பட்டன.

**துறையின் சொத்துத் தளம் ரூ.123 பில்லியனால் விரிவடைந்து 2022 இறுதியில், 2021இல் 6.1 சதவீதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 8.3 சதவீதமான வளர்ச்சியைப் பதிவுசெய்து**

3 ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் நீங்கலாக

அட்டவணை 8.10
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளடக்கம்

| விடயம் | 2021 | | 2022 (அ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. பில் | பங்கு (%) | ரூ. பில் | பங்கு (%) | 2021 | 2022 (அ) |
| **சொத்துக்கள்** | | | | | | |
| கடன் மற்றும் முற்பணங்கள் (தேறிய) | 1,142.4 | 76.8 | 1,199.2 | 74.4 | 9.9 | 5.0 |
| முதலீடுகள் | 167.4 | 11.3 | 199.6 | 12.4 | 5.4 | 19.3 |
| ஏனையவை | 177.9 | 12.0 | 212.4 | 13.2 | -12.4 | 19.4 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| மொத்த வைப்புக்கள் | 783.3 | 52.7 | 864.5 | 53.7 | 4.6 | 10.4 |
| மொத்த கடன் பெறுகைகள் | 325.9 | 21.9 | 322.6 | 20.0 | -0.6 | -1.0 |
| மூலதன கூறுகள் | 304.0 | 20.4 | 364.1 | 22.6 | 22.6 | 19.8 |
| ஏனையவை | 74.5 | 5.0 | 60.1 | 3.7 | -3.3 | -19.4 |
| **மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | **1,487.7** | **100.0** | **1,611.2** | **100.0** | **6.1** | **8.3** |

(அ) தற்காலிகமானது *மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

### சிறப்புக்குறிப்பு 10
### இலங்கையில் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையொன்றினை நிறுவுதல்

**பின்னணி**

இயற்றப்படுவதற்கு எதிர்பார்க்கின்ற புதிய மத்திய வங்கிச் சட்டம், நிதியியல் முறைமை உறுதித்தன்மையினை பாதுகாப்பதை மத்திய வங்கியின் குறிக்கோளொன்றாக அங்கீகரித்திருக்கின்ற வேளையில், இலங்கையின் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக மத்திய வங்கி குறித்துரைக்கப்பட்டிருக்கிறது. எனவே, புதிய சட்டமானது மத்திய வங்கியின் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற அதன் பொறுப்பாணையினையும் தற்போதைய செயற்பரப்பினையும் விரிவுபடுத்துகிறது. இதற்கமைய, இக்கட்டுரையானது, பேரண்ட முன்மதியுடைய கொள்கைகள் மற்றும் முறைமைசார் இடர்நேர்வு பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளுக்கும் மத்திய வங்கியின் ஏனைய கொள்கைகளுக்குமிடையிலான ஒன்றிலொன்று செயல்புரியும் பரஸ்பரத்தன்மை, பேரண்ட முன்மதியுடைய கருவிகள் மற்றும் இலக்கிடப்பட்ட அம்சங்கள், இலங்கை பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபை என்ற ரீதியில் மத்திய வங்கியின் வகிபாகம் மற்றும் முன்னோக்கிப் பயணித்தல் என்பன தொடர்பில் ஆர்வலர்களுக்கு அறிவூட்டுவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.


**பேரண்ட முன்மதியுடைய கொள்கைகள் மற்றும் முறைமைசார் இடர்நேர்வு**

மத்திய வங்கித்தொழிலுக்கு பேரண்ட முன்மதியுடைய அணுகுமுறையின் முக்கியத்துவம் எத்தகையது என்பதனை 2007 - 2009 காலப்பகுதியில் இடம்பெற்ற உலகளாவிய நிதியியல் நெருக்கடியிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் மூலம் அறியமுடிந்தது. உலகளாவிய நிதியியல் நெருக்கடியானது, உறுதியான பொருளாதாரச் சூழ்நிலையொன்றிலும் நெருக்கடிகள், தோற்றம் பெறக்கூடும் என்பதனையும் ஒழுங்குமுறைப்படுத்தல் கொள்கைகள் தனிப்பட்ட நிறுவனங்கள் மீதே கவனத்தினைச் செலுத்துவதனாலும் முறைமைசார் இடர்நேர்வுகளைக் கையாள்வதற்கு கொள்கைகள் இல்லாமையும் அத்தகைய நெருக்கடிகளைத் தடுப்பதற்கு தனியே நுண்பாக பொருளாதாரக் கொள்கைகள் போதுமானவையல்ல என்பதையும் எடுத்துக்காட்டியது. முறைமைசார் இடர்நேர்வென்பது நிதியியல் முறைமை முழுவதும் அல்லது அதன் பகுதிகள் பாதிக்கப்படுவதன் காரணமாக நிதியியல் பணிகளை வழங்கும் போது இடையூறுகளை ஏற்படுத்தக்கூடிய இடர்நேர்வொன்றாக வரைவிலக்கணப்படுத்தப்படுவதுடன் இது உண்மைப் பொருளாதாரத்திற்கு கடுமையான எதிர்மறையான விளைவுகள் ஏற்படவும் காரணமாகிறது (பன்னாட்டு நாணய நிதியம், நிதியியல் உறுதிப்பாட்டுச் சபை மற்றும் பன்னாட்டுத் தீர்ப்பனவிற்கான வங்கி 2009). எனவே, நிதியியல் முறைமையில் கட்டியெழுப்பப்படும் இடர்நேர்வுகளைத் தடுப்பதற்கு வலுவான பேரண்ட முன்மதியுடைய கொள்கைக் கட்டமைப்பு அவசியம் என்பதனை உலகளாவிய நிதியியல் நெருக்கடி எடுத்துக்காட்டியது. உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்குப் பின்னைய யுகத்தில், மத்திய வங்கிகள் பேரண்ட பொருளாதாரத்திற்கும் நிதியியல் முறைமைக்குமிடையிலான இணைப்புக்களின் முக்கியத்துவத்தினை அதாவது பேரண்ட - நிதியியல் இணைப்புக்களை அங்கீகரித்திருக்கின்றன. எனவே, பேரண்ட நிதியியல் இணைப்புக்களையும் நிறுவனங்கள் ஒன்றிலொன்று தங்கியுள்ள தன்மையினையும் அடையாளம் காண்பது மிகவும் முக்கியமானதென்பதுடன் அதேவேளை முறைமைசார் இடர்நேர்வுகளை அர்ப்பணிப்பு மிக்க நிதியியல் துறை கொள்கைகளினால் கட்டுப்படுத்துவதும் அவசியமானது என்பதும் தெளிவாகின்றது.

எனவே, 'பேரண்ட முன்மதியுடையதன்மை' என்பது வழக்கமான பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் தனிப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் பாரம்பரிய நுண்பாக முன்மதியுடைய ஒழுங்குவிதிகளுக்குமிடையிலான இடைவெளிகளை நிரப்புகின்ற நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்தலை அணுகும் ஒரு முறை எனக் குறிப்பிடப்படுகின்றது (எல்லியோட் டி., 2011). இதன்படி, பேரண்ட முன்மதியுடைய கொள்கை 'முறைமைசார் இடர்நேர்வை' மட்டுப்படுத்துவதன் மூலமும் நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதன் மூலமும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பாதுகாத்து இடைவெளியினை நிரப்புகிறது.

முறைமைசார் இடர்நேர்வு படிப்படியாகவும் அவதானிக்கப்படாத விதத்திலும் பெரும்பாலும் தோன்றுவதுடன், நிதியியல் முறைமையில் அத்தகைய இடர்நேர்வுகளானவை மோசமான சூழ்நிலைக்குரிய அல்லது தொடர்ச்சியான மோசமான அபிவிருத்திகளுக்கான வெளிப்படையான அடையாளங்களைக் காட்டுவதுமில்லை. எனவே, அதேநேரத்தில் ஏற்படக்கூடிய நிச்சயமற்றதன்மைகளும் சுழற்சிக் காலத்தின் போது முறைமைசார் இடர்நேர்வின் பரிணாமமடையும் தன்மைகளும் அபிவிருத்திகளின் நிலையான மதிப்பீட்டையும் பேரண்ட முன்மதியுடைய கொள்கைப் பதிலிறுப்புக்களின் போதுமானதன்மை மதிப்பிடப்படுவதனையும்

வரைபடம் சி.கு. 10.1
நிதியியல் சுழற்சி வட்டத்தின் போது சுழற்சி வட்ட இடர்நேர்வுகளின் பரிணாம வளர்ச்சி




*மூலம்:* ஷெக் நஷனல் வங்கி (2022)

தேவைப்படுத்துகின்றன. இத்தகையதொரு நிலையில், பேரண்ட முன்மதியுடைய கொள்கையானது, வேறுபடும் நிதியியல் சுழற்சி வட்ட காலத்தின் தேவைக்கேற்ப நெகிழ்ச்சித்தன்மையுடன் பதிலிறுத்தக்கூடிய சாதனங்கள் மற்றும் வழிமுறைகளினூடாக முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை முன்கூட்டியே அணுகுகின்ற முறையினைப் பிரதிபலிக்கின்றது. ஒட்டுமொத்த பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளின் கலப்பினை ஒன்றுசேர்க்கும்போது தோன்றும் பேரண்ட முன்மதியுடைய நிலைப்பாடானது சுழற்சி

8

இடர்நேர்வுகள் ஒன்றுதிரளக்கூடிய நிதியியல் சுழற்சி வட்டத்தின்[1] விரிவாக்க கட்டத்தில் இறுக்கமாக்கப்படுவதிலும் வட்டத்தின் பின்னடைவிற்குரிய கட்டத்தில் தளர்ச்சிப்படுத்தப்படுவதிலும் நாட்டம் செலுத்துகின்றது (பார்க்க வரைபடம் சி.கு. 10.1).

பேரண்ட முன்மதியுடைய கொள்கை முறைமைசார் இடர்நேர்வினைக் குறுக்குவெட்டுக் கூறு மற்றும் சுழற்சி வட்டக்கூறு ஆகிய இரண்டு கூறுகளினூடாகக் கட்டுப்படுத்துவதனை நோக்காகக் கொண்டுள்ளது. குறுக்குவெட்டுக் கூறானது, தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நிதியியல் நிறுவனங்களின் மீது ஏற்படும் வெளிப்புறக் காரணிகளிலிருந்து தோன்றுகின்ற முறிவுகளின் இடர்நேர்வினையும் நிதியியல் நிறுவனமொன்று நிதியியல் முறைமையின் ஒன்றிலொன்று தொடர்புபட்ட தன்மையிலிருந்து தோன்றுகின்ற முறைமைசார் இடர்நேர்வினையும் தணிப்பதன் மீதும் அதனை தாங்கக்கூடிய முறைகளை அபிவிருத்தி செய்வதன் மீதும் கவனத்தினைச் செலுத்துகிறது. அதேவேளை, சுழற்சி வட்டக்கூறு, காலப் பரிமாணத்தில் காணப்படும் முறைமைசார் இடர்நேர்வினைத் தணிக்கின்ற அல்லது அதைத் தாக்குப்பிடிக்கக்கூடிய அம்சங்களை அபிவிருத்தி செய்யும் முயற்சிகளை மேற்கொள்கிறது (ஏட்றியன், 2017). அத்தகைய சுழற்சி வட்ட அச்சுறுத்தல்கள் விரைவாக அதிகரித்து வருகின்ற முடுக்கிகள் மற்றும் கொடுகடன் நிலைமைகள் என்பனவற்றுடன் தொடர்புபட்ட சொத்து விலைக் குமிழ்களை உள்ளடக்குகின்றன (எல்லியொட், வெலட்பேர்க் மற்றும் லேநேர்ட், 2013).

### மற்றைய கொள்கைகளுடன் பரஸ்பரம் தொடர்புபடுதல்

2009இல் உலகளாவிய நெருக்கடியிலிருந்து அவதானிக்கப்பட்ட பாரிய அதிர்வுகளுக்குப் பதிலிறுத்துகின்ற விதத்தில், உண்மைப் பொருளாதாரத்தினை உறுதிப்படுத்துவதற்காக கிடைக்கத்தக்க கொள்கைக் கருவிகள் அனைத்தையும் செயற்படுத்துவதற்கான (முன்மதியுடைய கொள்கைகள் உட்பட) நாட்டம் காணப்பட்டது. மேலும், இது கொவிட்-19 உலகளாவிய தொற்றுக் காலப்பகுதியில் மிக வெளிப்படையாக விளங்கியவிடத்து, முன்மதியுடைய கொள்கைகள் பாரம்பரியம் மிக்க இறை மற்றும் நாணயக் கொள்கை வழிமுறைகளுடன் சேர்ந்து முக்கியமான பேரண்ட உறுதிப்படுத்தல் வகிபாகத்தினை ஆற்றியதுடன் மத்திய வங்கிகளின் கொள்கைக் கலப்பிலும் இன்றியமையாத வகிபாகமொன்றினை ஆற்றின (வர்ஜியோ மற்றும் ஜோறோ, 2022). பேரண்ட முன்மதியுடைய கொள்கையினை ஏனைய கொள்கைகளுடன் சேர்த்து நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும் என்பதனால் நாணயக் கொள்கை மற்றும் நுண்பாக முன்மதியுடைய கொள்கை என்பனவற்றுடன் உயர்ந்த மட்டத்தில் பரஸ்பரம் தொடர்புபட வேண்டியிருக்கும். இதன்படி, நாணயம் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குறிக்கோள்களும் கருவிகளும் ஒன்றுடனொன்று முரண்படலாம் அல்லது இணங்கிச் செல்லலாம். எடுத்துக்காட்டாக, நாணயக் கொள்கை குறிப்பிட்ட சில சூழ்நிலைகளின் கீழ் சமநிலையற்ற தன்மைகள் கட்டியெழுப்பப்படுவதற்கு பங்களிக்கலாம் என்பதுடன் முகவர்களின் இடர்நேர்வேற்பு நடத்தைகளின் மீது செல்வாக்கினையும் செலுத்தலாம். உதாரணமாக, தொடர்ச்சியான தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை காலப்பகுதியானது சொத்து விலை குமிழ்களுக்கும் மிகையான கொடுகடன் வளர்ச்சி அத்தியாயங்களுக்கும் வழிவகுக்கக்கூடும். இதன் காரணமாக நிதியியல் உறுதிப்பாட்டு இடர்நேர்வுகளை ஒழிப்பதற்கு எதிர் சுழற்சி முறையிலான பேரண்ட முன்மதியுடைய கொள்கைக் கருவிகள் தேவைப்படலாம். மறுபுறத்தில், உறுதியான நிதியியல் முறைமையானது நாணயக் கொள்கையின் சுமுகமான ஊடுகடத்தலையும் பொருளாதாரத்தில் மூலவளங்கள் சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்யப்படுவதனையும் இயலுமைப்படுத்துகிறது. இந்நெருக்கமான உறவுகள், நாணய மற்றும் பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளின் தாக்கத்தினைக் கண்காணிப்பதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் மதிப்பிடுவதற்குமான தேவையினையும் அத்தகைய கொள்கைக் குறிக்கோள்களை அடைவதன் மீதான வழிமுறைகளையும் தேவையானவிடத்து குறிப்பிட்ட கொள்கைகளிடையே இணைப்புக்களை ஏற்படுத்தவும் முன்கூட்டியே தீர்மானிக்கின்றது. அது மட்டுமன்றி பேரண்ட முன்மதியுடைய கொள்கை நடவடிக்கைகளும் நுண்பாக முன்மதியுடைய மேற்பார்வையும் ஒரே தகவல் தளத்தினைப் பயன்படுத்துவதனாலும் தகவல்களின் கணிசமான தொகை நுண்பாக முன்மதியுடைய மேற்பார்வையினூடாகப் பெறப்பட்டாலும் அவை பேரண்ட முன்மதியுடைய கொள்கை வகுப்பின் போது பரிசீலனையில் கொள்ளப்படுவதனாலும் ஒன்றிற்கொன்று துணைநிரப்பியாக விளங்குகின்றன. இணங்கிச் செல்கின்ற தன்மைகளும் முரண்பாடுகளும் மிகக் கவனமாகப் பரிசீலனையில் கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் ஏற்புடைத்தான வேளையில் ஒன்றுடனொன்று இணைக்கப்படுவதன் பயனுள்ள விளைவுகளும் பயன்படுத்தப்படல் வேண்டும் (வர்ஜியோ மற்றும் ஜோறோ, 2022). மேலும், இக்குறிக்கோள்களை வெவ்வேறாக்குவது கடினம் என்பதனாலும் வலுக் கட்டாயமான விதத்தில் வெவ்வேறாக்குவது எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனாலும் நெருக்கமான இணைப்புக்களுக்கான தேவை அவசியமாகும்.

### பேரண்ட முன்மதியுடைய கட்டமைப்பினைத் தொழிற்படுத்தல் - கொள்கைக் கருவிகள் மற்றும் இலக்கிடப்பட்ட அம்சங்கள்

கொள்கை வகுப்போர் முறைமைசார் இடர்நேர்வு இடம்பெறும் கால இடைவெளியையும் அதன் தீவிரத்தினையும் குறைப்பதற்காக பல்வேறுபட்ட பேரண்ட முன்மதியுடைய கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். எனவே, பயன்படுத்தப்படுகின்ற பேரண்ட முன்மதியுடைய கருவிகளைப் பரந்த அடிப்படையிலான கருவிகள், துறைவாரியான (உதாரணமாக வீட்டுத்துறை/கூட்டாண்மை) கருவிகள், திரவத்தன்மைக் கருவிகள் மற்றும் அமைப்பியல் கருவிகள் என வகைப்படுத்த முடியும்.

பரந்த அடிப்படையிலான கருவிகள் வங்கித்தொழில் முறைமையின் அனைத்துக் கொடுகடன் வெளிப்படுத்துகைகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் எதிர் சுழற்சி வட்ட மூலதனத் தாங்கிருப்பு, முடுக்கி விகிதம் மற்றும் மாறுபடும் கடன் இழப்பு ஏற்பாட்டுத் தேவைப்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன (பன்னாட்டு நாணய நிதியம், 2014). துறைவாரியான கருவிகளினால் வீட்டுத் துறை மற்றும் கூட்டாண்மைத் துறைகள் போன்ற குறிப்பிட்ட துறைகளுக்கான மிகையான கொடுகடனிலிருந்து தோன்றுகின்ற பாதிக்கப்படும் தன்மையினைக் கட்டுப்படுத்த முடியும் என்பதுடன், துறைவாரியான மூலதனத் தேவைப்பாடு (இடர்நேர்வு நிறை) மற்றும் அதனுடன் கொடுகடன் வளர்ச்சி, பெறுமதிக்கான கடன் விகிதம் மற்றும் வருமானத்திற்கான படுகடன் தீர்ப்பனவு விகிதம் என்பனவற்றின் மீதான வரையறை ஆகியவற்றை விதித்தல்/ அதிகரித்தல் என்பனவற்றையும்

---

1 பொருளாதார சுழற்சி வட்டத்தினைப் போன்று நிதியியல் சுழற்சி வட்டம் விரிவாக்கக் கட்டமொன்றினையும் பின்னடைவுக் கட்டமொன்றினையும் மற்றும் திருப்பு முனைக் கட்டங்களான உச்சம் மற்றும் கீழேயுள்ள முனை என்பனவற்றையும் கொண்டிருக்கின்றது. நிதியியல் சுழற்சி வட்டம் சில சமயங்களில் வழமைக்கு மாறான பாதையினைப் பின்பற்றலாம். இதன்போது மேற்குறிப்பிடப்பட்ட கட்டங்களில் சில ஏற்படாமலே போகலாம் அல்லது வழமைக்கு மாறாக மிகக் குறைந்த அல்லது மிகக்கூடிய காலப்பகுதியினைக் கொண்டிருக்கலாம்.

உள்ளடக்குகின்றது. திரவத்தன்மைக் கருவிகள் (உதாரணமாக: அழுத்தம் ஏற்படும் காலப்பகுதியில், குறிப்பிட்ட ஒரு சில வாரங்களுக்கு வெளிப்பாய்ச்சல்களை ஈடுசெய்வதற்குப் போதுமான திரவச் சொத்துக்களை வங்கிகள் வைத்திருப்பதனை உறுதிப்படுத்துகின்ற திரவத்தன்மை தாங்கிருப்பு தேவைப்பாடுகள் வங்கிகள் அவற்றின் திரவத்தன்மையற்ற சொத்துக்களுக்கு நிதியிடுவதற்கு அதாவது கடன்கள் போன்றவை உறுதியான பொறுப்புக்களை வைத்திருப்பதனை உறுதிப்படுத்துகின்ற உறுதியான நிதியிடல் தேவைப்பாடுகள் மற்றும் மைய நிதியிடல் அல்லாதவற்றின் மீது தீர்வையை விதிக்கின்ற திரவத்தன்மைக் கட்டணங்கள்) முறைமைசார் திரவத்தன்மை இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துகின்றன.

முறைமைசார் இடர்நேர்வின் அமைப்பியல் பரிமாணம், இடைத்தொடர்புத் தன்மை மற்றும் தனிப்பட்ட முறைமைசார் நிறுவனங்களின் முறிவிலிருந்து பரவுகின்ற இடர்நேர்வு என்பனவற்றிலிருந்து தோன்றுகிறது. அமைப்பியல் பேரண்ட முன்மதியுடைய கொள்கைக் கருவிகள் இரண்டு குறிக்கோள்களை இலக்காகக் கொண்டது (1) எப்போதும் முறிவடையக்கூடாத மிக முக்கிய நிறுவனங்களின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை அதிகரித்தல் மற்றும் (2) நிதியியல் முறைமைக்குள் காணப்படும் மிகையான வெளிப்படுத்துகைகளைக் குறைத்தல். முறைமை ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நிதியியல் நிறுவனங்களின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை அடையாளம் கண்டு வலுப்படுத்துவதானது எப்போதும் முறிவடையக்கூடாத மிக முக்கியமானவை ஆகக் காணப்படும் நிறுவனங்களின் பிரச்சனையைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய உபாயமாகத் தோற்றம் பெற்றிருப்பதுடன் அத்தகைய நிறுவனங்கள் மீதான மூலதன மேலதிகக் கட்டணங்கள் விதிக்கப்படுதல் பல நாடுகளிலும் அதிகரித்தளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இந்நிதியியல் நிறுவனங்களுக்கான மிகையான வெளிப்படுத்துகைகளை மட்டுப்படுத்துவதற்கு இந்நிறுவனங்களுக்கான வெளிப்படுத்துகைகளை ஊக்கமிழக்கச் செய்வது அல்லது அத்தகைய வெளிப்படுத்துகைகளை கூடியளவிற்குப் பாதுகாப்புடையதாக்குவது என்பன உபாயங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

### இலங்கையில் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக மத்திய வங்கி

மத்திய வங்கி பேரண்ட முன்மதியுடைய பகுப்பாய்வுகளிலும் அத்தகைய பகுப்பாய்வுகளுக்கான கருவிகளை அபிவிருத்தி செய்வதிலும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்காக கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதிலும் ஈடுபட்டிருந்த போதும், புதிய மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டவுடன் மத்திய வங்கியை நாட்டின் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாகக் குறித்துரைத்து நிதியியல் முறைமை உறுதித்தன்மையினைப் பேணுகின்ற தற்போதைய வகிபாகத்தின் நியதிகளில் அதன் பொறுப்பாணையினையும் செயற்பரப்பினையும் விரிவுபடுத்தும். எனவே, புதிய சட்டம் இயற்றப்பட்டவுடன், பேரண்ட முன்மதியுடைய கருவிகளைப் பயன்படுத்துவதற்கான ஒட்டுமொத்த அணுகுமுறையினையும் காலத்திற்குக் காலம் இற்றைப்படுத்துவதன் மூலம் பொருளாதாரம் மற்றும் நிதியியல் நிலைமைகளின் கொதிநிலையின் கீழுள்ள போதிலும் கூட நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பேணும் பொருட்டு பேரண்ட முன்மதியுடைய குறிக்கோள்களை நோக்கிச் செயலாற்ற வேண்டிய பொறுப்புக்கள் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்படும். இது, இடைத்தொடர்புத் தன்மைகள் மற்றும் முறைமைசார் முக்கியத்துவம் மிக்க நிறுவனங்கள் முறிவடைவதிலிருந்தும் தோன்றுகின்ற ஏதேனும் இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நிதியியல் நிறுவனங்களின் ஆரோக்கியத்தைப் பேணும் அதேவேளை, அந்நிறுவனங்களில் எந்தவொரு நிலையற்ற தளம்பல்களுமின்றி ஆரோக்கியமான கொடுகடன் மற்றும் முடுக்கி நிலைமைகள் பேணப்படுதலையும் உள்ளடக்கும். மத்திய வங்கியிடம் ஒட்டுமொத்த நிதியியல் முறைமைகளைக் கண்காணிக்கின்ற, இடர்நேர்வுகளை மதிப்பிடுகின்ற, பேரண்ட முன்மதியுடைய சாதனங்களை அறிமுகப்படுத்துகின்ற மற்றும் நிதியியல் துறை அதிகாரசபைகளின் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்துநர்களுக்கு விதந்துரைப்புக்களைச் செய்கின்ற அதிகாரங்கள் ஒப்படைக்கப்படவுள்ளன.

### முன்னோக்கிப் பயணித்தல்

மத்திய வங்கி, இவ்விடயத்தில் பன்னாட்டு நிபுணர்களின் தொழில்நுட்ப உதவியுடன் அதன் பேரண்ட முன்மதியுடைய கட்டமைப்புக்களை வலுப்படுத்தத் தொடங்கியிருக்கின்ற அதேவேளையில் இடர்நேர்வு மதிப்பீடுகள் மற்றும் சாதனங்களின் அளவிடல் மீதான கட்டமைப்புக்களையும் வலுப்படுத்தியிருக்கின்றது. இயக்கவாற்றல் மிக்க வங்கிக் கடன்தீராற்றல் பற்றிய அழுத்தப் பரீட்சிப்பு, திரவத்தன்மை அழுத்தப் பரீட்சிப்பு, இடைத்தொடர்புத்தன்மை பகுப்பாய்வுக் கட்டமைப்பு மற்றும் அத்தகைய இடர்நேர்வுப் பகுப்பாய்வுகளுடன் தொடர்புபட்ட தரவுச் சேகரிப்புக் கட்டமைப்புக்களை வலுப்படுத்தல் என்பன ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளதுடன் பலனளிக்கின்ற பல சுற்றுக்கள் நிறைவும் பெற்றுள்ளன. மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்ற நிதியியல் துறை பங்கேற்பாளர்கள் மீது அல்லது அவர்களது வெளிப்படுத்துகை மீது இலக்கிடப்பட்ட, பேரண்ட முன்மதியுடைய கருவிகளின் தொகுதியொன்றினை மத்திய வங்கி தற்பொழுது அபிவிருத்தி செய்து வருகிறது. பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளின் நடைமுறைப்படுத்துதல் மீது ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை நிறைவேற்றும் விதத்திலும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்திலும் மத்திய வங்கி, நிதியியல் துறை அதிகாரிகளினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் அத்தகைய துறை பங்கேற்பாபளர்கள் தொடர்பில் நிதியியல் துறை அதிகாரிகளினால் பிரயோகிக்கப்படவுள்ள முன்மதியுடைய நியமங்களை அபிவிருத்தி செய்து முன்மொழியும். அவ்வாறு செய்யும் போது, தரவு இடைவெளிகள் அடையாளம் காணப்படுவதுடன் அத்தகைய தரவு இடைவெளிகளைக் குறைப்பதன் மீதும் மத்திய வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளும். பேரண்ட முன்மதியுடைய கொள்கை வகுப்பிற்காக நன்கு இணைக்கப்பட்ட பொறிமுறையொன்றினை நிறுவுவதற்காக, புதிய சட்டம் இயற்றப்பட்டவுடன் மத்திய வங்கி அதன் பேரண்ட முன்மதியுடைய பொறுப்பாணைக்கு ஆதரவளிக்கின்ற நிறுவன ரீதியான கட்டமைப்பினை வலுப்படுத்த முயற்சிக்கும். இது தொடர்பில், மத்திய வங்கி நிதியியல் உறுதிப்பாட்டு விடயங்களில் நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழுவின் ஈடுபாட்டினை

8

வலுப்படுத்தும். இது மத்திய வங்கியினால் செய்யப்பட்ட முன்மொழிவுகள்/விதந்துரைப்புக்களை நடைமுறைப்படுத்துவதில் நிதியியல் முறைமையினை பிரசன்னப்படுத்துகின்ற தொடர்பான நிதியியல் துறை அதிகாரசபைகளுடன் இணைப்புக்களை ஏற்படுத்தும். தற்பொழுது வெளியிடப்பட்டுவரும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத்தன்மை மீளாய்வு மேம்படுத்தப்பட்டு வருடாந்த அடிப்படையில், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் தன்மை மீதான மீளாய்வு அறிக்கையினை வெளியிடுகின்றமை தொடர்பான சட்ட ரீதியான தேவைப்பாடுகளையும் மத்திய வங்கி பூர்த்தி செய்யும். இவ்வறிக்கையானது, மத்திய வங்கியின் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீதான மதிப்பீடு, அத்துடன் அதில் அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகள் மற்றும் பாதிக்கப்படும் தன்மைகள் என்பனவற்றின் மதிப்பீட்டினையும் குறிப்பிட்ட காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கி மற்றும் ஏனைய நிதியியல் துறை அதிகாரசபைகளால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் பற்றிய பொதுநோக்கு மற்றும் நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழுவினால் செய்யப்பட்ட விதந்துரைப்புக்களுடன் அவற்றை நடைமுறைப்படுத்தலில் காணப்படும் முன்னேற்றத்தின் தற்போதைய மட்டத்தின் பொதுநோக்கினையும் உள்ளடக்குகிறது.

பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபை நிறுவப்பட்டதும் நிதியியல் முறைமை உறுதித்தன்மையைப் பாதுகாக்கும் குறிக்கோள் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்வதனை உறுதிப்படுத்தும். இது, நிதியியல் முறைமை உறுதிப்பாடு வலுவடையவும் உதவும்.

**உசாத்துணைகள்**


1. Adrian, T., 2017, September. Macroprudential policy and financial vulnerabilities. In Speech at the European Systemic Risk Board Annual Conference, September (Vol. 22). Berner, R. (2018). Financial Stability and Regulatory Policy. Cambridge University Press.
2. Czech National Bank. (2022). The CNB's approach to setting the countercyclical capital buffer. Czech National Bank.
3. Elliott, D., 2011. An overview of macroprudential policy and countercyclical capital requirements. Unpublished manuscript, The Brookings Institution, 10.
4. Elliott, D., Feldberg, G. and Lehnert, A., 2013. The history of cyclical macroprudential policy in the United States.
5. International Monetary Fund, Financial Stability Board, and Bank for International Settlements. (2009) Guidance to Assess the Systemic Importance of Financial Institutions, Markets and Instruments: Initial Considerations. Washington: International Monetary Fund.
6. International Monetary Fund. (2014) Staff Guidance Note on Macroprudential Policy. Washington: International Monetary Fund.
7. Warjiyo, P. and Juhro, S.M. (2022) Central Bank Policy Mix: Issues, Challenges, and Policy Responses: Handbook of Central Banking Studies (p. 280). Springer.
8. Yilla, K. and Liang, N. (2022) What are macroprudential tools? [Online]. Available at: https://www.brookings.edu/blog/up-front/2020/02/11 what-are-macroprudential-tools/ (Accessed: 15 January 2023)


**ரூ.1,611.2 பில்லியனாக விளங்கியது.** சொத்துக்களின் விரிவாக்கத்திற்கு கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட வளர்ச்சியும் அதனை அடுத்து முதலீடுகள் மற்றும் திரவச் சொத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சியும் முக்கிய தூண்டுதலாக விளங்கின. கடன்களும் முற்பணங்களும் துறையின் மொத்தச் சொத்துக்களில் 74.4 சதவீதத்திற்கு வகைகூறின. துறையின் மொத்தச் சொத்துக்களில் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியலில் நிதிக் குத்தகைகள் ஆதிக்கம் பெற்றிருந்ததுடன், 2021 இறுதியில் 48.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் 41.6 சதவீதத்திற்கு வகைகூறின. வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சலைக் கட்டுப்படுத்துமொரு வழிமுறையாக உந்து ஊர்திகளின் இறக்குமதிகளின் மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட தொடர்ச்சியான கட்டுப்பாடுகளின் முக்கிய காரணமாக, குத்தகைக்குவிடும் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட சுருக்கத்தின் விளைவாக மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் குத்தகைக்குவிடும் சொத்துப்பட்டியலின் பங்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியல் 2021 இறுதியின் 9.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.0 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்து 2022 இறுதியில் ரூ.1,199.2 பில்லியனாக விளங்கியது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியல் வளர்ச்சிக்கு அடகுபிடித்தல்/ தங்கக் கடன்களின் உயர்வு காரணமாக அமைந்ததுடன் இது 2022 இறுதியில் 77.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

**2022 காலப்பகுதியில், தற்பொழுது நிலவுகின்ற அசாதாரணமான பேரண்ட பொருளாதார சூழ்நிலைமைகளின் காரணமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு உதவி வழங்குவதற்காக கடன் மீள்கொடுப்பனவுகள் மீது படுகடன் சட்ட இசைவுத்தாமதமும் சலுகைகளும் வழங்கப்பட்டன.** 2022 இறுதியளவில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களில் ஏறத்தாழ 13.2 சதவீதம் சட்ட இசைவுத்தாமதத்தின் கீழ் இருந்தன.

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலானது பங்குரிமைகள், கம்பனி படுகடன் சாதனங்கள், அரச பிணையங்கள் மற்றும் முதலீட்டுச் சொத்துக்கள் என்பன மீதான முதலீடுகளை உள்ளடக்கியிருந்தன.** 2022இல்

8

அட்டவணை 8.11
கொவிட் 19 இனால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு மாச்சு 2020 முதல் வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத் தாமதத்தின் நிலைமை

| படுகடன் சட்ட இசைவுத் தாமத கட்டம் | ஒப்புதல் அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | படுகடன் சட்ட இசைவுத் தாமதம் வழங்கப்படுகையில் மொத்த வெளிப்படு மூலதனம் (ரு.பில்) | 31.12.2022 இல் உள்ளவாறாக மொத்த வெளிப்படு மூலனதம் (ரு.பில்) |
|---|---|---|---|
| கட்டம் 1 (மாச்சு 2020 - செத் 2020) | 814,336 | 312.61 | 44.58 |
| கட்டம் 2 (ஒத் 2020 - மாச்சு 2021) | 99,912 | 59.93 | 11.82 |
| கட்டம் 3 (ஏப் 2021 - செத் 2021) | 492,734 | 168.14 | 68.41 |
| கட்டம் 4 (ஒத் 2021 - மாச்சு 2022) | 54,387 | 37.63 | 17.16 |
| கட்டம் 5 (யூலை 2022 - சன 2023) | 42,283 | 20.19 | 32.62 |
| **மொத்தம்** | **1,503,652** | **வி.கி.*** | **174.58** |


*ஒரே கடன்பாட்டாளர்கள் பல திட்டங்களினூடாக சட்ட இசைவுத் தாமதத்தினை பெற்றுக்கொண்டிருக்கக்கூடும்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2021இன் 5.4 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ.199.6 பில்லியனை அடைந்து 19.3 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு, குறுங்கால முதிர்ச்சிகளுக்கான வட்டி வீதங்கள் அதிகரித்தமையின் விளைவாக 12 மாதங்களுக்கும் குறைவான முதிர்ச்சியைக் கொண்ட அரச பிணையங்கள் மீதான அதிகரித்த முதலீடுகளே முக்கிய காரணமாகும். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் வைத்திருக்கப்படும் காசு மற்றும் மீதிகளை முக்கியமாக உள்ளடக்கிய ஏனைய சொத்துக்களும் 2021இன் 12.4 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 19.4 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு குறிப்பாக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் செய்யப்பட்ட அதிகரித்த வைப்புக்களே காரணமாகும்.

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் பொறுப்புக்களில் வாடிக்கையாளர் வைப்புக்கள் தொடர்ந்தும் ஆதிக்கம் பெற்றிருந்ததுடன் மொத்தப் பொறுப்புக்களில் 53.7 சதவீத பங்கிற்கும் வகைகூறின.** 2022 காலப்பகுதியில் வைப்புக்கள் ரூ.81.1 பில்லியனால் அதிகரித்து ரூ.864.4 பில்லியனாக விளங்கி 10.4 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில், கடன்பாடுகள் ரூ.322.6 பில்லியனுக்கு 1.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

வரைபடம் 8.9
சாதனங்கள் வாரியான (திரண்ட) கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2021 மற்றும் 2022




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.12
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் வைப்புக்களின் உள்ளடக்கம்

| விடயம் | தொகை (ரூ.பில்) | | உள்ளடக்கம் (%) | |
|---|---|---|---|---|
| | 2021 | 2022 (அ) | 2021 | 2022 (அ) |
| தவணை வைப்புக்கள் | 744.3 | 830.2 | 95.0 | 96.0 |
| சேமிப்பு வைப்புக்கள் | 38.4 | 34.3 | 4.9 | 4.0 |
| வைப்புச் சான்றிதழ்கள் | 0.6 | 0.0 | 0.1 | 0.0 |
| **மொத்த வைப்புக்கள்** | 783.3 | 864.5 | 100.0 | 100.0 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையில் காணப்படும் இடர்நேர்வுகள்


### கொடுகடன் இடர்நேர்வு

**மொத்தச் செயற்படாக் கடன்கள்/ கட்டம் 3 கடன்கள் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 13.9 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 66.1 சதவீதத்தினால் அதிகரித்தது.** உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை 2022 ஏப்பிறல் 01 இலிருந்து செயற்படாக் கடன்களின் நேர அடிப்படையிலான வகைப்படுத்தல், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம்: 9 இனை அடிப்படையாகக் கொண்ட கட்டம் 3இன் மூலம் பதிலீடு செய்யப்பட்டவிடத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் முன்னைய உரிய காலம் கடந்த பின்னர் 180 நாள் கொண்ட வகைப்படுத்தலுக்குப் பதிலாக கட்டம் 3 கடன்களின் வகைப்படுத்தலுக்காக 120 நாள் காலப்பகுதியைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கு கடன் வகைப்படுத்தல் முறையியலினை மாற்றியதன் விளைவு, காலங்கடந்த படுகடன் சட்ட இசைவுத்தாமதமும் மோசமான பேரண்ட பொருளாதார நிலைமைகளும் துறையின் மொத்தக் கட்டம் 3 கடன்களின் விகிதத்தினை 2021 இறுதியில் அறிக்கையிட்ட 11.0 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 17.5 சதவீதத்திற்கு கணிசமாக அதிகரித்தது.

**தேறிய பெறுமதி இழக்கப்பட்ட கட்டம் 3 கடன்களின் விகிதம் 2021 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 2.7 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 12.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.** கட்டம் 3 கடன்களுக்கான பெறுமதியிழத்தல் காப்பு விகிதம்[4] 2022 இறுதியில்

4 2022 ஏப்பிறல் தொடக்கம் ஏற்பாட்டுக் காப்பு விகிதமானது கட்டம் 3 கடன்களினால் விடுக்கப்பட்ட கட்டம் 3 பெறுமதி இழப்பாகக் கணிக்கப்பட்ட பெறுமதி இழப்பு காப்பு விகிதத்தினால் பதிலீடு செய்யப்பட்டது.

வரைபடம் 8.10
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகள் துறையின் செயற்படாக்கடன்கள் மற்றும் ஏற்பாட்டுக்காப்பு




29.6 சதவீதமாக அறிக்கையிடப்பட்டது. வட்டி வீத அசைவுகள், பொருளாதாரச் சுருக்கம், வழங்கப்பட்ட சட்ட இசைவுத் தாமதத் திட்டத்தின் தாக்கம் மற்றும் உயர்ந்த வரிகளின் அறிமுகம் என்பனவற்றை உள்ளடக்கிய அண்மைய சந்தை அபிவிருத்திகள் எதிர்காலத்தில் துறையின் சொத்துத் தரத்தினையும் அதன் செயற்படாக் கடன்களையும் மோசமாகப் பாதிப்படையச் செய்யும்.

### வட்டி வீத இடர்நேர்வு

**இறுக்கமான நாணயக் கொள்கையும் உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்பின் நிச்சயமற்ற தன்மைகள் பற்றிய கரிசனைகளும் திறைசேரி உண்டியல் விளைவு வீதத்தில் கூடியளவு அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தன.** இது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் வைப்புக்கள் மீதும் படுகடன் சாதனங்களின் மீதும் வழங்கப்பட்ட உயர்ந்தபட்ச வட்டி வீதங்களின் மீதும் கடன்வழங்கல் வீதங்களில் செய்யப்பட்ட மேல் நோக்கிய திருத்தங்களிலும் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. வட்டி வீத உணர்திறன் விகிதம் (12 மாதங்களுக்கும் குறைவான முதிர்ச்சிகளுடன் கூடிய வட்டி உழைக்கும் பொறுப்புக்களின் பங்கொன்றாக வட்டி உழைக்கும் சொத்துக்கள்) 2021 இறுதியின் 85.6 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 96.8 சதவீதத்திற்கு அதிகரித்து, 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 அதிகரித்த வட்டி வீதங்களிலிருந்து தோன்றிய வட்டி வீத இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையில் ஏற்பட்ட குறைப்பினை எடுத்துக்காட்டியது.


### சந்தை இடர்நேர்வு

**இத்துறையில் பங்குரிமை இடர்நேர்வு 2022ஆம் ஆண்டு முழுவதும் குறைவாகவே காணப்பட்டது.** பங்குரிமைச் சந்தைக்கான வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் வெளிப்படுத்துகை 2021இன் 0.8 சதவீதத்திலிருந்து 2022இன் மொத்தச் சொத்துக்களில் 0.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

### திரவத்தன்மை இடர்நேர்வு

**கூட்டுத்தொகை அடிப்படையில் துறையானது 2022 காலப்பகுதியில் குறைந்தபட்ச தேவைப்பாடுகளுக்கும் மிக மேலே திரவத்தன்மையினைப் பேணியது.** 2022 இறுதியில் துறையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஒட்டுமொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் திரவச் சொத்துக்கள் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச தேவைப்பாடான ரூ.98.0 பில்லியனுக்கெதிராக ரூ.184.9 பில்லியனாக விளங்கி 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.66.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ரூ.86.9 பில்லியன் கொண்ட திரவத்தன்மை மிகையைப் பதிவுசெய்தது. எனினும், முதிர்வுக்கு முன்னரான எடுப்பனவுகள், கடன்களை மீளச்செலுத்தத் தவறுதல் மற்றும் மோசமான பொருளாதார நிலைமைகள் நிகழுமிடத்து நிதியிடல் வழிகள் கிடைக்காமல் போகுதல் காரணமாக எதிர்காலத்தில் அதிகரித்த திரவத்தன்மை இடர்நேர்வினை துறையானது எதிர்நோக்கலாம்.

வரைபடம் 8.11
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் திரவக் குறிகாட்டிகள்




## இலாபத்தன்மை மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை


**துறையின் இலாபத்தன்மை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியடைந்தது.** துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் 2021இன் ரூ.55.6 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.43.9 பில்லியனுக்கு 21.0 சதவீதத்தினால் குறைவடைந்தமைக்கு வட்டிச் செலவினங்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இலாபத்தன்மையில் ஏற்பட்ட குறைப்பு பங்குரிமை மீதான வருவாய் மற்றும் வரிக்கு முன்னரான சொத்துக்கள் மீதான வருவாய் 2021இன் முறையே 20.2 சதவீதம் மற்றும் 5.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் முறையே 12.6 சதவீதத்திற்கு கணிசமாகவும் 3.7 சதவீதத்திற்கும் குறைவடைந்தமையில் பிரதிபலித்தது. 2022இல் வருமானத்திற்கான செலவு விகிதம் 2021இன் 72.6 சதவீதத்திலிருந்து 2022இல் 87.3 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் வினைத்திறன் விகிதம் 2022 காலப்பகுதியில் 68.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**துறையின் தேறிய வட்டி வருமானம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 18.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.115.2 பில்லியனுக்கு 12.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** இதற்கு, தற்போது நிலவுகின்ற பேரண்ட பொருளாதார சூழ்நிலைகளின் விளைவாக வட்டி வீதங்கள் கணிசமாக அதிகரித்தமையின் காரணமாக வட்டி வருமானம் ரூ.54.7 பில்லியனால் அதிகரித்து 25.2 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தமைக்கிடையிலும் வட்டிச் செலவினங்கள் ரூ.70.9 பில்லியனால் கணிசமாக அதிகரித்து 82.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தமையே காரணமாகும். இதன் விளைவாக, துறையின் தேறிய வட்டி இலாபம் 2021இன் 8.6 சதவீதத்திலிருந்து 2022இல் 6.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து துறையின் இலாபத்தன்மையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பங்களித்தது.

வரைபடம் 8.12
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் இலாபக் குறிகாட்டிகள்




வரைபடம் 8.13
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் இடர்நேர் நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை விகிதம்




**2022 காலப்பகுதியில் வட்டியல்லா வருமானம் 12.1 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்த வேளையில் வட்டியல்லாச் செலவினம் 0.7 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்தது.** செயற்படாக் கடன்களுக்கெதிராகச் செய்யப்பட்ட கடன் இழப்பு ஏற்பாடுகள் ரூ.4.5 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமைக்கு கடன் இழப்பு ஏற்பாடுகள் 2022இன் முதல் ஒரு சில மாதங்களில் மீளத்திருத்தப்பட்டமையே பெருமளவிற்குக் காரணமாகும்.

**இவ்வாண்டுக் காலப்பகுதியில், கூட்டு மொத்த மட்டமொன்றில் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மிக மேலே மூலதனம் பேணப்பட்டமையின் காரணமாக துறை தாக்குப்பிடிக்கும் தன்மையினைக் காட்டியது.** மூலதனத் தளம் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.251.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ரூ.317.5 பில்லியனுக்கு மேம்பட்டமைக்கு, முன்னைய நிதியியல் ஆண்டில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளில் பாரிய பல கம்பனிகளினால் இலாபங்கள் பிடித்துவைக்கப்பட்டமை, பாரியளவு எதிர்மறையான தேறிய பெறுமதிகளைக் கொண்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின்

அட்டவணை 8.13
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் வருமானம் மற்றும் செலவுகளின் உள்ளடக்கம்

| விடயம் | 2021 | | 2022 (அ) | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.பில்) | சராசரி சொத்துக்களின் சதவீதமாக | தொகை (ரூ.பில்) | சராசரி சொத்துக்களின் சதவீதமாக |
| வட்டி வருமானம் | 217.0 | 14.2 | 271.7 | 15.8 |
| வட்டிச் செலவினம் | 85.6 | 5.6 | 156.5 | 9.1 |
| **தேறிய வட்டி வருமானம்** | **131.4** | **8.6** | **115.2** | **6.7** |
| வட்டியல்லா வருமானம் | 49.5 | 3.2 | 43.5 | 2.5 |
| வட்டியல்லா செலவினம் | 87.1 | 5.7 | 87.7 | 5.1 |
| கடன் இழப்பீட்டு ஏற்பாடுகள் (தேறிய) | 11.1 | 0.7 | 6.6 | 0.4 |
| **வரிக்கு முன்னதான இலாபம்** | **82.7** | **5.4** | **64.4** | **3.7** |
| **வரிக்குப் பின்னரான இலாபம்** | **55.6** | **3.6** | **43.9** | **2.6** |

(அ) தற்காலிகமானது
மூலம் : இலங்கை மத்திய வங்கி

8

உரிமம் இடைநிறுத்தப்பட்டமை, பல ஒருங்கிணைப்புக் கொடுக்கல்வாங்கல்கள் நிறைவடைந்தமையின் பெறுபேறாக மேம்பட்ட மூலதனம் என்பன காரணங்களாக அமைந்திருந்த போதும் கூட, 6 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்[5] குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடுகளுக்கு அத்துடன்/ அல்லது மூலதனப் போதுமாந்தன்மை தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாமல் இருந்தன. துறையின் மைய மூலதன, மொத்த மூலதன விகிதங்கள் 2021 இறுதியில் அறிக்கையிடப்பட்ட மட்டமான 15.5 சதவீதத்திலிருந்தும் 17.0 சதவீதத்திலிருந்தும் 2022 இறுதியில் முறையே 20.6 சதவீதத்திற்கும் 22.0 சதவீதத்திற்கும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன.

## முதன்மைத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் பலயீனங்களையும் இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளையும் கட்டுப்படுத்துவதற்காக 2020இல் முதன்மைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.** முதன்மைத் திட்டத்தின் கட்டம் 1 இன் கீழ் 2022 காலப்பகுதியில் 5 கொடுக்கல்வாங்கல்கள் முழுமையாக நிறைவடைந்ததுடன் 2022இல் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட 3 முன்மொழியப்பட்ட இணைப்புக்கள் தற்பொழுது செய்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இணைப்பதற்கான பங்காளரொருவரைக் கண்டறிய முடியாமல் இருக்கும் கம்பனிகளின் உரிமங்களை இரத்துச் செய்வதன் மூலம் சந்தையிலிருந்து வெளியேறப் பணிக்கப்பட்டதுடன் அத்தகைய இரண்டு கொடுக்கல்வாங்கல்கள் தற்பொழுது செய்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## அரச பிணையங்களின் முதனிலை வணிகர் கம்பனிகள்

**2022 இறுதியிலுள்ளவாறு அரச பிணையங்கள் சந்தையில் 6 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 7 முதனிலை வணிகர் கம்பனிகளும் முதனிலை வணிகர்களாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன.** இருப்பினும், பான் ஏசியா பாங்கிக் கோப்பரேஷன் பிஎல்சியும், பேர்ப்பெட்ஜுவல் ரெசரீஸ் லிமிடெட்டும் முதனிலை வணிகர் வியாபாரங்களையும் நடவடிக்கைகளையும் கொண்டு நடத்துவதிலிருந்து முறையே 2017.08.15 அன்றும் 2017.07.06 அன்றும் இடைநிறுத்தப்பட்டன. 2017.07.24ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் முதலாந்தர ஏலங்களில் பங்கேற்பதிலிருந்து என்றஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி தடைசெய்யப்பட்டது. இதன்படி, 2022 இறுதியில் 5 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 5 முதனிலை வணிகர் கம்பனிகளும் முதனிலை வணிகர்களாக அரச பிணையங்கள் சந்தையில் செயற்பட்டன.

### சொத்துக்கள்

**2022இல் முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் ரூ.131.7 பில்லியனுக்கு 67.4 சதவீதத்தினால் அதிகரித்தன.** வர்த்தகப்படுத்தல், விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மற்றும் முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்டவற்றை கொண்ட சொத்துப்பட்டியல் 2022 இறுதியில் ரூ.126.1 பில்லியனாக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 79 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2022 இறுதியில் வர்த்தகப்படுத்தல் மற்றும் முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்டவை ஆகிய இரண்டு சொத்துப்பட்டியல்களும் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட முறையே ரூ.54.9 பில்லியன் மற்றும் ரூ.12 பில்லியனிலிருந்து முறையே ரூ.100.7 பில்லியனுக்கும் ரூ.23.8 பில்லியனுக்கும் அதிகரித்த வேளையில் விற்பனைக்குக் கிடைக்கத்தக்க சொத்துப்பட்டியல் 2021 இறுதியின் ரூ.3.6 பில்லியனிலிருந்து 2022 இறுதியில் ரூ.1.7 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

### இலாபத்தன்மை

**2022 ஆண்டு காலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகள், 2021 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.0.4 பில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் வரிக்குப் பின்னரான இலாபமாக ரூ.1.7 பில்லியனைப் பதிவுசெய்து, இலாபத்தன்மையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது.** அரச பிணையங்களிலுள்ள முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பும் 2022இல் முதனிலை வணிகர் கம்பனிகளினால் பதிவுசெய்யப்பட்ட அதிகரித்த மீள்மதிப்பீட்டு இலாபங்களும் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் பதிவுசெய்யப்பட்ட இலாபங்களுக்கு பெருமளவிற்குப் பங்களித்தன. மேலும், 2022 இறுதியில் முதனிலை வணிகர் கம்பனிகளின் சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குரிமை மீதான வருவாயும் 2021இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 0.7 சதவீதம் மற்றும் 2.5 சதவீதம் கொண்ட எதிர்க்கணியமான வருவாய்களிலிருந்து முறையே 3 சதவீதத்திற்கும் 11.4 சதவீதத்திற்கும் அதிகரித்தன.

### மூலதனம்

**முதனிலை வணிகர் கம்பனிகளின் பங்குரிமை 68.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் ஈட்டப்பட்ட இலாபமே முக்கிய காரணமாகும்.** முதனிலை வணிகர் கம்பனிகளின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் 10 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச தேவைப்பாட்டுத் தொகையினை விட மிக உயர்வாகக் காணப்பட்ட போதும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப்

[5] குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடுகள் அத்துடன்/ அல்லது மூலதனப் போதுமாந்தன்மை தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாத உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மீது வைப்பு உச்ச எல்லை, கடன்வழங்கல் உச்ச எல்லை, புதிய வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதனை மற்றும் புதிய கடன்களை வழங்குதலை முடக்கி வைத்தல் போன்ற ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. மேலும், முதன்மைத் திட்டத்தின் கீழ் பல உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கொடுக்கல்வாங்கல்களை நிறைவு செய்யும் செய்முறையில் காணப்படுகின்றன.

போதுமாந்தன்மை விகிதம் 2021 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 42.8 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 23.2 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்க குறைப்பினைப் பதிவுசெய்தது.

## முதனிலை வணிகர் கம்பனிகள் துறையின் இடர்நேர்வுகள்

### சந்தை இடர்நேர்வு

**முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியலிலுள்ள வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் விகிதம் சிறிதளவால் அதிகரித்தது.** வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் 2021 இறுதியில் 77.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 79.8 சதவீதத்தினைப் பதிவுசெய்து இத்தொழில்துறையின் தொடர்பான சந்தை இடர்நேர்வு வெளிப்படுத்துகையில் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

### திரவத்தன்மை இடர்நேர்வு

**2022 இறுதியிலுள்ளவாறு முதனிலை வணிகர் கம்பனிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டில் காணப்படும் ஓரிரவு எதிர்க்கணிய பொருத்தப்பாடின்மையில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக முதனிலை வணிகர் கம்பனிகளின் ஒட்டுமொத்த திரவத்தன்மை இடர்நேர்வு வெளிப்படுத்துகை அதிகரித்தது.** 2022 இறுதியில் திரவத்தன்மையிலுள்ள ஓரிரவு எதிர்க்கணியமான பொருத்தப்பாடின்மை 2021 இறுதியிலுள்ள ரூ.20.3 பில்லியனிலிருந்து ரூ.78.1 பில்லியனுக்கு 270 சதவீதம் கொண்ட வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. இதற்கு 2022 இறுதியில் 219.9 சதவீதத்தினால் ஓரிரவு பொறுப்புக்கள் கணிசமாக அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். பாரியளவிலான அரச பிணையங்களை உடைமையில் வைத்திருப்பதனையும் ஏதேனும் எதிர்பாராத திரவத்தன்மை இடைவெளியினை நிரப்புவதற்குப் பிணையாக அத்தகைய அரச பிணையங்களைப் பயன்படுத்துவதற்கான ஆற்றலையும் நோக்குகையில் திரவத்தன்மைப் பிரச்சனைகளை எதிர்நோக்கிய ஒரு முதனிலை வணிகர் கம்பனி தவிர்ந்த, மற்றைய முதனிலை வணிகர் கம்பனிகளினது திரவத்தன்மை இடர்நேர்வுத் தோற்றப்பாடு ஆண்டு முழுவதும் குறைவாகவே காணப்பட்டது. பெரும்பாலான முதனிலை வணிகர் கம்பனிகள் ஏற்படக்கூடிய ஏதேனும் திரவத்தன்மை இடைவெளிகளை நிரப்புவதற்கு தயார்நிலை எதிர்பாரா நிதியிடல் ஏற்பாடுகளைக் கொண்டிருந்தன. எனினும், சாத்தியமான படுகடன் மறுசீரமைப்புடன் தொடர்பான நிச்சயமற்ற தன்மைகள் கொடுகடன் இடர்நேர்வுகளையும் திரவத்தன்மை இடர்நேர்வுகளையும் அதிகரிக்கலாம் என்பதுடன் முதனிலை வணிகர் கம்பனிகளின் மூலதன மட்டங்களிலும் மோசமான தாக்கமொன்றினை ஏற்படுத்தலாம்.

## சந்தை நடத்தை

### முதனிலை வணிகர் கம்பனிகளின் முதலாந்தரச் சந்தை நடவடிக்கைகள்

**2022இல் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகள் தொடர்பான முதலாந்தர ஏலங்களில் முதனிலை வணிகர் கம்பனிகளின் பங்கேற்பு கலப்பான செயலாற்றமொன்றினைக் காட்டியது.** 2022இல் நடத்தப்பட்ட 52 திறைசேரி உண்டியல் ஏலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த விலைக்குறிப்பீடுகளில் முதனிலை வணிகர்களின் காத்திரமான பங்கேற்பு 49.5 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 2022 காலப்பகுதியில் நடத்தப்பட்ட 24 திறைசேரி முறி ஏலங்களில் முதனிலை வணிகர் கம்பனிகளின் காத்திரமான பங்கேற்பு 22.4 சதவீதத்திற்கு மாத்திரம் வகைகூறியது.

### முதனிலை வணிகர் கம்பனிகளின் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள்

**முதனிலை வணிகர் கம்பனிகளினால் அரசாங்கப் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி 2022இல் ரூ.15,423.4 பில்லியனுக்கு 204.3 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் இதில் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் 76.4 சதவீதத்திற்கு வகைகூறின.** 2022 காலப்பகுதியில், 2021 உடன் ஒப்பிடுகையில் உடனடிக் கொள்வனவுகள் 94 சதவீதத்தினாலும் உடனடி விற்பனைகள் 80.7 சதவீதத்தனாலும் அதிகரித்தன.

## உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள்

**4 கம்பனிகளை உள்ளடக்கிய உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் துறை 2022 இறுதியில் அதன் சொத்துத் தளத்தில் 18.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியை அறிக்கையிட்டு ரூ.9.9 பில்லியனை அடைந்தது.** உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்களில் மிகப்பெரும் பங்கிற்கு நுண்பாகக் கடன்கள் வகைகூறி 74.1 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தின. 2022 இறுதியில் நுண்பாகக் கடன்கள் 2021 இறுதியின் ரூ.6.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.7.4 பில்லியனாக விளங்கி 8.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியை அறிக்கையிட்டது. 2022 இறுதியில் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் செயற்படாக் கடன்கள் 8.7 சதவீதமாக விளங்கின. 2022இல் துறையின் மொத்த வைப்புத் தளம் 2021இன் ரூ.544 மில்லியனிலிருந்து 2022இல் ரூ.648 மில்லியனுக்கு 19 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. துறையின் மொத்தப் பொறுப்புக்கள் 2021இன் ரூ.5.5 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.7.2 பில்லியனுக்கு 29 சதவீதத்தினால் அதிகரித்ததன் மூலம் பங்குரிமைக்கான படுகடன் விகிதம் 2022 இறுதியில் 4.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. துறையின் மைய மூலதன மட்டம் ரூ.2.5 பில்லியனாக விளங்கியதுடன் அனைத்து

உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளும் மைய மூலதனம் தொடர்பான குறைந்தபட்ச முன்மதியுடைய ஒழுங்குவிதிகளுடன் இணைங்கியொழுகி வந்தன.

## கூறுநம்பிக்கைகள்


**2022 இறுதியில் தொழிற்பாட்டிலிருந்த கூறுநம்பிக்கைகளின் எண்ணிக்கை 2021 இறுதியில் அறிக்கையிட்ட 75 இலிருந்து 80 இற்கு அதிகரித்தது.** கூறுநம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகளின் எண்ணிக்கை 2021 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 16 ஆக மாற்றமின்றிக் காணப்பட்டது. கூறுநம்பிக்கை நிதியம் பணச் சந்தை நிதியம் மற்றும் வருமான நிதியங்களினால் சமமாக ஆதிக்கம் செலுத்தப்பட்டதுடன் கூறுநம்பிக்கை தொழில் துறையில் தலா 22.5 சதவீதத்திற்கு வகைகூறின. மேலும், நிறைகாப்பு நிதியங்கள், வளர்ச்சி நிதியங்கள் மற்றும் சமநிலைப்படுத்தப்பட்ட நிதியங்கள் என்பன கூறுநம்பிக்கை தொழில் துறையில் முறையே 15.0 சதவீதத்திற்கும் 12.5 சதவீதத்திற்கு 12.5 சதவீதத்திற்கு வகைகூறின.

**2022 இறுதியில் கூறுநம்பிக்கைத் துறையின் மொத்த சொத்துத் தளத்தில் சுருக்கமொன்று அவதானிக்கப்பட்டது.** 2022 இறுதியிலுள்ளவாறு துறையின் மொத்தச் சொத்துக்கள் 2021 இறுதியிலுள்ளவாறான ரூ.195 பில்லியனிலிருந்து ரூ.150 பில்லியனுக்கு 23.1 சதவீதத்தினால் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்தது. வெளியிடப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை 2021 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 7,835 மில்லியனிலிருந்து 2022 இறுதியில் 6,283 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப்பட்டிருக்கிறது. எனினும், கூறு உடமையாளர்களின் மொத்த எண்ணிக்கை 2021 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 59,426 இலிருந்து 2022 இறுதியில் 67,912 இற்கு அதிகரித்தது.

**மொத்தச் சொத்துக்களின் சதவீதமாக கூறுநம்பிக்கைகளினால் அரச பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளின் பங்கு**

வரைபடம் 8.14

நிதியங்களின் எண்ணிக்கை அடிப்படையில் கூறு நம்பிக்கை துறையின் வகைப்படுத்தல்




* ஏனையவை: ஷரியா நிதியம் 3, டொலர் நிதியம் 3, ஆரம்ப பங்கு வழங்கும் நிதியம் 1 மற்றும் வளர்ச்சி மற்றும் நிலையான வருவாய் நிதியம் 1

*மூலம்:* இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

அட்டவணை 8.14

கூறு நம்பிக்கைகள் துறையின் செயலாற்றம்

| விடயம் | 2021(அ) | 2022(ஆ) |
|---|---|---|
| கூறு நம்பிக்கைகளின் எண்ணிக்கை | 75 | 80 |
| உரிமையாளர்களின் மொத்த எண்ணிக்கை | 59,426 | 67,912 |
| வழங்களில் உள்ள கூறுகளின் எண்ணிக்கை (மில்) | 7,835 | 6,283 |
| மொத்த சொத்துக்கள் (ரூ. பில்) | 195 | 150 |
| தேறிய சொத்துப் பெறுமதி (ரூ. பில்) | 191 | 143 |
| பங்குரிமை மூலதன்த்திலான முதலீடுகள் (ரூ. பில்) | 17.6 | 11.8 |
| மொத்த தேறிய சொத்துக்களின் பங்கு (%) | 9.1 | 7.9 |
| அரச பிணையங்களிலான முதலீடுகள் (ரூ. பில்) | 23.4 | 84.9 |
| மொத்த தேறிய சொத்துக்களின் பங்கு (%) | 12.1 | 56.7 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
இலங்கை கூறு நம்பிக்கைகளின் சங்கம்

**2021 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 12.1 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 56.7 சதவீதத்திற்கு கணிசமானளவிற்கு அதிகரித்தது.** அதேவேளை, தேறிய சொத்துக்களின் சதவீதமாக பங்குரிமையில் செய்யப்பட்ட முதலீடுகள் 2021 இறுதியின் 9.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 7.9 சதவீதத்திற்கு குறைவடைந்தது.

## காப்புறுதித் துறை

**மோசமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளிலிருந்து தோன்றிய சவால்களுக்கு மத்தியிலும் காப்புறுதித் துறை 2022 இறுதியில் சொத்துத் தளம் மற்றும் மொத்தமாக எழுதப்பட்ட கட்டுப்பணம் ஆகிய நியதிகளில் மிதமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.** துறையானது 2022 இறுதியில் தொழிற்பாட்டிலுள்ள 27 கம்பனிகளை உள்ளடக்கியிருந்ததுடன் இதில் 14 பிரத்தியேகமாக நீண்ட காலக் காப்புறுதிக் கம்பனிகளாகவும் 11 பிரத்தியேகமாக பொதுக் காப்புறுதிக் கம்பனிகளாகவும் விளங்கிய வேளையில் 2 நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களாகக் காணப்பட்டன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்தக் கட்டுப்பணத்தினை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட இலங்கையில் காப்புறுதியின் நுழைவு 2021ஆம் ஆண்டிற்கான 1.4 சதவீதத்திலிருந்து 2022ஆம் ஆண்டில் 1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, உயர் பணவீக்கத்தால் தூண்டப்பட்ட சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சி மற்றும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் மொத்தமாக எழுதப்படட கட்டுப்பணத்தில் காணப்பட்ட குறைவடைந்து செல்லும் வளர்ச்சி என்பன முக்கிய காரணங்களாகும். இலங்கையில் காப்புறுதியின் நுழைவு அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு தொடர்ந்தும் குறைவாகவே காணப்படுகிறது. 2022ஆம் ஆண்டுப்பகுதியில் நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி துணைத் துறைகளின் காப்புறுதி நுழைவு முறையே 0.6 சதவீதமாகவும் 0.5 சதவீதமாகவும் காணப்பட்டது.

அட்டவணை 8.15

காப்புறுதித்துறையின் செயலாற்றம்*

| விடயம் | | 2021(அ) | 2022(ஆ) |
|---|---|---|---|
| | | | ரூ. பில்லியன் |
| மொத்தச் சொத்துக்கள் | | 881.8 | 947.3 |
| அரச பிணையங்கள் | | 338.6 | 413.3 |
| பங்குரிமை மூலதனம் | | 55.7 | 47.2 |
| காசு மற்றும் வைப்புக்கள் | | 132.1 | 112.5 |
| மொத்த கட்டுப்பணம் | | 233.5 | 257.6 |
| மொத்த வருமானம் | | 299.0 | 336.1 |
| கட்டுப்பண வருமானம் | | 233.5 | 257.6 |
| முதலீட்டு வருமானம் | | 65.5 | 78.6 |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 42.2 | 50.3 |
| மூலதன போதுமாந்தன்மை விகிதம் (%) | - நீண்டகாலக் காப்புறுதி | 384.0 | 303.0 |
| | - பொதுக் காப்புறுதி | 307.0 | 210.0 |
| பிடித்து வைத்தல் விகிதம் (%) | - நீண்டகாலக் காப்புறுதி | 96.0 | 95.1 |
| | - பொதுக் காப்புறுதி | 76.4 | 75.3 |
| கோரல் விகிதம் (%) | - நீண்டகாலக் காப்புறுதி | 38.5 | 47.1 |
| | - பொதுக் காப்புறுதி | 55.6 | 64.0 |
| இணைந்த தொழிற்பாட்டு விகிதம் (%) | - நீண்டகாலக் காப்புறுதி | 81.1 | 89.5 |
| | - பொதுக் காப்புறுதி | 95.3 | 105.3 |
| சொத்துக்கள் மீதான வருவாய் (%) | - நீண்டகாலக் காப்புறுதி | 3.9 | 3.6 |
| | - பொதுக் காப்புறுதி | 8.0 | 10.1 |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (%) | - நீண்டகாலக் காப்புறுதி | 17.7 | 17.1 |
| | - பொதுக் காப்புறுதி | 16.3 | 20.8 |
| ஒப்புறுதி விகிதம் (%) | - பொதுக் காப்புறுதி | 24.8 | 16.9 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

* தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் நீங்கலான தகவல்


## வியாபார விரிவாக்கம்

**2022 இறுதியில் காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்கள் 7.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து ரூ.947.3 பில்லியனை அடைந்தது.** நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துத் தளம் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 12.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 5.7 சதவீதத்தினால் ரூ.668.7 பில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துத் தளம் 2022 இறுதியில் 11.8 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.278.6 பில்லியனை அடைந்தது. நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துத் தளத்தின் பங்கு காப்புறுதித் துணைத் துறையின் மொத்த சொத்துக்களில் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 71.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் சிறிதளவு வீழ்ச்சியடைந்ததெனினும் 70.6 சதவீதத்தில் தொடர்ந்தும் உயர்வாகக் காணப்பட்டது. இவ்வீழ்ச்சியின் காரணமாக காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்களில் பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் தொடர்பான பங்கு 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 28.3 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 29.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் 2021 இறுதியின் ரூ.233.5 பில்லியனிலிருந்து 2022 இறுதியில் ரூ.257.6 பில்லியனுக்கு 10.3 சதவீதத்தினால் அதிகரித்தது.** நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையினதும் பொதுக் காப்புறுதித் துணைத் துறையினதும் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் மீளாய்விற்குரிய காலப்பகுதியில் முறையே 8.5 சதவீதத்தினாலும் 12.4 சதவீதத்தினாலும் அதிகரித்தன. எனினும், நீண்ட காலக்

வரைபடம் 8.15

காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம்




*மூலம் :* இலங்கை காப்புறுதித்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

காப்புறுதித் துணைத் துறை, துறையின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதிக் கட்டணத்திற்கான முக்கிய பங்களிப்பாளராக தொடர்ந்தும் விளங்கியதுடன் இது 2022 இறுதியில் 52.6 சதவீதம் கொண்ட பங்கினை பதிவுசெய்தது. பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் முக்கிய வியாபார துறையாக விளங்கும் வாகனக் காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் பொதுக் காப்புறுதியில் 53.5 சதவீதப் பங்கினைப் பிரசன்னப்படுத்தியதுடன் 2022 இறுதியில் 9.5 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டது.

**துறையின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2022 இறுதியில் ரூ.776.6 பில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 5.6 சதவீத்தினால் வளர்ச்சியடைந்தது.** துறையின் முதலீடுகள் அரச பிணையங்கள் மீது தொடர்ந்தும் உயர்ந்தளவிற்கு குவிந்திருந்ததுடன் அரச பிணையங்கள் மீதான நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதித் துணைத் துறைகளின் பங்கு 2021 இறுதியின் 46.1 சதவீதம் மற்றும் 45.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் முறையே 53.8 சதவீதத்திற்கும் 51.3 சதவீதத்திற்கும் அதிகரித்து 2022ஆம் ஆண்டுப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வட்டி வீதங்கள் நிலவியமையை எடுத்துக்காட்டியது. அதேவேளை, நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதித் துணைத் துறைகளின் பங்குரிமை மீதான முதலீடுகளின் பங்கு 2021 இறுதியின் 7.5 சதவீதம் மற்றும் 7.8 சதவீதங்களிலிருந்து 2022 இறுதியில் முறையே 6.2 சதவீதத்திற்கும் 5.8 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது.

## இலாபத்தன்மை மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை

**காப்புறுதித் துறையின் இலாபத்தன்மை 2022ஆம் ஆண்டுகாலப்பகுதியில் அதிகரித்து வரிக்கு முன்னரான இலாபத்தில் 19.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் வரிக்கு முன்னரான இலாபம், 2022 இறுதியில் மொத்த வருமானத்தில் பதிவுசெய்யப்பட்ட 15.4 சதவீத அதிகரிப்புடன் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் 41.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தது. எனினும், நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறை வரிக்கு முன்னரான இலாபத்தில் 1.3

8

சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு 2022 இறுதியிலுள்ளவாறு கோரல்களில் பதிவுசெய்யப்பட்ட 31.5 சதவீத அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

**2021 உடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மீதான வருவாய் என்பன வீழ்ச்சியடைந்த வேளையில் பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குரிமை மீதான வருவாயும் அதிகரித்தன.** 2022 இறுதியில் நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாயும் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீதம் மற்றும் 17.7 சதவீதங்களிலிருந்து முறையே 3.6 சதவீதத்திற்கும் 17.1 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாயும் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.0 சதவீதம் மற்றும் 16.3 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் முறையே 10.1 சதவீதத்திற்கும் 20.8 சதவீதத்திற்கும் அதிகரித்தன.

**நீண்ட கால காப்புறுதித் துணைத் துறையினதும் பொதுக் காப்புறுதித் துணைத் துறையினதும் மொத்தச் சொத்துக்களுக்கான மூலதனம் 2021 இறுதியின் முறையே 21.3 சதவீதம் மற்றும் 49.7 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 20.8 சதவீதத்திற்கும் 47.5 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது.** அதேவேளை, நீண்ட கால காப்புறுதித் துணைத் துறை மற்றும் பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை விகிதங்கள் 2021 இறுதியின் முறையே 384 சதவீதம் மற்றும் 307 சதவீதங்களிலிருந்து 2022 இறுதியில் முறையே 303 சதவீதத்திற்கும் 210 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன.

## ஓய்வுகால நிதியங்கள்

**ஓய்வுகால நிதியங்களின் மொத்தச் சொத்துக்கள் 2022 இறுதியில் ரூ.4,345.0 பில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டு நிதியியல் துறைச் சொத்துக்களில் 13.8 சதவீதத்திற்குப் பங்களித்தது.** எனினும், துறையானது ஊழியர் சேம நிதியத்தின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்ததுடன் இது ஓய்வுகால நிதித் துறையின் மொத்தச் சொத்துக்களில் 79.6 சதவீதத்திற்கு வகைகூறியது. ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் அரச துறை பொதுப் பணிகள் ஊழியர் சேமலாப நிதியம் என அழைக்கப்படும் இரண்டு பொதுவாக முகாமைப்படுத்தப்படும் நிதியங்கள் தொழிற்பாட்டிலிருக்கின்றன. இவை 2022 இறுதியில் ஓய்வுகால நிதித் துறையின் மொத்த சொத்துக்களில் முறையே 10.8 சதவீதத்திற்கும் 2.0 சதவீதத்திற்கும் வகைகூறுகின்றன. மேலும், 2022 இறுதியில் தனியார் துறையினால் முகாமைப்படுத்தப்படும் 117 ஒப்புதலளிக்கப்பட்ட ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள் காணப்படுகின்றன.

## ஊழியர் சேம நிதியம்

**ஊழியர் சேம நிதியம் ஓய்வுகால நிதித் துறையில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தியதுடன் 2022 இறுதியில் இத்துறையின் மொத்தச் சொத்துக்களில் 79.6 சதவீதத்திற்கு வகைகூறியது.** ஊழியர் சேம நிதியத்தின் மொத்தப் பெறுமதி 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.3,166.1 பில்லியனிலிருந்து 2022 இறுதியில் ரூ.3,459.9 பில்லியனுக்கு ரூ.293.7 பில்லியனால் அதிகரித்து 9.3 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்வளர்ச்சிக்கு உறுப்பினர்களின் தேறிய பங்களிப்பு (பெறப்பட்ட பங்களிப்பு மற்றும் மீளளிக்கப்பட்ட நிதியங்களின் தேறிய தொகை) மற்றும் நிதியத்தின் முதலீடுகளினூடாக உருவாக்கப்பட்ட வருமானம் என்பனவற்றின் இணைந்த தாக்கம் பங்களித்தது. உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்புக்கள் 2022 இறுதியில் ரூ.3,380.6 பில்லியனாக விளங்கி 2021 இறுதியின் ரூ.3,066.9 பில்லியனிலிருந்து 10.2 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2022ஆம் ஆண்டிற்கான மொத்தப் பங்களிப்பு ரூ.194.6 பில்லியனுக்கு 17.4 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் 2022இல் உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்ட ரீதியான வாரிசுகளுக்கும் செலுத்தப்பட்ட மீளளிப்பின் மொத்தத் தொகை ரூ.163.0 பில்லியானகக் காணப்பட்டதுடன் இது 2021 இனை விட 37.9 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். 2022இல் இதற்கமைய, நிதியத்திற்கான தேறிய பங்களிப்பு முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.47.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.31.6 பில்லியனாக விளங்கியது. நிதியத்தின் வருடாந்த இலாபம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.299.1 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.264.1 பில்லியனுக்கு 11.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு பட்டியலிடப்பட்ட பங்குரிமைகளின் மீது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.41.8 பில்லியன் கொண்ட தேறல் செய்யப்படாத சந்தைப்படியான இலாபங்களுடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.40.9 பில்லியன் கொண்ட தேறல் செய்யப்படாத சந்தைப்படியான நட்டங்கள் ஏற்பட்டமையே முக்கிய காரமணாகும்.

**நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் (ஏட்டுப் பெறுமதி) 2021 இறுதியின் ரூ.3,173.3 பில்லியனிலிருந்து 2022 இறுதியில் ரூ.3,466.5 பில்லியனுக்கு 9.2 சதவீதத்தினால் அதிகரித்தது.** நிதியத்தின் முதலீட்டுக் கொள்கை உறுப்பினர்களுக்கு இடர்நேர்வு சீராக்கப்பட்ட உகந்த வருவாய் வீதமொன்றினை வழங்குவதனை முக்கிய கவனத்தில் கொண்டிருந்த வேளையில் நிதியத்தின் பாதுகாப்பினையும் மீளளிப்புக் கொடுப்பனவுகளையும் நிதியத்தின் ஏனைய செலவுகளையும் பூர்த்திசெய்யத்தக்க விதத்தில் திரவத்தன்மை போதுமான மட்டத்தில் கிடைப்பதனையும் உறுதிப்படுத்துவதாக இருந்தது. இதற்கமைய, 2022 இறுதியில் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் அரச பிணையங்களிலுள்ள 96.9 சதவீதத்தினையும் பங்குரிமை மூலதனத்திலுள்ள 2.3

சதவீதத்தினையும் கூட்டாண்மைத் தொகுதிக் கடன்களிலுள்ள 0.7 சதவீதத்தினையும் நேர்மாற்றுக் மீள்கொள்வனவு உடன்படிக்கையிலுள்ள எஞ்சிய 0.1 சதவீதத்தினையும் உள்ளடக்கியிருந்தது.

**நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானம் 2022இல் ரூ.315.9 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டின் ரூ.342.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 7.7 சதவீத வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.** வட்டி வருமானம், நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாக தொடர்ந்தும் விளங்கியதுடன் இது 2021இன் ரூ.293.7 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.349.3 பில்லியனுக்கு 18.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. பங்கு இலாப வருமானம் முன்னர் குறிப்பிட்டதைப்போன்று 2021இன் ரூ.6.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.7.5 பில்லியனுக்கு 12.6 சதவீதத்தினால் அதிகரித்தது. பட்டியலிடப்பட்ட பங்குரிமை சொத்துப்பட்டியல் 2021இல் தேறல் செய்யப்படாத சந்தைப்படியான இலாபமான ரூ.41.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் தேறல் செய்யப்படாத சந்தைப்படியான நட்டமாக ரூ.40.9 பில்லியனைப் பதிவுசெய்தது.

**2022இல் நிதியத்தினால் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூ.316.2 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டின் ரூ.342.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 7.6 சதவீத வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.** தொழிற்பாட்டுச் செலவினம் மற்றும் வரிச் செலவினம் என்பனவற்றிற்காக சீராக்கம் செய்யப்பட்டதன் பின்னர் 2022ஆம் ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூ.264.1 பில்லியனாக விளங்கியதுடன் இது 2021இன் ரூ.299.1 பில்லியன் தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் 11.7 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகும். இதற்கமைய, 2022இல் ஊழியர் சேம நிதியத்தின் சராசரி முதலீட்டின் மீதான வருமானம் 9.96 சதவீதமாகக் காணப்பட்டது. பொருட்கள் மற்றும் பணிகளின் விலைகளில் கணிசமான அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டமைக்கிடையிலும் நிதியமானது மொத்த வருமானத்திற்கான தொழிற்பாட்டுச் செலவினத்தின் வீதத்தினை 2022இல் 0.67 சதவீதத்தில் பேணக்கூடியதாக இருந்தது. எனினும், நிதியத்தின் வரிச் செலவினம் 2022இல் வட்டி வருமானமும் பங்கிலாப வருமானமும் அதிகரித்தமையினைத் தொடர்ந்து 2021 உடன் ஒப்பிடுகையில் ரூ.7.3 பில்லியனால் அதிகரித்தது. இருப்பினும்கூட, நிதியியல் சாதனங்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடல்களுக்காக பிரயோகிக்கத்தக்க கணக்கீட்டு நியமங்களான இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம்: 9 பின்பற்றப்படுமிடத்து பட்டியலிடப்பட்ட பங்குரிமைச் சாதனங்கள் சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்டமையினாலும் அத்துடன் சந்தையில் காணப்பட்ட சாதகமற்ற நிலைமைகளினாலும் 2022ஆம் ஆண்டிற்கான முதலீட்டு வருமானத்திலிருந்து ரூ.40.9 பில்லியன் கொண்ட தேறிய இழப்பொன்று பதிவுசெய்யப்பட்டது. மேலும், 2022 ஏப்பிறல் வரை சந்தையில் நிலவிய குறைந்த வட்டி வீதங்களைப் பரிசீலனையில் கொள்கையில் 2022 மேயிற்கு முன்னைய காலப்பகுகளில் முதலீடு செய்யத்தக்க ஒன்றுசேர்ந்த நிதியம் குறைந்த வட்டி வீதங்களில் முதலீடு செய்யப்பட்டமையினால் 2022 மேயிற்கு பின்னர் முதலீடு செய்யப்பட்ட நிதியம் மாத்திரமே உயர்ந்த வட்டி வீத விளைவைப் பெற்றுக்கொண்டது.

அட்டவணை 8.16
**ஊழியர் சேம நிதியத்தின் ஐந்து ஆண்டுச் செயலாற்ற சுருக்கம்**

| விடயம் | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 (அ) |
|---|---|---|---|---|---|
| நிதியத்தின் மொத்தப் பெறுமதி (ரூ.பில்) | 2,289.4 | 2,540.4 | 2,824.3 | 3,166.1 | 3,459.9 |
| உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு (ரூ.பில்) | 2,254.2 | 2,497.6 | 2,767.8 | 3,066.9 | 3,380.6 |
| மொத்த பங்களிப்புக்கள் (ரூ.பில்) | 145.0 | 157.2 | 150.7 | 165.7 | 194.6 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்) | 108.0 | 126.3 | 109.7 | 118.2 | 163.0 |
| தேறிய பங்களிப்பு (ரூ.பில்) | 37.0 | 30.9 | 41.0 | 47.5 | 31.6 |
| அங்கத்தவர் மீதிகளுக்கான வட்டிவீதம் (%) | 9.50 | 9.25 | 9.00 | 9.00 | 9.00 |
| அங்கத்தவர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்) | 18.7 | 19.4 | 19.8 | 20.3 | 20.4 |
| செயற்பாட்டிலுள்ள அங்கத்தவர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்) | 2.9 | 2.9 | 2.6 | 2.5 | 2.4 |

(அ) தற்காலிகமானது
*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**மேலும், இலங்கை மூலதனம் மற்றும் நிதியியல் சந்தையின் பருமனுடன் ஒப்பிடுகையில் நிதியத்தின் பருமனானது வரையறுக்கப்பட்ட முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கியதுடன், ஊழியர் சேம நிதியம் அரச பிணையங்களில் பெரும்பாலும் அதனுடைய முதலீடுகளைச் செய்வதற்கு வழிவகுத்தது.** இறையாண்மை மீதான இத்தகைய அதிக தங்கியிருத்தலானது, சாத்தியமான உள்நாட்டுக் கடன் உச்சப்படுத்தலிற்கான சூழலொன்றில் ஊழியர் சேம நிதியத்திற்கு சில இடர்நேர்வுகளை உருவாக்கியுள்ளது. பாதகமான பொருளாதார மற்றும் நிதியியல் நிலைமைகள் காணப்பட்டதால், நிதியத்தின் முதலீட்டு தீர்மானம் எடுக்கும் செயன்முறையானது ஆண்டு காலப்பகுதியில் சவாலாக இருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட சவால்களைக் கருத்திற்கொண்டு, ஊழியர் சேம நிதியத் திணைக்களமானது, நாணயச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு (முதலீட்டுக் கொள்கைக் கூற்று, தந்திரோபாய சொத்து ஒதுக்கீடு மற்றும் முதலீட்டு வழிகாட்டல்கள்) மற்றும் நடைமுறையிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைக்கு இணங்க, ஒரு உச்சகட்ட இடர்நேர்வு சீராக்கப்பட்ட வருமானத்தை அடைதற்கு வலுவான முதலீட்டு தீர்மானங்களை எடுப்பதற்கு அதனுடைய முதலீட்டு தந்திரரோபாயங்களை மாற்றியமைத்தது.

## ஊழியர் நம்பிக்கை நிதியம்

**ஓய்வுகால நிதித் துறையின் சொத்துத் தளத்தில் 10.8 சதவீதத்திற்கு பங்களிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியம், சொத்துத் தளம் மொத்தப் பங்களிப்புக்கள் மற்றும் முதலீட்டு நியதிகளில் 2022 காலப்பகுதியில் வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.** ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் 16.8 மில்லியன் உறுப்பினர் கணக்குகளில் 2.4 மில்லியன் கணக்குகள் மாத்திரமே 2022 இறுதியில் செயற்படும் கணக்குகளாகக் காணப்பட்டன.

நிதியத்திற்கு பங்களிக்கின்ற தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2021 இறுதியின் 44,501 இலிருந்து 2022 இறுதியில் 68,488 இற்கு அதிகரித்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்த உறுப்பினர் நிலுவை 2022 இறுதியில் 4.1 சதவீத அதிகரிப்பினைக் காட்டி ரூ.422.9 பில்லியனை அடைந்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பெறப்பட்ட மொத்தப் பங்களிப்புக்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 17.4 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.34.8 பில்லியனை அடைந்த வேளையில் உறுப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த நன்மைகள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 26.4 சதவீதத்தினால் அதிகரித்து 2022 இறுதியில் ரூ.25.0 பில்லியனை அடைந்தது.

**அதேவேளை, ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 2022 இறுதியில் ரூ.468.8 பில்லியனுக்கு 11.9 சதவீதத்தினால் அதிகரித்தன.** ஊழியர் நம்பிக்கை நிதியத்தினால் செய்யப்பட்ட முதலீடுகள் 2022 இறுதியில் ரூ.442.5 பில்லியனுக்கு மேம்பட்டது. இது 2021 இறுதியுடன் ஒப்பிடுகையில் 7.8 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். 2022 இறுதியில் இம்முதலீடுகளில் 94 சதவீதம் அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டது. முன்னைய ஆண்டு இறுதியுடன் ஒப்பிடுகையில் 86.7 சதவீதம் பதிவுசெய்யப்பட்டிருந்தது. நிலையான வைப்புக்களில் முதலீடுகளின் பங்கு 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 0.1 சதவீதத்திற்கு கணிசமாக வீழ்ச்சியடைந்தது. ஊழியர் நம்பிக்கை நிதியம் 2022இன் அதன் உறுப்பினர்களின் நிலுவைகளின் மீது 8.80 சதவீதம் கொண்ட வருமானத்தினை செலுத்தக்கூடியதாக இருந்தது. இது, முன்னைய ஆண்டுகாலப்பகுதியில் செலுத்தப்பட்ட 7.30 சதவீதம் கொண்ட வருமானத்தினை விட அதிகமானதாகும்.

### ஏனைய ஓய்வுகால நிதியங்கள்

**ஓய்வுகால நிதித் துறையில் 2.0 சதவீதத்திற்கு வகைகூறிய பொதுப் பணிகள் சேமலாப நிதியம் சொத்துக்கள் மற்றும் முதலீடுகள் நியதிகளில் 2022 ஆண்டுகாலப்பகுதியில் அதிகரித்த வேளையில் தேறிய பங்களிப்பு வீழ்ச்சியடைந்தது.** நிதியமானது 2022 இறுதியில் சொத்துக்களின் நியதிகளில் ரூ.85.9 பில்லியனை அடைந்து 2.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. நிதியத்தின் செயற்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 2021 இறுதியின் செயற்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையான 241,384 உடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 267,367 ஆகக் காணப்பட்டது. அதேவேளை, நிதியத்தின் முதலீடுகளும் 2022 இறுதியில் 5.4 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.85.4 பில்லியனை அடைந்தது. பொதுப் பணிகள் சேமலாப நிதியம் அதன் மொத்த முதலீட்டில் 42.7 சதவீதத்தினை அரச பிணையங்களில் முதலீடு செய்த வேளையில் 2022 இறுதியில் ஏனைய முதலீடுகள் மொத்த முதலீட்டில் 57.3 சதவீதத்திற்கு வகைகூறின. 2022ஆம் ஆண்டுப்பகுதியில் தேறிய பங்களிப்பு முன்னைய ஆய்விற்குரிய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.835 மில்லியன் கொண்ட தேறிய பங்களிப்புடன் ஒப்பிடுகையில் ரூ.262 மில்லியனாகக் காணப்பட்டது. உறுப்பினர் நிலுவைகளின் மீதான வருவாய் வீதம் 2022இல் மாற்றம் எதுவுமின்றி 8.00 சதவீதத்தில் காணப்பட்டது.

**2022 இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேமலாப நிதியங்கள் ஓய்வுகால நிதித் துறையில் 7.6 சதவீதத்திற்குப் பங்களித்தன.** ஒப்புதலளிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேமலாப நிதியங்களினால் உள்ளடக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 122,800 ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டதுடன் நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 2022 இறுதியில் ரூ.330.4 பில்லியனாக இருக்குமென மதிப்பிடப்பட்டது.

அட்டவணை 8.17
ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாற்றம்

| விடயம் | 2021 (அ) | 2022 (ஆ) |
|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் (ரூ. பில்) | 419.1 | 468.8 |
| மொத்த அங்கத்தவர் மீதி (ரூ. பில்) | 406.3 | 422.9 |
| அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்) | 14.7 | 16.8 |
| இயங்கு நிலையிலுள்ள அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்) | 2.1 | 2.4 |
| பங்களிப்புச் செய்யும் தொழில்தருநர்களின் எண்ணிக்கை | 44,501 | 68,488 |
| மொத்த பங்களிப்புக்கள் (ரூ. பில்) | 29.7 | 34.8 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ. பில்) | 19.8 | 25.0 |
| மொத்த முதலீட்டுப்பட்டியல் (ரூ. பில்) | 410.6 | 442.5 |
| இதில்: அரச பிணையங்கள் (%) | 86.7 | 94.0 |
| இதில்: நிலையான வைப்புகள் (%) | 6.9 | 0.1 |
| மொத்த வருமானம் (ரூ. பில்) | 35.5 | 47.5 |
| பகிர்ந்தளிப்பிற்காக உள்ள இலாபம் (ரூ. பில்) | 28.6 | 38.5 |
| முதலீடுகளிலிருந்தான வருவாய் (%) | 8.6 | 9.2 |
| அங்கத்தவர் மீதிகளுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதம் (%) | 7.3 | 8.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* ஊழியர் நம்பிக்கை நிதிச் சபை

## 8.4 நிதியியல் சந்தைகளின் செயலாற்றம்

### உள்நாட்டுப் பணச் சந்தை

### பணச் சந்தையின் திரவத்தன்மை


**2022இன் முதலரைப்பகுதியில் உள்நாட்டுப் பணச் சந்தை விடாப்பிடியாக உயர்ந்த மட்டத்திலான பற்றாக்குறையினை தொடர்ச்சியாகக் கொண்டிருந்த போதும், 2022 திசெம்பர் இறுதியில் அதன் திரவத்தன்மைப் பற்றாக்குறை கணிசமாக வீழ்ச்சியடைந்து 2021 திசெம்பர் இறுதியுடன் ஒப்பிடுகையில் ரூ.231 பில்லியனைப் பதிவுசெய்தது.** 2021 திசெம்பர் இறுதியில் ரூ.366 பில்லியனாக விளங்கிய திரவத்தன்மைப் பற்றாக்குறை 2022இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் கணிசமாக அதிகரித்து, 2022 ஏப்பிறல் இறுதியில் ரூ.688 பில்லியன் கொண்ட உச்சமட்டத்தினைப் பதிவுசெய்தது. முதலாந்தர ஏலங்களில் மத்திய வங்கியினால் திறைசேரி உண்டியல்களுக்கான கொள்வனவு அதேபோன்று அரசாங்கத்திற்கு தற்காலிக முற்பணங்களின் வழங்கல் மற்றும் மத்திய வங்கியினால் செய்யப்பட்ட இலாப மாற்றல்கள் என்பன திரவத்தன்மையினை

உள்ளீடு செய்த போதும், 2022 காலப்பகுதியில் திரவத்தன்மையில் காணப்பட்ட கணிசமான உயர்ந்த பற்றாக்குறை முக்கியமாக உரிமம்பெற்ற வங்கிகளிலிருந்து நாணய எடுப்பனவுகள், அட்டவணையிடப்பட்ட வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகள், அதேபோன்று முதிர்ச்சியடைந்த வெளிநாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதிக்காக வெளிநாட்டுச் செலாவணி விற்பனை என்பனவற்றிலிருந்து தோன்றியது. எனினும், உயர்ந்த சந்தை வட்டி வீதங்களின் காரணமாக வங்கித்தொழில் துறையில் வைப்புக்கள் அதிகரித்தமை, அரசாங்கத்தின் அவசர காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகளுக்கு உதவுகின்ற விதத்தில் சிறப்பு வழங்கல்களூடாக திறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கியின் கொள்வனவு என்பனவற்றின் காரணமாக 2022 மேயிலிருந்து திரவத்தன்மைப் பற்றாக்குறையில் படிப்படியான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், குறிப்பிட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் காணப்பட்ட கணிசமான திரவத்தன்மைப் பற்றாக்குறையினைக் குறைக்கும் நோக்குடன் 2022 காலப்பகுதியில் மத்திய வங்கி தவணை நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களூடாக அவ்வப்போது திரவத்தன்மையினை உள்ளீடு செய்தது. இதன் விளைவாக, 2022 திசெம்பர் இறுதியில் திரவத்தன்மை பற்றாக்குறை வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, 2022 யூன் நடுப்பகுதியிலிருந்து மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களின் ஆரம்பக் கொள்வனவுகளின் காரணமாக ஏற்பட்ட திரவத்தன்மை உள்ளீடுகளின் தாக்கத்தினை ஓரளவு தணிப்பதற்காக, அவசியமானவிடத்து, மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனைகளை மேற்கொண்டது. குறிப்பிட்ட உள்நாட்டு வங்கிகள், குறிப்பாக அரச வங்கிகள் குறிப்பிடத்தக்களவு திரவத்தன்மைப் பற்றாக்குறையினைப் பதிவுசெய்தமைக்கு வங்கித்தொழில் துறையிலிருந்தான அரசின் அதிகரித்த கடன்பாடுகள் முக்கிய காரணமாக அமைந்த வேளையில் வெளிநாட்டு வங்கிகள் குறிப்பிடத்தக்களவு திரவத்தன்மை மிகைகளைப் பதிவுசெய்தமையால் சந்தை திரவத்தன்மையானது 2022இல் சீரற்ற பகிர்ந்தளிப்பினை எடுத்துக்காட்டியது.

## பணச் சந்தை வட்டி வீதங்கள்


**சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையினை நோக்கி நகர்ந்து துணைநில் வீத வீச்சில் நிலையாகக் காணப்பட்டது.** தொடர்ச்சியான இறுக்கமான நாணய கொள்கை நிலையுடன் இசைந்து செல்லும் விதத்தில் மத்திய வங்கி அதன் கொள்கை வட்டி வீதங்களை 2022 காலப்பகுதியில் நான்கு தடவைகளில் மொத்தமாக 950 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்தமையின் மூலம் 2022 இறுதியில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 14.50 சதவீதத்திற்கும் 15.50 சதவீதத்திற்கும் அதிகரித்தன. இறுக்கமான நாணய நிலைமைகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் தொடர்ந்தும் துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையில் காணப்பட்டதன் மூலம் 2022 திசெம்பர் இறுதியில் 15.50 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. 2023இன் முதல் காலாண்டில் கொள்கை வட்டி வீதங்கள் மேலும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் உயர்த்தப்பட்டமையால், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் அதற்குச் சமமான அளவால் மேல் நோக்கித் திருத்தப்பட்டது. நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையில் ஊசலாடிக் கொண்டிருந்த போதும் அழைப்புப் பணச் சந்தை 2022 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து குறைந்தளவு செயற்பாட்டினைக் கொண்டிருந்தது. குறிப்பாக, இறைத் துறை அபிவிருத்திகள்

வரைபடம் 8.16
பணச்சந்தை திரவத்தன்மையின் நாளாந்த மாற்றங்களை பாதித்தக் காரணிகள்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.17
திறந்த சந்தை தொழிற்பாட்டு ஏலங்கள், துணைநில் வசதி, துணைநில் வீச்சு மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

8

பற்றிய ஊகத்தினால் சந்தைகளில் நிச்சயமற்ற தன்மை அதிகரித்தமைக்கிடையில் சந்தைப் பங்கேற்பாளர்களினால் விதிக்கப்பட்ட கடுமையான இணைத்தரப்பு வரையறைகள் காரணமாக ஓரிரவு அழைப்புப் பணச் சந்தையின் கொடுக்கல்வாங்கல்கள், ஆண்டின் முதல் ஒரு சில மாதங்களுடன் ஒப்பிடுகையில் கணிசமானளவிற்கு குறைவாகக் காணப்பட்டன. சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தின் அசைவுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் பரந்தளவிற்கு நகர்ந்து, 2022 திசெம்பர் இறுதியில் 15.50 சதவீதமாகக் காணப்பட்டது. அதேவேளை, பங்கேற்கும் நிறுவனங்கள் துணைநில் கடன்வழங்கல் வசதியூடாக நிதிகளைக் கடன்படுவதற்கு அல்லது மிகையான நிதிகளை துணைநில் வைப்பு வசதியில் வைப்புச் செய்வதற்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வசதிகளின் மீது தொடர்ந்தும் தங்கியிருந்தன. உயர்ந்தளவு திரவத்தன்மைப் பற்றாக்குறைகளைக் கொண்ட பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் அமைப்பியல் சார்ந்த திரவத்தன்மை

அட்டவணை 8.18

திறந்த சந்தை தொழிற்பாடுகள் மற்றும் பணச் சந்தை கொடுக்கல்வாங்கல்களின் சாராம்சம்

| கொடுக்கல்வாங்கல்கள் | அளவு (ரூ.பில்) | | வருட இறுதியில் உள்ளவாறான நிறையேற்றப்பட்ட சராசரி வட்டிவீதம் (குறைந்தது-கூடியது)% | |
|---|---|---|---|---|
| | 2021 | 2022 | 2021 | 2022 |
| **சந்தை** | | | | |
| அழைப்புப் பணம் (ஓரிரவு) | 7,935 | 3,746 | 4.53 - 5.97 | 5.94 - 15.50 |
| மீள்கொள்வனவு (ஓரிரவு) | 3,533 | 1,568 | 4.55 - 6.00 | 5.95 - 15.50 |
| **திறந்த சந்தை தொழிற்பாடுகள்** | | | | |
| **ஓரிரவு அடிப்படையில்** | | | | |
| மீள்கொள்வனவு | 1,183 | 1,533 | 5.71 - 5.99 | 5.96 - 6.49 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | - | - | - | - |
| திரவத்தன்மை ஆதரவு வசதி (அ) | - | - | - | - |
| **குறுங்கால அடிப்படையில்** | | | | |
| மீள்கொள்வனவு | 423 | 22 | 5.96 - 5.99 | 5.95 - 6.49 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | - | 235 | - | 7.50 |
| திரவத்தன்மை ஆதரவு வசதி (அ) | - | - | - | - |
| **நீண்டகால அடிப்படையில்** | | | | |
| மீள்கொள்வனவு | 60 | - | 6.04 - 6.05 | - |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 204 | 955 | 6.13 - 7.20 | 7.73 - 33.07 |
| திரவத்தன்மை ஆதரவு வசதி (அ) | - | - | - | - |
| **உடனடி விற்பனை/ கொள்வனவு அடிப்படையில்** | | | | |
| திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு | - | - | - | - |
| திறைசேரி முறிகளின் கொள்வனவு | - | - | - | - |
| திறைசேரி உண்டியல்களின் விற்பனை | 14 | 24 | 7.00 - 7.23 | 20.75 - 26.97 |
| திறைசேரி முறிகளின் விற்பனை | - | - | - | - |
| **துணைநில் வசதி (கொள்கை வட்டிவீதங்களில்)** | | | | |
| துணைநில் வைப்பு வசதி | 29,450 | 54,528 | 5.00 (ஆ) | 14.50 (ஆ) |
| துணைநில் கடன் வழங்கல் வசதி | 30,095 | 163,058 | 6.00 (ஆ) | 15.50 (ஆ) |

(அ) திரவத்தன்மை ஆதரவு வசதி என்பது தனித்து முதனிலை வணிகர்களாக இயங்கும் நிறுவனங்களுக்கான திறந்த சந்தை தொழிற்பாடுகளின் கீழ் நேர்மாறு மீள்கொள்வனவு ஏலமொன்றாகும்.

(ஆ) ஆண்டு இறுதி வட்டி வீதங்கள்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

தேவைப்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு சந்தையினை அடிப்படையாகக் கொண்ட நிதியிடல் தேர்வுகளைப் புறக்கணிக்கின்ற விதத்தில் மத்திய வங்கியின் ஓரிரவு வசதிகளின் மீது அளவுக்கதிகமான விதத்தில் தொடர்ந்தும் தங்கியிருந்தன. குறிப்பாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அத்தகைய நடத்தை பணச் சந்தைக் கொடுக்கல்வாங்கல் செயற்பாட்டையும் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகளின் காத்திரமான தன்மையினையும் பாதித்தது. எனவே, 2023 சனவரி 16 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளை அவற்றின் மிகையான திரவத்தன்மையினை வைப்புச் செய்து வட்டியை உழைப்பதற்கு அனுமதிக்கின்ற ஓரிரவு வைப்பு வசதியான துணைநில் வைப்பு வசதி கலண்டர் மாதமொன்றிற்கு உயர்ந்தபட்சம் 5 தடவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. அதேநேரம் ஏதேனும் மேலதிக திரவத்தன்மைப் பற்றாக்குறைத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்ய மத்திய வங்கியிலிருந்து ஓரிரவு அடிப்படையில் நாளின் இறுதியில் வழங்கப்படும் வசதியான துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் குறிப்பிட்ட ஒரு நாளில் ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினதும் நியதி ஒதுக்கத் தேவைப்பாட்டில் 90 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. திரவத்தன்மைப் பிரச்சனைகளைச் சரிசெய்வதற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளினதும் அவற்றினால் பின்பற்றப்பட்ட வழிமுறைகளினதும் காரணமாக வங்கித்தொழில் துறையில் காணப்பட்ட திரவத்தன்மை மட்டங்களின் முன்னேற்றங்களுடன் இணைந்து பணச் சந்தையில் செயற்பாடு அவதானிக்கப்பட்டது.

## உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

**2022ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2021 இறுதியில் ரூ.200.43 இலிருந்து 2022 இறுதியில் ரூ.363.11 இற்கு 44.8 சதவீதத்தினால் கணிசமாகத் தேய்வடைந்தது.** ஆண்டின் தொடக்கத்தில் ரூ.200.00 இற்கும் ரூ.203.00 இற்குமிடையில் தளம்பலடைந்த செலாவணி வீதம், 2022 மாச்சு 07 முதல் அனுமதிக்கப்பட்ட கூடிய நெகிழ்ச்சித்தன்மையால் விரைவாகத் தேய்வுற்றது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பின்னர் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவிய விடாப்பிடியான வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மைப் பற்றாக்குறையானது, வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்விக்கு மத்தியில் உலகளாவிய தரமிடல் முகவர்களினால் நாட்டிற்கான தரமிடல் தொடர்ச்சியாகக் குறைக்கப்பட்டமையினைத் தொடர்ந்து வெளிநாட்டு நிதியிடலைத் திரட்டுவதில் காணப்பட்ட சவால்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் குறைவடைந்தமையின் காரணமாக மத்திய வங்கியின் பயன்படுத்தத்தக்க வெளிநாட்டு ஒதுக்கு கடுமையாக குறைவடைந்தமை என்பனவற்றின் காரணமாக 2022இன்

சிறப்புக்குறிப்பு 11

## நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு அழுத்தமிகு காலப்பகுதியில் ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கக்கூடிய திரவத்தன்மைப் பிரச்சனைகளை தீர்ப்பதில் மத்திய வங்கியின் தலையீடு

### அறிமுகம்

2007 நடுப்பகுதியில் தோற்றம்பெற்ற உலகளாவிய நிதியியல் நெருக்கடியானது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கான தேவை பற்றி புத்துயிர்பெற்ற கரிசனைகளைத் தோற்றுவித்து ஒட்டுமொத்த முறைமையினை பாதிக்கக்கூடிய நெருக்கடிகளை முகாமைசெய்து, தடுப்பதில் மத்திய வங்கிகளின் அடிப்படை வகிபாகத்தின் மீது கவனம் செலுத்துவதை மீளப் புதுப்பித்தது. உலகளாவிய நிதியியல் நெருக்கடியினால் தோற்றுவிக்கப்பட்ட கொந்தளிப்புக்குப் பதிலிறுத்தி உலகம் முழுவதுமுள்ள மத்திய வங்கிகள், நிதியியல் நிறுவனங்களுக்கும் சந்தைகளுக்கும் அபரிமிதமான திரவத்தன்மையினை வழங்குவதற்கு புதிய அத்துடன் ஏற்கனவே காணப்படுகின்ற இரு வகையான கருவிகளையும் பயன்படுத்தின. 2022 காலப்பகுதியில் இலங்கைப் பொருளாதாரமானது 1948இல் பிரித்தானியாவிடமிருந்து நாடு சுதந்திரமடைவதிலிருந்து மிக மோசமான பொருளாதார நெருக்கடியினை அனுபவித்தது. இந்நெருக்கடி நாட்டின் நிதியியல் முறைமை மீது தாக்கத்தினைக் கொண்டிருந்து, நிதியியல் முறைமையின் இடர்நேர்வுகளையும் பாதிக்கப்படும் தன்மைகளையும் அதிகரித்தது. நாட்டின் பாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளிலிருந்து தோன்றிய பல் கோணங்களிலுமான சவால்களை உள்நாட்டு பணச் சந்தை எதிர்கொண்டது. பணச் சந்தைத் திரவத்தன்மை தொடர்ந்தும் பற்றாக்குறை மட்டங்களிலேயிருந்த அதேவேளை, கண்டிப்பான எதிர்த்தரப்பு வரையறைகளை கடைப்பிடிப்பதன் காரணமாக சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையில் திரவத்தன்மைப் பரம்பலில் குறிப்பிடத்தக்க சமச்சீரின்மை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, திரவத்தன்மையினை முகாமைசெய்வதற்கு சந்தைப் பங்கேற்பாளர்கள் அளவுக்கதிகமாக மத்திய வங்கி வசதிகளை நாடினர். இதனால், நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு, பொருத்தமான கருவிகள் ஊடாக திரவத்தன்மை வழங்குவதில் அதன் வகிபாகத்தினை செயற்படுத்துவதற்கு மத்திய வங்கி பரிகார வழிமுறைகளை எடுத்தது. இலங்கையில் நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு அழுத்தமிகு காலப்பகுதியில் ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கக்கூடிய திரவத்தன்மைப் பிரச்சனைகளை தீர்ப்பதில் மத்திய வங்கியின் தலையீடுகள் பற்றிய விழிப்புணர்வையும் புரிந்துணர்வையும் அதிகரிப்பதற்கு இக்கட்டுரை முனைகின்றது.

### திரவத்தன்மை முகாமைத்துவத்தில் மத்திய வங்கியின் வகிபாகம்

"திரவத்தன்மை" என்ற சொற்பதம் அது பயன்படுத்தப்படுகின்ற சூழ்நிலையைப் பொறுத்து பல பரந்த வரைவிலக்கணங்களைக் கொண்டுள்ளது. பொதுவாக, திரவத்தன்மை பற்றிய மூன்று கருத்துக்கள் திரவத்தன்மை முகாமைத்துவத்துடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. முதலாவது, "சந்தைத் திரவத்தன்மை" இது சந்தை விலைகள் மீது மட்டுப்படுத்தப்பட்ட தாக்கமொன்றுடன் குறுகிய அறிவித்தலொன்றில் அத்துடன் குறிப்பிடத்தக்க இழப்புகளின்றி நிதியியல் சொத்துக்களை வர்த்தகப்படுத்துவதற்கான இயலுமை ஆகும். எனவே, சந்தைத் திரவத்தன்மை என்பது சந்தையின் விரிவு மற்றும் தாக்குப்பிடிக்கும்தன்மை என்பவற்றுடன் தொடர்புபட்டது. இரண்டாவதாக, "நிதியிடல் திரவத்தன்மை" இது சந்தை ஏற்றுக்கொள்ளத்தக்க செலவில் உரியகால விதத்தில் தீர்ப்பனவுக் கடப்பாடுகளை மேற்கொள்வதற்கு சொத்து விற்பனைகள் அல்லது கடன்பெறுதல்கள் மூலம் எவ்வளவு இலகுவாக நிதியியல் நிறுவனங்கள் நிதியங்களைத் திரட்டுகின்றன என்பதனைக் குறிப்பிடுகின்றது. மூன்றாவது, "மத்திய வங்கி திரவத்தன்மை" இது மத்திய வங்கி திரவத்தன்மை நோக்கத்திற்காக குறித்த நாளொன்றில் மத்திய வங்கியொன்றுடன் வைத்திருக்கப்படும் ஒதுக்கு நிலுவைகளின் மொத்தத்தைக் குறிப்பிடுகின்றது. இது, "கூட்டு திரவத்தன்மை" அதாவது நாணயத் தொழிற்பாட்டு நோக்கத்திற்காக வங்கித்தொழில் முறைமைக்கு மத்திய வங்கி வழங்குகின்ற ஒதுக்குகளின் மொத்தத்தை எடுத்துரைக்கின்றது (Cecchetti and Disyatat 2009).

மத்திய வங்கியின் திரவத்தன்மை முகாமைத்துவமானது, குறுகியகால வட்டி வீதங்களைக் கட்டுப்படுத்துவதற்கு வர்த்தக வங்கி ஒதுக்குகளின் தொகையினை வழிநடாத்துவதில் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற சாதனங்கள் மற்றும் கருவிகளைக் கொண்ட தொகுதியொன்றான கட்டமைப்பு என விவரணம்செய்யப்படுகின்றது. மத்திய வங்கி திரவத்தன்மை முகாமைத்துவத்தின் முதன்மைக் குறிக்கோள், குறுகிய கால வட்டி வீதங்களை வழிநடத்துதல் அத்துடன் கொடுப்பனவு முறைமையின் தொடர்ச்சியான தொழிற்படுதல் என்பன ஊடாக கொள்கைக் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு உதவுவதற்கு வங்கித்தொழில் முறைமையில் மொத்த ஒதுக்குகளின் மட்டத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதாகும். எனவே, சந்தை வட்டி வீதங்களும் கொடுகடன் உருவாக்கமும் திரவத்தன்மையுடன் நெருங்கி தொடர்புபட்டுள்ளதனால் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் செயன்முறையினை வசதிப்படுத்துவதில் மத்திய வங்கி திரவத்தன்மை முக்கிய மாறிலியொன்றாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், பரந்த நோக்கில், முனைப்பான திரவத்தன்மை முகாமைத்துவமானது விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு இரண்டையும் எய்துவதில் மத்திய வங்கியின் பொறுப்பாணையினுள் அனைத்து மையத் தொழிற்பாடுகளுடனும் ஓரளவிற்கு தொடர்புபடுகின்றது. நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலில் அது முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுகின்ற அதேவேளை, கொடுப்பனவு முறைமையின் சீரான தொழிற்பாடும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் பாதுகாப்பும் இன்றியமையாததாக இருக்கின்றது. அதற்கமைய, மத்திய வங்கியின் இரு குறிக்கோள்கள் மீதும் தாக்கத்தைக் கொண்டிருக்கின்ற திரவத்தன்மை முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்ற மத்திய வங்கியொன்றின் நாணயக் கொள்கைக் கருவிகள் திரவத்தன்மை மற்றும் பணத்தின் விலை (வட்டி வீதங்கள்) என்பவற்றில் தளம்பலைக் கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொள்கின்றது.

உலகம் முழுவதுமுள்ள மத்திய வங்கிகளும் நாணய அதிகாரசபைகளும் நிதியியல் முறைமையைப் பாதுகாக்கும் நோக்குடன் எதிர்கொள்ளும் சவால்களுக்கு பதிலிறுத்துவதில் திரவத்தன்மை முகாமைத்துவம் மீது மரபுசார்ந்த மற்றும் மரபுசாராக் கொள்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளன. விசேடமாக நெருக்கடி காலப்பகுதியில் மத்திய வங்கி திரவத்தன்மை வழங்குதலானது நிதியளித்தல் மற்றும் சந்தைத் திரவத்தன்மை என்பவற்றுடன் சாதகமாக இணைக்கப்படக்கூடியது. மத்திய வங்கியானது, இறுதித் திரவத்தன்மை வழங்குநர் என்ற ரீதியில் அதன் இயலளவில் வங்கித்தொழில் முறைமைக்கு வேறுபட்ட வழிகளில் திரவத்தன்மையை வழங்குகின்றது. அவற்றிற்கு மத்தியில், திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் ஊடாக கடன் வழங்குதலானது வங்கித்தொழில் முறைமையில் ஒதுக்குகளை முகாமைசெய்வதற்கு முதன்மை திரவத்தன்மை முகாமைத்துவ கருவியொன்றாகக் காணப்படுகின்றது. இதன்மூலம், சாதாரண பொருளாதார நிலைமைகளில் குறுகியகால வட்டி வீதங்களை வழிநடத்துகின்றது. தற்காலிக அடிப்படையில் திரவத்தன்மையை வழங்குவதற்கு மத்திய வங்கி நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. இதனூடாக மத்திய வங்கியானது, பின்னர் நிதியியல் நிறுவனங்களுக்கு அவற்றை மீளவிற்பனை செய்வதற்கிணங்கி அரசாங்கப் பிணையங்களைக் கொள்வனவு செய்கின்றது. அதேபோன்று நிரந்தர அடிப்படையில் திரவத்தன்மையினை வழங்குவதற்கு உடனடி அடிப்படையில் இரண்டாம்தரச் சந்தையில் மத்திய வங்கி பிணையங்களைக் கொள்வனவு செய்கின்றது. போட்டி விலைக்குறிப்பீட்டு ஏலங்கள் ஊடாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் நடாத்தப்படுகின்றமையினால் இவ் ஏலங்கள் குறிப்பான நிதியியல் நிறுவனமொன்றுக்கு திசைப்படுத்தப்படுவதில்லை. அதேபோன்று இத்தொழிற்பாடுகள் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் முறைமையின் சீரான தொழிற்பாட்டினை உறுதிசெய்வதற்கும் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைக்கிசைவாக வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தை வீதங்களுக்கான இலக்கினை அடைவதற்கும் மொத்த ஒதுக்கு மட்டத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான மத்திய வங்கியின் விருப்பத்தில் நடாத்தப்படுகின்றன.

மேலும், ஒட்டுமொத்தமான சந்தைக்குப் பதிலாக குறித்த நிறுவனங்களை இலக்காகக்கொண்டு மத்திய வங்கிகள் திரவத்தன்மை வழங்கும் கொடுக்கல்வாங்கல்களை நடாத்துகின்றன. துணைநில் வசதியானது நிதியிடல் திரவத்தன்மை கிடைக்கப்பெறுவதன் அடிப்படையில் நிதி நிறுவனமொன்றின் மூலம் வேண்டப்படும் போதும், வேண்டப்பட்டவாறும் இடம்பெறக்கூடிய கொடுக்கல்வாங்கல் இவ்வகைக்கு பொதுவான உதாரணமாகும். எடுத்துக்காட்டாக, இலங்கை மத்திய வங்கியின் துணைநில் கடன்வழங்கல் வசதியானது வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தை நிலைமைகள் இறுக்கமடைந்துள்ள போது அல்லது குறித்த நிதியியல் நிறுவனமொன்று குறுகியகால நிதியிடல் அழுத்தங்களை எதிர்கொள்ளுகின்ற போது எஞ்சிய நிதியிடல் தேவைகளை நிறைவுசெய்வதற்கு குறித்த நிதியியல் நிறுவனமொன்றிற்கு நேரடியாக திரவத்தன்மையை வழங்குகின்றது. அதேபோன்று நிதியியல் நிறுவனமொன்று நாளின் இறுதியில் மிகையான நிதியங்களை வைத்திருக்குமாயின் அத்தகைய மிகை துணைநில் வைப்பு வசதியினைப் பயன்படுத்தி மத்திய வங்கியிடம் வைத்திருக்கக்கூடியது என்பதுடன் வட்டி வருமானத்தையும் ஈட்டும். திரவத்தன்மை முகாமைத்துவத்தில் மத்திய வங்கி பயன்படுத்துகின்ற மரபுசார்ந்த கருவிகளாக இக்கருவிகள் கருதப்படுகின்றன. மரபுசார்ந்த கருவிகளையும் திரவத்தன்மை வசதிகளையும் பயன்படுத்துவதற்குப் புறம்பாக, நிதியியல் நெருக்கடிகளும் சந்தை நிச்சயமின்மையும் திரவத்தன்மை தொழிற்பாடுகளை நடாத்துவதற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் நிதியியல் சந்தைக்கும் மத்திய வங்கி திரவத்தன்மையினை வழங்குவதற்கும் மத்திய வங்கிகள் அவற்றின் கருவித்தொகுதிகளை விரிவுபடுத்துவதற்கு தூண்டுகின்றன.

**இலங்கையில் வங்கித்தொழில் முறைமையில் திரவத்தன்மைப் பற்றாக்குறை**

2021 செத்தெம்பர் தொடக்கம், வங்கித்தொழில் முறைமையானது வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகள், நாணய மீளெடுப்புகளால் தூண்டப்பட்ட நிச்சயமின்மை அத்துடன் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீட்டின் விளைவாக உருவான பற்றாக்குறை என்பவற்றின் பகுதியளவு காரணமாக, ஒட்டுமொத்த முறைமையும் பாதிக்கக்கூடிய திரவத்தன்மை பற்றாக்குறையொன்றினை படிப்படியாக அனுபவித்தது. பேரண்ட பொருளாதார சமநிலையினை மீளமைக்கும் நோக்குடன் 2022 காலப்பகுதியில் எதிர்பாராத கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டது. சீர்குலைகின்ற பொருளாதார தோற்றப்பாட்டினை திரும்பச்செய்வதற்கு மத்திய வங்கி கொள்கை வீதங்களை 700 அடிப்படைப் புள்ளிகளால் திருத்தியதுடன் அதனைத்தொடர்ந்து சீராக்கங்களை அறிமுகப்படுத்தியது. எனினும், சந்தைத் திரவத்தன்மை தொடர்ந்தும் பற்றாக்குறை மட்டத்திலேயே இருந்ததுடன் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையில் சமச்சீரற்ற திரவத்தன்மை பரம்பல் மூலம் தோற்றுவிக்கப்பட்ட ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கக்கூடிய திரவத்தன்மை பற்றாக்குறையொன்றை அனுபவித்தது. நிறுவனம் குறித்த பற்றாக்குறைகளுக்கெதிராக ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கக்கூடிய கூட்டு பற்றாக்குறை என்பதனால் அநேகமான வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு சமகாலத்தில் மத்திய வங்கி திரவத்தன்மை தேவைப்பாட்டினை நிறைவுசெய்வது சவால்மிக்கதாகவிருந்தது (நேர்மாற்றுத் தேவைப்பாடு). அத்தகைய, சந்தை முழுவதுமான திரவத்தன்மை நிலைமை, வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தையில் குறைவான செயற்பாட்டுடன் ஒன்றிணைந்து சாத்தியமான நிதியியல் மற்றும் பேரண்ட உறுதிப்பாட்டு விளைவுகளுக்கு வழிவகுக்கக்கூடும். பொருளாதாரத்திற்கு நிதியளிப்பதில் வங்கிகள் முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுவதனாலும் பொருளாதாரத்தின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமையில் முக்கிய இடையேற்பாடாக இருந்துவருவதனாலும் நிதியிடல் திரவத்தன்மையினை நிறைவுசெய்வதற்கு ஒரு வங்கி தவறுகின்றமை ஒட்டுமொத்த கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைக்கும் சாத்தியமான தடை ஏற்படுத்தலாம் என்பதுடன் வங்கிகளில் சாத்தியமான மீளெடுப்புகள் ஊடாக

8

வேறுவகையில் தடுக்கக்கூடிய நிதியியல் நிறுவனங்களின் முறிவடைதலுக்கு வழிவக்கலாம். வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்கிடையிலான ஒன்றுக்கொன்று இணையப்பெற்றுள்ளமை காரணமாக நிதியியல் முறைமை உறுதிப்பாடு மற்றும் பொதுமக்கள் நம்பிக்கை மீது இறுதியாக பரந்தளவிலான தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடிய அதேபோன்று உண்மைப் பொருளாதாரத்தின் மீது முக்கிய தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடிய பரவக்கூடிய அத்துடன் கசிவுத் தாக்கங்கள் காணப்படலாம். ஆகையினால், நிதியியல் நிச்சயமின்மைக்கும் ஒட்டுமொத்தமாக பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நெருக்கடியைத் தடுத்து முகாமைசெய்வதில் மத்திய வங்கியின் வகிபாகத்திற்கும் அச்சுறுத்தலைத் தோற்றுவிக்கின்ற நீண்டகால ஒட்டுமொத்தமாக பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய திரவத்தன்மை பற்றாக்குறைகளைக் கருத்திற்கொண்டு, மத்திய வங்கியானது நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாடு இரண்டையும் உறுதிசெய்வதற்கு பல வகையான மரபுசார்ந்த மற்றும் மரபுசாரா திரவத்தன்மை முகாமைத்துவக் கருவிகளைப் பயன்படுத்தியது.

### திரவத்தன்மை அழுத்தக் காலப்பகுதியின் போது மரபுசார்ந்த கருவிகளின் பயன்பாடு

2022இன் முதலரைக் காலப்பகுதியில் கணிசமாக உயர்வாகக் காணப்பட்ட உள்நாட்டு பணச் சந்தையின் திரவத்தன்மை பற்றாக்குறை, 2022இன் பிந்திய பகுதியில் வீழ்ச்சியடைந்தது. வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு மத்தியில் குறிப்பிடத்தக்க திரவத்தன்மை அழுத்தத்தினை குறைக்கும் நோக்குடன் மத்திய வங்கியானது தவணை நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களூடாக திரவத்தன்மை தொழிற்பாடுகளை விரிவுபடுத்தி திரவத்தன்மையினை உட்செலுத்தியதுடன் கிரமமான அடிப்படையில் திரவத்தன்மைத் தேவைகளை முகாமைசெய்வதில் ஆதரவளிக்கும் தெரிவொன்றாக ஏதேனும் வரையறையின்றி துணைநில் வசதிகளுக்கான பெறுவழிக்கு நிதியியல் நிறுவனங்களை இயலச்செய்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியைப் போன்று, மத்திய வங்கி மூலமான சந்தை தலையீடுகளின் உயர்வான அளவு, சந்தைக்கு போதுமான திரவத்தன்மையினை உட்செலுத்தி மற்றும் கடன்பெறுதல் செலவுகளைக் குறைத்து இதனூடாக நிதியியல் சந்தைகளுக்கும் அவை மீளுவதற்கும் ஆதரவளிப்பதனை இலக்காகக் கொண்டு அதிவிசேட அளவு, வேகம் மற்றும் நோக்கெல்லை என்பவற்றுடன் நிதியியல் சந்தைகளில் மத்திய வங்கி தலையிட்டிருந்தமை ஒன்றும் புதிய நடைமுறையல்ல. அதற்கமைய, நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட தொழில்களின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு நிதியளிப்பதற்கு மத்திய வங்கி மிகையான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடாத்தியதுடன் பல்வேறு வகையான பிணைய உறுதிகளை ஏற்றுக்கொள்வதன் வாயிலாக (சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதி) சலுகைக் கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. எனினும், 2022இன் பிந்திய பகுதியிலிருந்து பணச் சந்தை திரவத்தன்மை நிலைமைகளில் மேம்படுதல்களுக்கு மத்தியிலும் வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தைகளில் குறைவடைந்த செயற்பாட்டின் பகுதியளவான காரணமாக சந்தை வட்டி வீதங்கள் தொடர்ந்தும் உயர்வாகக் காணப்பட்டன. அதே சந்தர்ப்பத்தில், பல உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் நிதியிடல் திரவத்தன்மைத் தேவைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு சந்தை அடிப்படையிலமைந்த நிதியிடல் தெரிவுகளைக் கருத்திற்கொள்ளாது மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் ஓரிரவு துணைநில் வசதிகள் மீது தொடர்ந்தும் மிதமிஞ்சித் தங்கியிருந்தன. ஏனைய நிதியளித்தல் தெரிவுகள் அனைத்தையும் பயன்படுத்தியதன் பின்னர் மாற்றுவழித் தெரிவுகளாக பயன்படுத்துவதற்குக் கிடைக்கப்பெறுகின்ற மத்திய வங்கி மூலம் வழங்கப்படும் ஓரிரவு வசதிகள் மீது மிதமிஞ்சித் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு பரிகார நடவடிக்கைகளை எடுக்கும் ஏதேனும் சமிக்ஞைகளை அத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் எடுத்துக்காட்டவில்லை. உரிமம்பெற்ற வங்கிகளின் அவ்வாறான நடத்தை, பணச் சந்தைகளை, முதன்மையாக வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தையினை மற்றும் மீள்கொள்வனவு சந்தையினை மீளச் செயற்படுத்துவதற்கான மத்திய வங்கியின் முயற்சிகளை பாதித்த அதேவேளை, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் தடைபடும் சாத்தியத்துடன் பொருளாதாரத்தில் நிதியங்களின் சீரான வழிப்படுத்தலுக்கு அச்சுறுத்தலொன்றை தோற்றுவித்தன.

அதற்கமைய, நாணய மற்றும் நிதியியல் துறை உறுதிப்பாட்டினைப் பேணிக்காத்து இடர்நேர்வுகளை தீர்த்தல் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதார சமனிலையை மீள நிலைப்படுத்துவதை நோக்காகக் கொண்டு, 2022 ஏப்பிறல் தொடக்கம் எடுக்கப்பட்ட எதிர்பாராத கொள்கை வழிமுறைகளின் பாகமாக மத்திய வங்கி, திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு கிடைக்கப்பெறும் துணைநில் வசதிகள் மீது கட்டுப்பாடுகளை விதித்தது. ஆகையினால், 2023 சனவரி 16ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மிகையான திரவத்தன்மையினை வைப்புச்செய்து வட்டி ஈட்டுவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளை இயலச்செய்கின்ற ஓரிரவு வைப்பு வசதியான துணைநில் வைப்பு வசதி நாட்காட்டி மாதமொன்றிற்கு உயர்ந்தபட்சம் ஐந்து (05) தடவைக்கு மட்டுப்படுத்தப்பட்டது. அதேவேளை, நாளின் இறுதியில் மத்திய வங்கியிடமிருந்தான திரவத்தன்மை தேவைப்பாடுகளின் ஏதேனும் மேலதிப் பற்றாக்குறையினை நிறைவுசெய்வதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்படும் பிணையஉறுதி வழங்கப்பட்ட வசதியான துணைநில் கடன்வழங்கல் வசதியும் ஏதேனும் தரப்பட்ட நாளில் ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியினதும் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் 90 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. இக்கட்டுப்பாடுகளின் விளைவாக, உரிமம்பெற்ற வங்கிகள் விடாப்பிடியான திரவத்தன்மைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான பரிகார வழிமுறைகளை எடுக்கின்ற அதேவேளை பணச் சந்தையிலிருந்து நிதியங்களைத் திரட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தமையினால் துணைநில் கடன்வழங்கல் வசதியூடான உரிமம்பெற்ற வங்கிகளின் நாளாந்த கடன்பெறுதல் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. மேலும், மிகையான திரவத்தன்மையினை வைப்புச்செய்வதற்கு துணைநில் வைப்பு வசதி கட்டுப்படுத்தப்பட்டமை மூலம் வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தை தொழிற்படத் தொடங்கியதுடன் பற்றாக்குறையுடன் கூடிய வங்கிகளுக்கு மிகையுடன்கூடிய வங்கிகளிடமிருந்து திரவத்தன்மை மீள் ஒதுக்கீடுகள் அவதானிக்கப்பட்டன. அத்தகைய

கட்டுப்படுத்தலிலிருந்து தோன்றக்கூடிய சந்தை இடையூறுகளைக் குறைக்கும் பொருட்டு, மத்திய வங்கியானது அண்மைய காலத்தில் வங்கி உள்ளக சீர்படுத்தலைத் தொடங்கும் வரை வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு திரவத்தன்மை வழங்குவதற்கு தவணை நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடாத்தியது. மேலும், சந்தை திரவத்தன்மை நிலைமைகளை மேம்படுத்துதல் அத்துடன் இலங்கைப் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டை மீள நிலைப்படுத்துவதற்கு உதவிய அறிந்துகொண்ட இடர்நேர்வுக் கரிசனைகளைக் குறைக்கின்ற அதேவேளை நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பேணிக்காப்பதுடன் சேர்த்து சந்தை வட்டி வீதக் கட்டமைப்பில் (சில்லறை வட்டி வீதங்கள் மற்றும் அரசாங்க பிணைய விளைவுகள் இரண்டினதும்) மிதமடைதலைத் தூண்டுவதில் இவ்வழிமுறைகள் ஏதுவாகவிருந்தன.

**திரவத்தன்மை முகாமைத்துவக் கட்டமைப்பின் கீழ் பயன்படுத்தப்படும் மரபுசாராக் கருவிகள்**

எதிர்கால சாத்தியமான நிதியியல் அதிர்வுகளையும் அவற்றின் விளைவுகளையும் முகாமைசெய்வதற்கு மேலதிகமாக, நிதியியல் முறைமையினைப் பாதுகாக்கின்ற அதேவேளை, சமூகச் செலவை மட்டுப்படுத்துவதற்கான முயற்சியெடுத்தலுக்கு மத்திய வங்கி திரவத்தன்மை முகாமைத்துவம் வழங்குவதன் கீழ் பல்வேறு வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. முறைமை முழுவதுமான திரவத்தன்மை இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு மரபுசார்ந்த மற்றும் மரபுசாராக் கொள்கைகள் இரண்டையும் மத்திய வங்கி எதிர்பாரத அளவில் பயன்படுத்தியது. நெருக்கடி தயார்நிலையின் பாகமாகவும் ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கின்ற திரவத்தன்மை அழுத்தத்தினைத் தீர்ப்பதற்கும் மத்திய வங்கி ஆளுகின்ற சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிதியியல் நிறுவனங்களுக்கும் நிதியியல் சந்தைகளுக்கும் திரவத்தன்மை வழங்குவதற்கு மரபுசாரா புதுமையான திரவத்தன்மை வழங்கல் கருவிகளை மத்திய வங்கி வடிவமைத்துள்ளதுடன் சில அத்தகைய வசதிகள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

1. மத்திய வங்கியின் திரவத்தன்மை உதவி வசதியினை அறிமுகப்படுத்தல்

இவ்வசதியானது ஏற்கனவே காணப்படுகின்ற சட்ட ஏற்பாடுகளின் அதாவது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 82 மற்றும் 83(1)(இ) பிரிவுகளின் கீழ் இயலச்செய்யப்பட்டுள்ளது. இதில், எல்லையொன்றுடன் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வசதி வீதத்தின் செலவில் அரசாங்கப் பிணையங்களை வாக்குறுதியளிப்பதன் வாயிலாக பிணையளிக்கப்பட்ட வாக்குறுதிப் பத்திரங்களின் மீது 180 நாட்களை விஞ்சாத ஏதேனும் நிலையான காலப்பகுதிக்கு திரவத்தன்மை உதவி வசதியாக கொடுகடனைப் பெற்றுக்கொள்வதற்கு வங்கித்தொழில் நிறுவனங்கள் தகைமைபெறுகின்றன. கடன் கோரப்பட்ட வங்கியின் திரவத்தன்மை தேவைப்பாடு பற்றிய மதிப்பீடொன்றின் பின்னர் இவ்வசதியின் கீழ் வழங்கப்படும் கொடுகடன் தொகை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படும். இவ்வசதியின் மூலம் ஒப்பீட்டளவில் போட்டி விலையில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைவிட நீண்டகாலத்திற்கு திரவத்தன்மையினைப் பெற்றக்கொள்வதற்கு வங்கிகள் வாய்ப்பினைக் பெறுகின்றன. முறைமை முழுவதுமான திரவத்தன்மை அழுத்தத்தினை தீர்ப்பதற்கும் வங்கித்தொழில் நிறுவனங்கள் மீதான தாக்கத்தினைக் குறைப்பதற்கும் இவ்வசதி பயன்படுகின்றது. ஆகையினால், இவ்வசதி அவசரகால திரவத்தன்மை உதவி வசதியுடன் இணைந்த ஏற்றுக்கொள்ளாத நிலையுடன்கூடிய செயல்திறன் வாய்ந்த கொடுக்கல்வாங்கல் வழியொன்றாகும்.

2. அவசரகால திரவத்தன்மை உதவி வசதியினையும் அதன் தொழிற்பாட்டுக் கட்டமைப்பினையும் வலுப்படுத்தல்

வங்கித்தொழில் துறையின் சாத்தியமான ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கக்கூடிய இடர்நேர்வுக்கு தயாராவதற்கான கொள்கை கருவித் தொகுதிகளின் ஒரு பாகமாக மத்திய வங்கியானது அவசரகால திரவத்தன்மை உதவிக் கட்டமைப்பினை வலுப்படுத்தியுள்ளது. நாணயவிதிச் சட்டத்தின் 86ஆம் பிரிவின் பிரகாரம் நாணய மற்றும் வங்கித்தொழில் உறுதிப்பாட்டினை நேரடியாக அச்சுறுத்துகின்ற அவசரகால நிலையில் அல்லது நிதியியல் பீதி நிகழக்கூடிய காலப்பகுதியில் மத்திய வங்கி வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு அதிவிசேட கடன்களை அல்லது முற்பணங்களை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அவசரகால திரவத்தன்மை உதவி என்பது ஒரு அல்லது சில தனிப்பட்ட வங்கித்தொழில் நிறுவனங்களைப் பாதிக்கின்ற தனிமுரண்பாட்டை (நிறுவனசார் நிறுவனத்திற்குக் குறிப்பான) தீர்ப்பதற்கு திரவத்தன்மையினை வழங்குவதற்கு மத்திய வங்கி பயன்படுத்துகின்ற அதிவிசேட கடன் அல்லது முற்பணம் ஒன்றாகும். அவசரகால திரவத்தன்மை உதவியின் முதன்மைக் குறிக்கோள் கடன்தீராற்றலற்ற தன்மைக்கு வழிவகுக்கின்ற தற்காலிக திரவத்தன்மையற்ற நிலை இடர்நேர்வினைத் தவிர்ப்பதும் தொற்றுகின்ற மற்றும் கசிகின்ற தாக்கங்களைத் தணிப்பதுமாகும். வங்கித்தொழில் நிறுவனமொன்று நிதியிடல் திரவத்தன்மையை நிறைவுசெய்வதில் இன்னல்களை எதிர்கொள்ளுகின்ற போது அது வங்கித்தொழில் நிறுவனங்களின் முறிவடைதலுக்கு வழிவகுக்கலாம். ஆகையினால், நாணயக் கொள்கையின் கீழ் குறுகியகால வட்டி வீதங்களை வழிநடத்துவதற்கு திரவத்தன்மை முகாமைத்துவ ஏற்பாடுகளை நடத்துவதற்குப் புறம்பாக, தற்காலிகத் திரவத்தன்மை பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கின்ற வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு மத்திய வங்கி திரவத்தன்மை வழங்கும் விதிவிலக்கான வழிமுறையொன்றாக வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு அவசரகால திரவத்தன்மை உதவியினை மத்திய வங்கி வசதிப்படுத்துகின்றது. அதற்கமைய, மேற்குறித்த சட்ட ஏற்பாடுகளின் கீழ் கடன்தீராற்றல் மிக்கதாகக் கருத்தப்படுகின்ற ஆனால், தற்காலிகமாக திரவத்தன்மையற்ற நிலையினை எதிர்கொள்ளுகின்ற ஏதேனும் வங்கித்தொழில் நிறுவனம், அதன் திரவத்தன்மை நிலையினை வலுப்படுத்தவதற்கான மத்திய வங்கியின் தற்றுணிவில் பலவகையான பிணைய உறுதிகளுக்கெதிரான அவசரகால திரவத்தன்மை உதவி வசதிக்குத் தகைமையுடையது. இவ்வசதியானது நிலையான வைப்பு வட்டி வீதத்தில் கிடைக்கப்பெறுகின்றது. இது பொதுவாக வங்கி

வீதம் எனக் குறிப்பிடப்படுகின்றது. தற்போது எல்லையொன்றுடன் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதத்தினைப் பயன்படுத்தி இது நிர்ணயிக்கப்படுகின்றது. அதற்கமைய, மத்திய வங்கியின் ஒதுக்கு வடிவிலும் இறுதிக்கடன் ஈவோனாகவிருக்கின்ற மத்திய வங்கியின் மைப் பொறுப்பொன்றாகவும் திரவத்தன்மையினை உருவாக்குவதற்கான தனித்துவமான இயலுமையினைப் பயன்படுத்தி வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு இவ்வசதி வழங்கப்படுகின்றது. மேலும், வங்கித்தொழில் நிறுவனங்கள், குறைவடைந்த நெறிமுறைசார்ந்த அபாயங்களுக்கு வழிவகுக்கின்ற அத்துடன் நாணயக் கொள்கையினை மேற்கொள்வதற்கான அதன் இயலுமையுடன் சுயாதீனத்தினை அல்லது தலையீட்டினை விட்டுக்கொடுக்கக்கூடிய இழப்புகளிலிருந்து மத்திய வங்கியைப் பாதுகாக்கின்ற வங்கித்தொழில் தொழிற்பாடுகள் நியதிகளில் கண்டிப்பான நிபந்தனைகளை கடைப்பிடிப்பதனை உறுதிசெய்தல் வேண்டும்.

மேற்குறித்த திரவத்தன்மை வசதிகளை வழங்குவதன் வாயிலாக, நிதியியல் இடர்பாடு ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் தீர்க்கமாகச் செயற்படுவதற்கும் நிதியியல் முறைமையின் கடன்தீராற்றலை அச்சுறுத்துகின்ற சாத்தியமான பாதிக்கப்படும் தன்மைகளை இல்லாதொழிப்பதற்கும் முன்கூட்டியே செயற்படுவதற்கான அதன் விருப்பத்தினையும் இயலுமையினையும் மத்திய வங்கி எடுத்துக்காட்டுகின்றது. இது, நிதியியல் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையில் முறைமை முழுவதுமான நம்பிக்கையினை மீள நிலைப்படுத்தவதுடன் சொத்துக்களை குறைவானவிலையில் விற்பதனைத் தடுத்து ஒட்டுமொத்தமாக நிதியியல் முறைமையின் தொழிற்படு தன்மையினைக் காக்கின்றது.

**முடிவுரை**

மத்திய வங்கியின் திரவத்தன்மை முகாமைத்துவ நடவடிக்கைகள், மத்திய வங்கியின் பொறுப்பாணையினுள் காணப்படுகின்ற அனைத்து அத்தியாவசியத் தொழிற்பாடுகளுடனும் தொடர்புபட்டவை. நாணயக் கொள்கை ஊடுகடத்தல், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமையின் சீரான தொழிற்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல் என்பவற்றுக்கான முக்கிய தூணொன்றை அது உருவாக்குகின்றது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிசெய்வதில் மத்திய வங்கி திரவத்தன்மை வழங்குதலானது சுதந்திரத்திலிருந்து அதன் மோசமான பொருளாதார நெருக்கடிகாலப்பகுதியை நாடு எதிர்கொண்ட திரவத்தன்மை நெருக்கடிக்கு பதிலிறுத்துவதில் சந்தேகமின்றி இன்றியமையாத பங்காற்றியுள்ளது. வங்கித்தொழில் மற்றும் நிதியியல் முறைமைக்கான எதிர்பாராத சவால்களை முகாமைசெய்வதில் உள்நாட்டு நாணயச் சந்தை நிலைமை மீதான சாத்தியமான திரவத்தன்மை அழுத்தங்கள் அதிகரிப்பதைத் தடுப்பதற்கான புத்தாக்கமிக்க கருவிகளைப் பயன்படுத்தவதற்கு மத்திய வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இப்பின்னணியில், விலை உறுதிப்பாட்டு குறிக்கோளை எய்துவதற்கு மரபுசார்ந்த மற்றும் நியம திரவத்தன்மை முகாமைத்துவக் கருவிகள் நாணயக் கொள்கை நிலைக்கிசைவான மட்டத்தில் குறுகியகால வட்டி வீதங்களை வழிநடாத்துவதை உறுதிசெய்கின்றன. மேலும், மத்திய வங்கியின் ஐந்தொகையின் வலிமை மீது குறிப்பிடத்தக்க தாக்கமின்றி தீவிரமாக இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகளிலும்கூட குறிப்பிடத்தக்க நிதியியல் சந்தைகளை உறுதிப்படுத்துவதற்கு மத்திய வங்கி மரபுசாரா திரவத்தன்மைக் கருவிகளை செயல்திறன்வாய்ந்த விதத்திலும் உரியகாலத்திலும் பயன்படுத்தி ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கின்ற சாத்தியமான இடர்நேர்வுகளை இல்லாதொழிக்கின்றது.

**உசாத்துணைகள்**


1. Allen, F., Carletti, E., Krahnen, J.P., and Tyrell, M. (Eds.). (2011). Liquidity and Crises, Oxford University Press.
2. Andrew, H., and Lorie L. (2022). 'Market dysfunction and central bank tools', Markets Committee Working Group paper, Federal Reserve Bank of New York.
3. Bagehot, W. (1873). 'Lombard Street: A Description of the Money Market', London.
4. Cecchetti, S.G., and Disyatat, P. (2009). 'Central bank tools and liquidity shortages' (www.newyorkfed.org/research/conference/2009).
5. Cao, J., and G. Illing (2008). Liquidity shortages and monetary policy, CESifo Working Paper Series No. 2210, Available at: SSRN: http://ssrn.com/abstract1090825.
6. Corbo, V. (2010). 'Financial stability in a crisis: What is the role of the central bank', BIS Papers, 51, pp. 27-30.
7. Douglas, W.D., Raghuram, G.R. (2003). 'Liquidity Shortages and Banking Crisis', NBER WP Series 10071.
8. Holmström, B., and J. Tirole. (1998). 'Private and public supply of liquidity', Journal of Political Economy, 106, pp. 1–40.
9. Praet, P. (2016). 'The ECB and its role as lender of last resort during the crisis', Speech, 10 February.


முற்பகுதியில் முன்னொருபோதுமில்லாத மட்டமொன்றிற்குள் அமிழ்ந்தது. எனினும், தேய்வு அழுத்தங்கள் அந்நேரத்தில் நிலவிய வெளிநாட்டுச் செலாவணி நிலைமைகளினால் நிர்ப்பந்திக்கப்பட்டவாறு உரிமம்பெற்ற வங்கிகளுக்கான மாறுபாட்டு எல்லையுடன் கூடிய நாளாந்த செலாவணி வீத அறிவித்தலின் மூலம் 2022 மே 13ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பெருமளவிற்குத் தணிக்கப்பட்டது. இதன் விளைவாக, செலாவணி வீதம் 2022இன் பின்னரைப்பகுதியில் ஏறத்தாழ ரூ.363.00இல் படிப்படியாக உறுதியடையத் தொடங்கியது.

**2022இல் இலங்கை மத்திய வங்கி உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் 2021இனைப் போன்றே தேறிய விற்பனையாளராக விளங்கியது.** வெளிநாட்டு ஒதுக்குகள் பெருமளவிற்கு குறைவடைந்தமையின் போதும் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஏற்பட்ட கடுமையான திரவத்தன்மைப் பற்றாக்குறை இன்றியமையாத பொருட்களின் இறக்குமதிக்கு நிதியிடுவதற்கு மத்திய வங்கியை நிர்ப்பந்தித்தது. இதற்கமைய, மத்திய வங்கி 2022இல் ஐ.அ.டொலர் 2,712 மில்லியனை சந்தைக்கு நிரம்பல் செய்தது. உரிமம்பெற்ற

வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பன மீது விதிக்கப்பட்ட கட்டாய வெளிநாட்டுச் செலாவணி விற்பனைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் ஐ.அ.டொலர் 2,133 மில்லியன் கொள்வனவுடன் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை மத்திய வங்கி முகாமைப்படுத்தியது.

**எனினும், உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகள் 2022இன் பிற்பகுதியில் மேம்பட்டன.** மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு மேலதிகமாக, இம்முன்னேற்றங்களுக்கு குறிப்பிட்ட இறக்குமதிகள் மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் வங்கிகளின் முன்மதியுடைய வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை முகாமைத்துவம் மற்றும் எரிபொருள் கேள்விகள் சிக்கனப்படுத்தப்பட்டமையின் காரணமாக அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வி குறைவடைந்தமையுடன் சக்தி தொடர்பான உற்பத்திகள் மற்றும் சமையல் வாயுவிற்கான விலைச் சீராக்கம், செலாவணி வீத தேய்வு மற்றும் உள்நாட்டுச் சந்தை வட்டி வீதங்கள் என்பனவற்றின் தாக்கம் காரணமாக ஏற்பட்ட உயர்ந்த செலவு என்பன வழியமைத்தன. மேலும், 2022இன் இறுதி சில மாதங்களில் பன்னாட்டு நாணய நிதியத்துடனான முன்னேற்றகரமான கலந்துரையாடல்களின் பின்னணியில் செலாவணி வீத உறுதிப்பாடு தொடர்பான சாதகமான மனோபாங்கின் காரணமாக ஏற்றுமதிப் பெறுகைகளை மாற்றுவதில் படிப்படியான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட முன்னெடுப்புக்களின் காரணமாக, தொழிலாளர் பணவனுப்பல்கள் தடைசெய்யப்பட்ட சந்தைகளிலிருந்து அலுவல்சார் மார்க்கங்களூடாக அனுப்பப்படுவது அதிகரித்து வருகின்றமை போல் தென்பட்டது. மேலும், சுற்றுலாவிலிருந்தான வருவாய்களும் மேம்பட்டன. இதன்படி, இன்றியமையாத இறக்குமதிகளுக்கு வசதியளிப்பதற்காக மத்திய வங்கியின் உடனடி தலையீடுகளூடாக வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையின் வழங்கலானது, தொடர்பான அதிகாரிகள் அவர்களது வெளிநாட்டுச் செலாவணித் தேவைப்பாடுகளை சந்தையிலிருந்து பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் இறுதியில் பெரும்பாலும் முடிவுறுத்தப்பட்டது. எனவே, இவ்வபிவிருத்திகளுடன் தொழிலாளர் பணவனுப்பல்களுக்கும் பொதுமக்களுக்கும் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் தொடர்பில் வழங்கப்பட்ட ஊக்குவிப்புத் திட்டங்கள் 2022இல் முடிவுறுத்தப்பட்டன.


**தந்தி மாற்றல்களுக்கான வர்த்தக வங்கிகளின் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் சராசரி வாங்கும் மற்றும் விற்கும் செலாவணி வீதங்கள் 2022 இறுதியில் ரூ.360.41 ஆகவும் ரூ.371.61 ஆகவும் காணப்பட்ட வேளையில் 2021 இற்கான ஒப்பீட்டு எண்தொகைகள் முறையே ரூ.198.50 ஆகவும் ரூ.203.00 ஆகவும் காணப்பட்டன.** அதேவேளை, 2022ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை ரூபா ஸ்டேர்லிங் பவுண், இந்திய ரூபா மற்றும் அவுஸ்திரேலிய டொலர் உட்பட அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் தேய்வடைந்தது.

**2022ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கிகளுக்கிடையிலான உள்ளூர் வெளிநாட்டு செலாவணி சந்தையின் வர்த்தகப்படுத்தல் அளவுகள் 2021 உடன் ஒப்பிடுகையில் 21.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** 2022இல் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2021இன் ஐ.அ.டொலர் 12.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 9.6 பில்லியனாக விளங்கியது. இவ்வபிவிருத்தியுடன் இசைந்து செல்லும் விதத்தில் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சராசரி நாளாந்த அளவுகள் 2021இன் ஐ.அ.டொலர் 50 மில்லியனிலிருந்து 2022இல் ஐ.அ.டொலர் 40 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், 2022ஆம் ஆண்டுப்பகுதியில் முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2021ஆம் ஆண்டுப்பகுதியின் ஐ.அ.டொலர் 6.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4.1 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்ததுடன் உடன் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2021இன் ஐ.அ.டொலர் 2.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 0.8 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

## அரச பிணையங்கள் சந்தை

**அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட படுகடன் தீர்ப்பனவு முடக்கல், முன்னொருபோதுமில்லாத கொள்கை வீத சீராக்கங்கள் மற்றும் அரசாங்கத்தின் கணிசமானளவிற்கு உயர்ந்த பற்றாக்குறை நிதியிடல் தேவைப்பாடுகள் என்பன காரணமாக 2022 நவெம்பர் நடுப்பகுதியில் அரச பிணையங்களின் விளைவு வீதங்கள் வரலாற்றிலே மிக உயர்ந்த மட்டங்களை அடைந்ததுடன் இது, ரூபாப் பிணையங்கள் மீதான வருவாயில் மேல் நோக்கிய அழுத்தத்தினைத் தோற்றுவித்தது.** ஏற்றுக்கொள்ளலின் போதான உயர்ந்தபட்ச விளைவு வீதத்தினை அறிவிக்கும் நிருவாக ஏற்பாட்டின் மூலம் உந்தப்பட்டு நீண்ட காலமாகக் காணப்பட்ட பரந்தளவில் உறுதியான மற்றும் தாழ்வான வட்டி வீதங்கள், மோசமடைந்த சமூகப் பொருளாதார நிலைமைகள் மற்றும் பொதுமக்களிடையே ஏற்பட்ட பரந்தளவிலான அமைதியின்மை போன்ற முக்கிய காரணங்களால் நலிவடைந்த முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் அதனுடன் இணைந்து 2022 ஏப்பிறல் 8 அன்று 700 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரித்த கொள்கை வீதங்கள் என்பனவற்றால் 2022 ஏப்பிறல் பிற்பகுதியில் அரச பிணையங்களின் விளைவுகள் கூரிய மேல் நோக்கிய திருத்தங்களுக்கு உள்ளாகின. அதேவேளை, 2022 ஏப்பிறல் 12ஆம் நாளன்று படுகடன் தீர்ப்பனவு முடக்கப்பட்டது என்ற அறிவித்தல் மற்றும் கிட்டிய எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உள்நாட்டுப் படுகடன் தீர்ப்பனவு செய்யக்கூடிய அரசாங்கத்தின் இயலாற்றல் தொடர்பாக கட்டியெழுப்பப்பட்ட சந்தை ஊகங்கள் அடுத்து வந்த

வரைபடம் 8.18
திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் ஆரம்ப சந்தையில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் (ஆண்டுக்கான சதவீதம்)




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

மாதங்களில் தொடர்ந்த சமூகப் பொருளாதார நெருக்கடிகள் என்பன அரசின் கணிசமான நிதியிடல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்க சவால்களைத் தோற்றுவித்தன. முதலீட்டாளர்களின் முதலீட்டுத் தீர்மானத்தில் அதிகரித்த இடர்நேர்வு மிகை காரணிப்படுத்தப்பட்டதுடன் நிச்சயமற்ற தன்மைகளின் மூலம் உருவாக்கப்பட்ட மேல் நோக்கிய அழுத்தங்கள் அரச பிணையங்களின் விளைவுகள் வரலாற்றிலேயே மிக உயர்ந்த மட்டங்களை அடையச் செய்தது.

**திறைசேரி உண்டியல்களின் முதலாந்தர ஏலங்களில் சந்தை முன்னுரிமையானது 182 நாள் மற்றும் 364 நாள் முதிர்ச்சிகளைக் கொண்ட திறைசேரி உண்டியல்களுடன் ஒப்பிடுகையில் 91 நாள் முதிர்ச்சியை நோக்கிக் காணப்பட்டது.**

அட்டவணை 8.19
அரச பிணையங்களின் விளைவு வீதங்கள்

ஆண்டுக்கான சதவீதம்

| விடயம் | முதலாந்தரச் சந்தை | | இரண்டாந்தரச் சந்தை | |
|---|---|---|---|---|
| | 2021 | 2022 | 2021 | 2022 |
| திறைசேரி உண்டியல்கள் | | | | |
| 91 நாட்கள் | 4.69 - 8.43 | 8.26 - 33.14 | 4.63 - 8.00 | 7.84 - 31.37 |
| 182 நாட்கள் | 4.75 - 8.33 | 8.30 - 32.53 | 4.71 - 8.07 | 8.12 - 30.17 |
| 364 நாட்கள் | 4.98 - 8.26 | 8.39 - 30.50 | 4.94 - 8.33 | 8.28 - 28.78 |
| திறைசேரி முறிகள் | | | | |
| 2 ஆண்டுகள் | 6.19 - 9.36 | 14.41 - 33.01 | 5.25 - 8.96 | 8.59 - 28.29 |
| 3 ஆண்டுகள் | 6.25 - 9.94 | 20.30 - 32.63 | 5.68 - 9.81 | 9.61 - 28.55 |
| 4 ஆண்டுகள் | 6.34 - 8.55 | - | 6.21 - 10.40 | 10.33 - 28.33 |
| 5 ஆண்டுகள் | 6.72 - 11.14 | 11.92 - 31.78 | 6.43 - 11.03 | 10.65 - 27.60 |
| 6 ஆண்டுகள் | 7.44 - 10.90 | 11.70 - 21.86 | 6.61 - 11.26 | 11.04 - 28.02 |
| 8 ஆண்டுகள் | 7.16 - 11.63 | 26.51 - 30.85 | 6.98 - 11.55 | 11.38 - 27.83 |
| 10 ஆண்டுகள் | 8.86 - 11.91 | 12.01 - 30.86 | 7.44 - 11.80 | 11.64 - 28.51 |
| 15 ஆண்டுகள் | 8.44 - 12.06 | - | 7.76 - 11.85 | 11.77 - 27.80 |
| 20 ஆண்டுகள் | - | - | 7.89 - 11.83 | 11.72 - 25.34 |
| 30 ஆண்டுகள் | - | - | 8.04 - 11.81 | 11.78 - 22.96 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.20
திறைசேரி உண்டியல்களின் முதலாந்தரச் சந்தையின் நிறையேற்றப்பட்ட சராசரி முதலாந்தர விளைவு வீதங்கள்

ஓராண்டுக்கான சதவீதம்

| ஆண்டு | முதிர்ச்சி | | | திரண்ட ஆண்டுச் சராசரி |
|---|---|---|---|---|
| | 91-நாட்கள் | 182-நாட்கள் | 364-நாட்கள் | |
| 2018 | 8.40 | 8.58 | 9.68 | 9.36 |
| 2019 | 8.15 | 8.44 | 9.40 | 9.06 |
| 2020 | 5.93 | 5.72 | 6.37 | 6.09 |
| 2021 | 6.35 | 6.13 | 5.33 | 6.24 |
| 2022 | 23.23 | 26.85 | 25.65 | 23.73 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

2022 இறுதியில் 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதங்கள் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.16 சதவீதம், 8.33 சதவீதம் மற்றும் 8.24 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் முறையே 32.64 சதவீதம், 32.20 சதவீதம் மற்றும் 29.27 சதவீதங்களில் பதிவுசெய்யப்பட்டது. திறைசேரி உண்டியல்களைப் போலன்றி திறைசேரி முறிகளுக்கான சந்தை முன்னுரிமைகள் ஒப்பீட்டு ரீதியில் நீண்ட முதிர்ச்சிகளை நோக்கி சாய்ந்து காணப்பட்டது. உயர்வடைந்த வட்டி வீத அமைப்பினைக் கவனத்திற் கொள்கையில் 5 ஆண்டிற்கும் குறைவான முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி முறிகள் ஆண்டின் பின்னரைப்பகுதியின் முதலாந்தர வழங்கலில் வழங்குநரினால் சாதகமானவைகளாக பரிசீலிக்கப்பட்டன. 2022இன் இறுதியில் திறைசேரி முறிகளின் விளைவு வீதங்கள் ஏறத்தாழ 30 சதவீதத்தில் ஊசலாடியதுடன் ஓராண்டிற்கு முன்னர் நிலவிய 12 சதவீதத்திற்கும் குறைவான அளவுடன் ஒப்பிடத்தக்கதாக விளங்கி இவ்வாண்டுப்பகுதியில் அரச பிணையங்களின் விளைவு வீதங்களில் கணிசமான மேல் நோக்கிய சீராக்கங்கள் இடம்பெற்றமையினைப் பிரதிபலித்தன. அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்களும் முதலாந்தரச் சந்தைகளில் அவதானிக்கப்பட்ட விளைவு வீத அசைவுகளை பரந்தளவிற்கு பின்பற்றியிருந்தன.

**2021இல் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதமான 8.70 சதவீதத்தில் வழங்கப்பட்ட ரூ.1,762.0 பில்லியன் திறைசேரி முறிகளுடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதமான 21.29 சதவீதத்தில் ரூ.2,373.0 பில்லியன் தொகை கொண்ட திறைசேரி முறிகள் வழங்கப்பட்டன.** மேலும், 2021இல்[6] 6.09 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்துடன் ரூ.3,821.4 பில்லியன் கொண்ட திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பிடுகையில் 2022இல் 25.21 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தினைக் கொண்ட மொத்த நியதிகளில் ரூ.9,942.8 பில்லியன் திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டன.

6 ஒட்டுமொத்த நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் நிருவாக ரீதியாக அறிவுறுத்தப்பட்ட வழங்கல்களின் செலவுகள் உட்பட, மொத்தச் சராசரிக் கடன்பாட்டுச் செலவுகளையும் உள்ளடக்குகிறது.


8

**அரசாங்கத்தின் நிதியிடல் முக்கியமாக உள்நாட்டு மூலங்களுக்கே வரையறுக்கப்பட்டிருந்தது.** எனினும், நேர்மறையான அபிவிருத்தியை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் மொத்த தேறிய உட்பாய்ச்சல்கள் 2021இன் ஐ.அ.டொலர் 27.3 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 50.6 மில்லியனாக விளங்கியது.

## பங்குரிமைச் சந்தை

**2022ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் பங்குரிமை மூலதனச் சந்தை மோசமான பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளுக்கு மத்தியிலும் விலைச் சுட்டெண்கள் சந்தை மூலதனமயமாக்கல் மற்றும் நாளாந்தப் புரள்வு ஆகிய நியதிகளில் இருண்ட செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தது.** மேலும், விலைச் சுட்டெண்களில் கணிசமானளவு தளம்பல் அவதானிக்கப்பட்டதுடன் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட சுற்றோட்ட நிறுத்தி பல தடவைகள் செயற்படுத்தப்பட்டது. தற்பொழுது இடம்பெற்றுவரும் பொருளாதாரச் சுருக்கம், உயர் பணவீக்கம் உள்நாட்டு ரீதியாகவும் வெளிநாட்டு ரீதியாகவும் கொள்கை வட்டி வீதங்களை உயர்த்துவதற்கான விரைவுபடுத்தப்பட்ட நடவடிக்கைகள், உயர் வரிச் சீராக்கங்களின் காரணமாக கூட்டாண்மை இலாபங்களில் எதிர்பார்க்கப்படும் வீழ்ச்சி, புவிசார் அரசியல் பதற்றங்கள், மோசமான உலகளாவிய பொருளாதார நிலைமைகள் என்பன பங்குரிமைச் சந்தையின் தளம்பல்களுக்குப் பங்களித்தன. அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 2022 சனவரி 19 அன்று 13,462.4 கொண்ட வரலாற்றிலேயே மிகவுயர்ந்த பெறுமதியினைப் பதிவுசெய்த போதும் சுட்டெண்கள் 2021 காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட விரிவடைந்து செல்லும் போக்கிற்கு மாறாக 2022 பெப்புருவரி தொடக்கத்திலிருந்து வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கொன்றினைக் காட்டின. இதற்கிணங்க, அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்ணும் இலங்கை ஸ்டான்டட் அன்ட் புவர் 20 சுட்டெண்ணும் 2022இல் முறையே 30.6 சதவீதத்தினாலும் 37.7 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்த வேளையில் 2022 இறுதியில் சந்தை மூலதனமயமாக்கல் 29.9 சதவீதத்தினால் தேய்வடைந்து 2022 இறுதியில் ரூ.3,847.2 பில்லியனாக அமைந்தது. மேலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக சந்தை மூலதனமயமாக்கல் 2021 இறுதியின் 31.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 15.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2022இல் ரூ.2,972.3 மில்லியன் கொண்ட சராசரி நாளாந்தப் புரள்வினைப் பதிவுசெய்தது. இது 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.4,888.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் கணிசமான வீழ்ச்சியாகக் காணப்பட்டது.

வரைபடம் 8.19
விலைச்சுட்டிகளின் அசைவும் சந்தை மூலதனமாக்கலும்




*மூலம்:* கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

**எனினும், ஒரு சில முக்கிய கம்பனிகளினால் வெளிநாட்டு முதலீடுகள் கவரப்பட்டமையின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல் நியதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது.** இதன்படி, 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.52.6 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 264.4 மில்லியன்) கொண்டதொரு வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.30.6 பில்லியன் கொண்ட (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 74.3 மில்லியன்) தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை சந்தை பதிவுசெய்தது. மேலும், தனிநபர்களினாலும் நிறுவன ரீதியான வெளிநாட்டு முதலீட்டாளர்களினாலும் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் அளவுகள் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.3 சதவீதம் மற்றும் 2.6 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் முறையே 4.7 சதவீதம் மற்றும் 5.5 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தன. எனினும், உள்நாட்டு தனிநபர்களினாலும் நிறுவன ரீதியான முதலீட்டாளர்களினாலும் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் அளவுகள், 2022 காலப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வட்டி வீதங்களுடன் கூடிய நிலையான வருமான முதலீடுகளை நோக்கி முதலீட்டாளர்களின் முன்னுரிமை மாற்றமடைந்தமையின் காரணமாக 2021 இறுதியின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியான 53.3 சதவீதம் மற்றும் 17.8 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 7.2 சதவீதத்திற்கும் 15.1 சதவீதத்திற்கும் கணிசமாக வீழ்ச்சியடைந்தது.

**சந்தை மதிப்பீட்டு குறிகாட்டிகள் 2022 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்கப் பின்னடைவொன்றினைப் பதிவுசெய்தன.** விலை வருவாய் விகிதமும் ஏட்டுப் பெறுமதிக்கான விலையும் 2021 இறுதியில் காணப்பட்ட 13.6 தடவைகள் கொண்ட விலை வருவாய் விகிதத்துடனும் 1.7 தடவைகள் கொண்ட ஏட்டுப் பெறுமதி விலைகளுடனும் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 4.9 மற்றும் 0.9 தடவைகளுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, 4 புதிய ஆரம்பப் பங்கு வழங்கல்கள் காணப்பட்டதுடன் அவை 2022இல் ரூ.4.8

வரைபடம் 8.20
கொழும்புப் பங்கு பரிவர்த்தனையில் வெளிநாட்டுப் பங்கேற்பு




*மூலம்* : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

பில்லியனைத் திரட்டின. இது 2021இன் 13 ஆரம்பப் பங்கு வழங்கல்களுடன் திரட்டப்பட்ட ரூ.12.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் கணிசமானதொரு வீழ்ச்சியாகும்.

## கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் சந்தை

**வர்த்தகப் பத்திரங்கள் சந்தை 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் ஒப்பீட்டு ரீதியில் செயற்பாடற்றதாகக் காணப்பட்டது.** 2021இல் வழங்கப்பட்ட வர்த்தகப் பத்திரங்களூடாகத் திரட்டப்பட்ட ரூ.5.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளின் ஆதரவுடன் வழங்கப்பட்ட வர்த்தகப் பத்திரங்களூடாக ரூ.2.0 பில்லியன் மட்டுமே திரட்டப்பட்டது. வர்த்தகப் பத்திரங்களின் வட்டி வீதங்கள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 6.00 இலிருந்து 12.00 சதவீத கொண்ட வீச்சுடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் 11.00 இலிருந்து 36.00 சதவீதத்திற்கிடையில் வேறுபட்டன.

**கூட்டாண்மை தொகுதிக் கடன் சந்தையின் நடவடிக்கைகள் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்கப் பின்னடைவினைப் பதிவுசெய்தமைக்கு உயர்ந்த வட்டி வீதங்களும் நிலவிய மோசமான பொருளாதார நிலைமைகளும் காரணங்களாக அமைந்தன.** 2022 காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள 4 கம்பனிகளினால் கூட்டாண்மை தொகுதிக் கடன்களில் 10 ஆரம்ப பங்கு வழங்கல்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. இவை 14 கம்பனிகளின் 27 ஆரம்பப் பங்கு வழங்கல்களினூடாக 2021இல் திரட்டப்பட்ட ரூ.84.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.12.7 பில்லியனைத் திரட்டிக் கொண்டன. 2022 காலப்பகுதியில் நிலையான மற்றும் மிதக்கும் வட்டி வீதங்கள் இரண்டுடனும் தொகுதிக் கடன்கள் வழங்கப்பட்ட வேளையில் நிலையான வட்டி வீதங்கள் முன்னைய ஆண்டின் 8.00 இலிருந்து 12.00 சதவீதம் வரையிலான வீச்சுடன் ஒப்பிடுகையில் 15.42 இலிருந்து 28.00 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டன.

## 8.5 அபிவிருத்தி நிதி மற்றும் நிதியினைப் பெறுவதற்கான அணுகு வழிகள்

**2022 காலப்பகுதியில் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் தனிநபர்களுக்கும் தாங்கக்கூடிய நிதியியல் வசதிகளை வழங்கும் நோக்குடன் மத்திய வங்கி பல்வேறு மீள்நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை தொடர்ந்தும் இணைத்தும் வசதிப்படுத்தியும் மற்றும் நடைமுறைப்படுத்தியும் வருகின்ற அதேவேளையில், பரந்த வீச்சிலான கொடுகடன் துணைநிரப்புப் பணிகளையும் வழங்கி வருகிறது.** இதன்படி, 2022 காலப்பகுதியில் 57.6 சதவீதத்திற்கு வகைகூறும் 17 மீள்நிதியிடல் கடன் திட்டங்களின் கீழும் 42.4 சதவீதத்திற்கு வகைகூறும் 5 வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் கீழும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக 63,202 நன்மைபெறுநர்களிடையே ரூ.17,244.4 மில்லியன் கொண்ட மொத்தக் கடன் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

**மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்படும் கடன் திட்டங்களை அணிப்படுத்துவதற்காக 2022 காலப்பகுதியில் மத்திய வங்கி முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த வழிமுறைகளைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தியது.** மோசமான பொருளாதார நிலைமைகளையும் சந்தை வட்டி வீதங்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்களையும் பரிசீலனையில் கொண்டு சௌபாக்கிய கடன் திட்டத்தின் வட்டி வீதம் இவ்வாண்டு காலப்பகுதியில் 6.00 சதவீதத்திலிருந்து 9.00 சதவீதத்திற்கு மேல் நோக்கித் திருத்தப்பட்டது. மேலும், உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதற்கான சாத்தியத்தினைப் பரிசீலனையில் கொண்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் புதிய கடன்களில் 80 சதவீதத்தினை வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, மீன்பிடி மற்றும் தொடர்பான நடவடிக்கைகளுக்கு வழங்குவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டன. மேலும், தற்போதைய பொருளாதார நிலைமைகளினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்காக மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்படும் கடன் திட்டங்களின் கீழ் படுகடன் சட்ட இசைவுத்தாமதம் வழங்கப்பட்டது. மேலும், நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலைமைகள் மற்றும் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான வேளாண்மை நடவடிக்கைகளை ஊக்குவித்தல், உணவு இறக்குமதிகள் மீதான வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்களைக் குறைத்தல், வேளாண்மை உற்பத்திகளை நோக்கி மக்கள் கூடியளவிற்கு ஆர்வம் கொள்வதற்குச் செய்தல், சிறியளவு வேளாண்மையாளர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளை உயர்த்துதல் என்பனவற்றின் பொருட்டான அரசாங்கக் கொள்கைகளையும் பரிசீலனையில் கொண்டு ஏற்புடைத்தான வட்டி வீதங்களையும் நிதி அளவுகளையும் திருத்தியமைப்பதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.

8

**மேலும், மத்திய வங்கி நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் எய்தப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அதன் நடவடிக்கைத் திட்டங்களுடன் அணித்தான தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கண்காணிப்பினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.** தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய நடவடிக்கைத் திட்டத்தின் 82 பரந்தளவு நடவடிக்கைகளில் ஏறத்தாழ 24 சதவீத நடவடிக்கைகள் நிறைவடைந்த வேளையில் ஏனைய நடவடிக்கைகள் முக்கிய நடைமுறைப்படுத்தல் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. குடித்தொகை முழுவதற்குமான நிதியியல் அறிவின் தற்போதைய நிலையினைப் புரிந்து கொள்வதற்காக பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் முதல் தடவையாக நாடளாவிய நிதியியல் அறிவு அளவீடொன்று வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது. அளவீட்டில் கண்டறியப்பட்ட முக்கியமான விடயங்கள் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் விதத்தில் மத்திய வங்கியின் வலைத்தளத்தினூடாக கிடைக்கச் செய்யப்பட்டன. நிதியியல் அறிவு மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதற்கான வழிகாட்டலொன்றினை அபிவிருத்தி செய்வதற்கு உலக வங்கியிடமிருந்து தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆலோசனை பெறும் பணித் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. மேலும், ஏற்றுமதிச் சந்தைகளை பெற்றுக்கொள்வதற்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் காணப்படும் சாத்தியப்பாடுகள் மற்றும் தடைகளை அடையாளம் கண்டுகொள்வதற்காக அளவீடொன்றினை நடத்துவதற்காக முன்னெடுப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

**மத்திய வங்கி அதன் 6 பிரதேச அலுவலகங்களின் உதவியுடன் நிதியியல் அறிவினை அதிகரிக்கும் குறிக்கோளுக்காக இவ்வாண்டுப்பகுதியில் அநேக நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தது.** இதற்கமைவாக, பயிற்சியாளர்களின் பயிற்சி கலந்துரையாடல்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள், அறிவினைப் பகிர்ந்துகொள்ளும் நிகழ்ச்சித்திட்டமொன்று மற்றும் பெரும் எண்ணிக்கையான நிதியியல் அறிவு, தொழில் முயற்சியாண்மை, இயலாற்றலைக் கட்டியெழுப்புதல் மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன 2022இல் நடத்தப்பட்டன.

## 8.6 நிதியியல் உட்கட்டமைப்பு

### கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள்

**2022 காலப்பகுதியில் நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுமூகமாகவும் வினைத்திறனுடனும் தொழிற்படுத்தப்பட்டதுடன் பொதுமக்கள் மற்றும் கொடுப்பனவு பணி வழங்குவோர் ஆகிய இருசாராரினாலும் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்கள் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டன.** மின்வெட்டு மற்றும் முக்கிய பண்டங்களின் பற்றாக்குறை என்பனவற்றின் காரணமாக சமூக அமைதியின்மை தோன்றிய 2022இன் முதலரைப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்கும் பொதுமக்களுக்குப் பணியாற்றுவதற்குமாக தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பின் வினைத்திறனும் பாதுகாப்பானதுமான தொழிற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெறுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கி அதன் ஊழியர்களுக்காக வீடுகளில் இருந்து கொண்டே பணியாற்றுவதற்கான ஏற்பாடுகள் உள்ளடங்கலாக அதன் தடங்கலற்ற வியாபாரத் திட்டங்களைச் செயற்படுத்தல் மற்றும் போன்ற வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.

**முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த பாரிய பெறுமதிகளைக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையான, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் லங்காசெகுயர் முறைமை என்பனவற்றை உள்ளடக்கிய லங்காசெட்டில் 2022இல் மின்வெட்டு போன்ற இடையூறுகளுக்கும் மத்தியிலும் உயர்ந்தளவு கிடைப்பனவுடனும் தாக்குப்பிடிக்கும் தன்மையுடனும் தொழிற்பட்டது.** அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கொடுக்கல்வாங்கல்களின் அளவு பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் 42 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையூடாக தீர்ப்பனவு செய்யப்பட்ட மொத்த கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி 2021இன் ரூ.295 றில்லியனிலிருந்து 2022இல் ரூ.827 றில்லியனுக்கு 181 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2022 காலப்பகுதியில் இடம்பெற்ற துணைநில் வைப்பு வசதி மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாக அமைந்தது. மேலும், பங்கேற்கும் நிறுவனங்கள் பயன்படுத்திய சராசரி நாளாந்த ஒரு நாளுக்குள்ளேயான[7] திரவத்தன்மை வசதி 2021இன் ரூ.208.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் ரூ.658.5 பில்லியனாக விளங்கி உள்நாட்டு நிதியியல் சந்தைகளில் நிலவிய திரவத்தன்மைப் பற்றாக்குறையினை எடுத்துக்காட்டியது. மேலும், 2022இல் லங்காசெட்டிலில் பங்கேற்கும் அந்தஸ்தினைப் பெற்றுக்கொண்ட முதலாவது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாக தேசிய சேமிப்பு வங்கி மாறியமையானது நிதியியல் சந்தையில் செயற்றிறமான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள அதனை இயலுமைப்படுத்தியது.

**லங்காசெகுயர் முறைமையானது 2022இல் அனைத்து அரச பிணையங்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களுக்கும் தொடர்ந்தும் உதவியது.** 2022 இறுதியில் லங்காசெகுயரின் வசமிருந்த பத்திரங்களற்ற பிணையங்களின் கூட்டுத்தொகை

7 வியாபார நாளின் போது லங்காசெட்டில் கொடுக்கல்வாங்கல்கள் சுமூகமான முறையில் தீர்ப்பனவு செய்யப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக வட்டியற்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை மத்திய வங்கி வழங்குகிறது.

ரூ.12,848.5 பில்லியனாக விளங்கி (முகப்புப் பெறுமதி), முறையே ரூ.4,126.4 பில்லியன் மற்றும் ரூ.8,722.1 பில்லியன் பெறுமதிகளைக் கொண்ட திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் உள்ளடக்கியிருந்தது. லங்காசெகுயரின் பத்திரங்களற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறைமையானது 2021 இன் ரூ.262.8 றில்லியன் தொகை கொண்ட கொடுக்கல் வாங்கல்களை ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் ரூ.1,028.6 றில்லியன் தொகை கொண்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்திருக்கிறது[8].

**பொதுமக்கள் டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகளை அதிகரித்தளவில் பின்பற்றுவது நாட்டில் காணப்படும் சில்லறை டிஜிட்டல் கொடுப்பனவுகள் வலுவாக வளர்ச்சியடைந்து வருவதனை பதிவுசெய்தது.** பல்வேறு கொடுப்பனவு மார்க்கங்களினூடாக அதேநேர சில்லறை நிதிய மாற்றல்களை இயலுமைப்படுத்துகின்ற பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி இலங்கையில் டிஜிட்டல் கொடுப்பனவுகளைப் பிரபல்யப்படுத்துவதற்கு கணிசமானளவிற்குப் பங்களித்திருக்கிறது. 2022 காலப்பகுதியில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் கொடுக்கல்வாங்கல் அளவு 54.7 மில்லியனிலிருந்து 91.8 மில்லியனுக்கு 67.9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூ.4,926.6 பில்லியனிலிருந்து ரூ.8,881.3 பில்லியனுக்கு 80.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

**பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி, கொடுப்பனவு உட்கட்டமைப்பிற்குள் லங்காபே இணையவழிக் கொடுப்பனவுத் தளம், லங்காகியூஆர், ஜஸ்ட்பே மற்றும் எண்ணிறந்த செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவுச் செயலிகள் போன்ற பல புத்தாக்கங்களுக்கான தொழில்நுட்பவியல் தளத்தினை உருவாக்கியிருக்கிறது.** 2022 காலப்பகுதியில் லங்காபே இணையவழிக் கொடுப்பனவுத் தளம் பொதுமக்கள் அவர்களது நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகளிலிருந்து உள்நாட்டு அரசிறை, இலங்கைச் சுங்கம் போன்ற அரச நிறுவனங்களுக்கான கொடுப்பனவுகளைச் செய்வதனை இயலுமைப்படுத்தி கொடுக்கல்வாங்கல்களின் அளவு மற்றும் பெறுமதி நியதிகளில் முறையே 73.5 சதவீதம் மற்றும் 151.4 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்து, அரச நிறுவனங்கள் டிஜிட்டல் கொடுப்பனவுகளை நோக்கி நகர்கின்ற அதிகரித்த போக்கொன்றினை எடுத்துக்காட்டியது. முன்னைய ஆண்டுகாலப்பகுதியில் லங்காகியூஆர் கொடுக்கல்வாங்கல்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்ட போதும் கூட 2022இன் முதல் மூன்று காலாண்டுகளிலும் கொடுக்கல்வாங்கல் அளவுகளில் சிறிதளவு வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டமையானது கியூஆர் கொடுப்பனவுகளை மேற்கொள்வது தொடர்பில் வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகர்கள் இருசாராரினதும் விழிப்புணர்வினை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தினை எடுத்துக்காட்டுகிறது. மேலும், லங்காபே பிறைவேற் லிமிடெட் மத்திய வங்கியின் ஒத்துழைப்புடன் 2022இல் "லங்காறெமிட்" என்ற செல்லிடத் தொலைபேசி பணவனுப்பல் செயலியொன்றினை ஆரம்பித்தது. இது, புலம்பெயர் தொழிலாளர்கள் இலங்கைக்கு பணம் அனுப்புவதனையும் வெளிநாட்டில் வழங்கப்பட்ட கொடுப்பனவு அட்டைகளூடாக பொதுப் பயன்பாட்டு பட்டியல்களைக் கொடுப்பனவு செய்வதனையும் இயலுமைப்படுத்துகிறது.

**ஓய்வூதியம் மற்றும் சம்பளக் கொடுப்பனவுகள் அதேபோன்று அட்டவணையிடப்பட்ட அல்லது அதேநாள் அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்படுகின்ற மற்றைய சில்லறை பெறுமதிக் கொடுப்பனவுகள் போன்ற சிறிய பெறுமதியினைக் கொண்ட தொகை வடிவிலான நிதிய மாற்றல்களுக்கு வசதியளிக்கின்ற இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி மற்றும் அளவு ஆகிய நியதிகளில் மிதமான வளர்ச்சியொன்றினைத் தொடர்ந்தும் பதிவுசெய்தது.** இதற்கமைய, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை 2022 காலப்பகுதியில் ரூ.3,368.4 பில்லியன் தொகை கொண்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்தது. 2021 உடன் ஒப்பிடுகையில் இது 17.7 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சியாகும்.

**2022ஆம் ஆண்டுப்பகுதியில் கொடுகடன் மற்றும் பற்று அட்டையின் கொடுக்கல்வாங்கல்களின் அளவு முறையே 59.9 மில்லியனுக்கும் 146.5 மில்லியனுக்கும் 18.1 சதவீதத்தினாலும் 35.6 சதவீதத்தினாலும் அதிகரித்ததுடன் கொடுகடன் மற்றும் பற்று அட்டைகளின் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூ.401.5 பில்லியனுக்கும் ரூ.528.9 பில்லியனுக்கும் முறையே 42.1 சதவீதத்தினாலும் 67.4 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன.** இவ்வதிகரிப்பிற்கு இ-வர்த்தகம், செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவுகள் மற்றும் இணையத்தள வங்கித்தொழில் என்பனவற்றின் கொடுக்கல்வாங்கல்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

**இலங்கையின் வங்கிகளுக்கிடையிலான காசோலைத் தீர்ப்பனவு முறைமையாக இருக்கும் காசோலை பிம்பப்படுத்தல் சுற்றோட்டக் குறைப்பு முறைமை வங்கிகளுக்கிடையிலான காசோலைக் கொடுப்பனவுகளை, காசோலை பிம்பப்படுத்தல் முறைமையினைப் பயன்படுத்தி, அடுத்த வியாபார நாள் அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதுடன் அண்மைய ஆண்டுகளில் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின்**

8 லங்கா செகுயர் முறைமையானது முதலாந்தர வழங்கல் கொடுக்கல்வாங்கல், இரண்டாந்தரச் சந்தை வர்த்தகம் (உடனடி, மீள்கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்கள், பிணையுறுதிக் கொடுக்கல்வாங்கல்கள்), திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி உள்ளிட்ட அனைத்து அரச பிணையங்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களை தீர்ப்பனவு செய்கின்றது.

அட்டவணை 8.21

கொடுப்பனவு முறைமைகளின் மற்றும் கருவிகளின் செயலாற்றம் - கொடுக்கல் வாங்கல்களின் அளவு

| கொடுப்பனவு முறைமை | 2018 ('000) | 2021 ('000) | 2022 (அ) ('000) | வளர்ச்சி (%) 2018-22 | வளர்ச்சி (%) 2021-22 |
|---|---|---|---|---|---|
| **பாரிய பெறுமதி கொடுப்பனவு முறைமைகள்** | | | | | |
| அதேநேர மொத்த கொடுப்பனவு முறைமை | 405.2 | 449.8 | 638.7 | 57.6 | 42.0 |
| **சில்லறை பெறுமதி கொடுப்பனவு முறைமைகள் / கருவிகள்** | | | | | |
| காசோலை பிம்பப்படுத்தல் சுற்றோட்டக் குறைப்பு முறைமை | 50,352.2 | 33,021.2 | 33,049.6 | -34.4 | 0.1 |
| இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை (நிகழ்நிலை நிதி பரிமாற்றல்கள்) | 32,943.3 | 41,867.7 | 45,536.4 | 38.2 | 8.8 |
| பொது தன்னியக்க கூற்றுப்பொறி ஆழி | 40,464.4 | 58,210.5 | 84,141.2 | 107.9 | 44.5 |
| பொது இலத்திரனியல் நிதி பரிமாற்றல் ஆழி (நிகழ்நிலை அதேநேர நிதி பரிமாற்றல்கள்) | 7,233.6 | 54,675.5 | 91,782.0 | 1,168.8 | 67.9 |
| அதில் : | | | | | |
| லங்காபே நிகழ்நிலை கொடுப்பனவுத் தளம் | 15.4 | 514.0 | 891.7 | 5,690.3 | 73.5 |
| செல்லிடத் தொலைபேசியினை அடிப்படையாகக் கொண்ட குறைந்த பெறுமதி கொடுப்பனவுகள் (ஜஸ்ட்பே) | 45.6 | 9,014.7 | 14,512.4 | 31,725.4 | 61.0 |
| லங்கா கியூஆர்* | - | 848.9(ஆ) | 599.5 | - | -29.4 |
| நிகழ்நிலை மற்றும் விற்பனை மையக் கருவிகளினூடாக மேற்கொள்ளப்பட்ட கடனட்டை கொடுக்கல் வாங்கல்கள் | 43,599.8 | 50,689.1 | 59,843.5 | 37.3 | 18.1 |
| விற்பனை மையக் கருவிகளினூடாக மேற்கொள்ளப்பட்ட வரவு அட்டை கொடுக்கல் வாங்கல்கள் | 56,595.1 | 108,039.7 | 146,478.6 | 158.8 | 35.6 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

* லங்கா கியூஆர் 2018 இல் செயற்படுத்தப்பட்டதுடன் தரவு 2020 இலிருந்து கிடைக்கப்பெற்றது.

(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தப்பட்டது

**அளவு மற்றும் பெறுமதி ஆகிய இரண்டு நியதிகளிலும் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கொன்றை பதிவுசெய்தது.** எனினும், 2022ஆம் ஆண்டுப்பகுதியில் காசோலைகளின் பெறுமதி 2021 உடன் ஒப்பிடுகையில் 18.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு 2021ஆம் ஆண்டுப்பகுதியில் நிலவிய கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக அரசினால் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளால் வியாபாரங்களை வெற்றிகரமாக தொழிற்படுத்தப்பட முடியாமல் போனமையும் அதனைத் தொடர்ந்து 2022இல் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

**2022இல் லங்காபே பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி வலையமைப்புடன் இணைக்கப்பட்ட எந்தவொரு தன்னியக்கக் கூற்றுப் பொறியிலிருந்தும் காசு எடுப்பனவுகளையும் நிலுவை விசாரணைகளையும் இயலுமைப்படுத்திய பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளியின் கொடுக்கல்வாங்கல்கள் அளவு 44.5 சதவீதத்தினால் 84.1 மில்லியனுக்கும் பெறுமதி 51.0 சதவீதத்தினால் ரூ.1,012.9 பில்லியனுக்கும் அதிகரிப்பினைக் காட்டியது.** 2022 இறுதியில் 30 நிதியியல் நிறுவனங்கள் பொதுவான தன்னியக்கக் கூற்று வலையமைப்புடன் இணைக்கப்பட்டன. அதேவேளை, அவற்றின் சொந்த அட்டை முகாமைத்துவ முறைமையினை தொழிற்படுத்துவதற்கான இயலாற்றலைக் கொண்டிராத நிதியியல் நிறுவனங்களுக்கு பணிகளை வழங்குவதற்காக 2015இல் தொடக்கப்பட்ட பகிரப்பட்ட தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருந்ததுடன் 2022 காலப்பகுதியில் அதன் தொழிற்பாடுகளை சுமூகமாகத் தொடர்ந்தது.

**மத்திய வங்கி, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் தொடர்பில் 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சட்டம் மற்றும் தொடர்பான ஒழுங்குவிதிகளின் நியதிகளில் அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டது.** இதன்படி, கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவு முறைமைகளின் பணிகள் சுமூகமாக தொழிற்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக தலத்திலான மேற்பார்வையும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் பொழுது செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவுச் செயலிகளுடன் சேர்ந்து காணப்படும் ஏதேனும் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவுச் செயலிகளை வழங்குபவர்களின் இணங்குவிப்புக்களை மத்திய வங்கி தொடர்ந்தும் கண்காணித்தது. பொருத்தமான அவசரகால திட்டமிடல்களுடன் கொடுப்பனவுப் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெறுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு, மத்திய வங்கி தடங்கலற்ற வியாபாரத் திட்ட அறிக்கைகளை மீளாய்வு செய்வதன் மூலமும் அனர்த்த மீட்பு அமைவிடங்களுக்கு விஜயம் செய்வதன் மூலமும் லங்காசெட்டில் பங்கேற்பாளர்களின் அனர்த்த மீட்பு ஏற்பாடுகளையும் தடங்கலற்ற வியாபாரத் திட்டங்களையும் தொடர்ந்தும் கண்காணித்தது.

**தேசிய கொடுப்பனவுச் சபை[9], கொடுப்பனவு அட்டைகளை இஎம்வி[10] நியமங்களுக்கு தரமுயர்த்தியதன் மூலமும் வாடிக்கையாளர்கள் அதேநேர அடிப்படையில் அறிவிப்புக்களை பெற்றுக்கொள்வதனை இயலுமைப்படுத்தியதன் மூலமும் புதிய டிஜிட்டல் கொடுப்பனவு முறைகள் மற்றும் கொடுப்பனவு**

9 உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகள், லங்காபே பிறைவேற் லிமிடெட், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை வங்கியாளர் சங்கம், இலங்கை வெளிநாட்டுச் செலாவணிச் சங்கம், முதனிலை வணிகர் சங்கம், லங்கா பினான்சியல் சேர்விஸஸ் பியுறோ லிமிடெட், இலங்கை கொடுகடன் தகவல் பணியகம், நிதி அமைச்சு மற்றும் இ-பண முறைமைகளை அடிப்படையாகக் கொண்ட செல்லிடத் தொலைபேசித் தொழிற்பாட்டாளர்கள் என்பனவற்றிலிருந்தான பிரதிநிதிகளை உள்ளடக்குகிறது.

10 இஎம்வி என்பது அட்டைக் கொடுக்கல்வாங்கல்களின் பாதுகாப்பினையும் அவற்றிடையேயான உள்ளகத் தொழிற்பாடுகளையும் அதிகரிப்பதற்கு சிப்பினை அடிப்படையாகக் கொண்ட பற்று மற்றும் கொடுகடன் அட்டைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான உலகளாவிய தொழில்நுட்பவியல் நியமமொன்றாகும். இஎம்வி என்பது ஆரம்பத்தில் இந்நியமங்களை உருவாக்கிய யூரோ பே, மாஸ்டர் அட்டை மற்றும் விசா ஆகிய மூன்று கம்பனிகளைக் குறிக்கிறது.

8

அட்டவணை 8.22
கொடுப்பனவு முறைமைகளின் மற்றும் கருவிகளின் செயலாற்றம் - கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி

| கொடுப்பனவு முறைமை | 2018 (ரூ.பில்) | 2021 (ரூ.பில்) | 2022 (அ) (ரூ.பில்) | வளர்ச்சி (%) 2018-22 | வளர்ச்சி (%) 2021-22 |
|---|---|---|---|---|---|
| **பாரிய பெறுமதி கொடுப்பனவு முறைமைகள்** | | | | | |
| அதேநேர மொத்த கொடுப்பனவு முறைமை | 100,473.1 | 294,602.0 | 827,105.1 | 723.2 | 180.8 |
| **சில்லறை பெறுமதி கொடுப்பனவு முறைமைகள் / கருவிகள்** | | | | | |
| காசோலை பிம்பப்படுத்தல் சுற்றோட்டக் குறைப்பு முறைமை | 10,528.4 | 8,311.5 | 9,813.8 | -6.8 | 18.1 |
| இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை (நிகழ்நிலை நிதி பரிமாற்றல்கள்) | 1,972.2 | 2,862.2 | 3,368.4 | 70.8 | 17.7 |
| பொது தன்னியக்க கூற்றுப்பொறி ஆழி | 344.6 | 671.0 | 1,012.9 | 193.9 | 51.0 |
| பொது இலத்திரனியல் நிதி பரிமாற்றல் ஆழி (நிகழ்நிலை அதேநேர நிதி பரிமாற்றல்கள்) | 660.3 | 4,926.6 | 8,881.3 | 1,245.0 | 80.3 |
| அதில் : | | | | | |
| லங்காபே நிகழ்நிலை கொடுப்பனவுத் தளம் | 12.5 | 198.2 | 498.3 | 3,886.4 | 151.5 |
| செல்லிடத் தொலைபேசியினை அடிப்படையாகக் கொண்ட குறைந்த பெறுமதி கொடுப்பனவுகள் (ஜஸ்ட்பே) | 0.1 | 34.6 | 67.8 | 67,700.0 | 96.0 |
| லங்கா கியூஆர்* | - | 1.9 | 2.0 | - | 5.3 |
| நிகழ்நிலை மற்றும் விற்பனை மையக் கருவிகளினூடாக மேற்கொள்ளப்பட்ட கடனட்டை கொடுக்கல் வாங்கல்கள் | 241.8 | 282.6 | 401.5 | 66.0 | 42.1 |
| விற்பனை மையக் கருவிகளினூடாக மேற்கொள்ளப்பட்ட வரவு அட்டை கொடுக்கல் வாங்கல்கள் | 158.7 | 315.9 | 528.9 | 233.3 | 67.4 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

* லங்கா கியூஆர் 2018 இல் செயற்படுத்தப்பட்டதுடன்˙ தரவு 2020 இலிருந்து கிடைக்கப்பெற்றது.

(அ) தற்காலிகமானது

**தொடர்பான மோசடிகள் தொடர்பில் வாடிக்கையாளர்களின் விழிப்புணர்வினை அதிகரித்தமையின் மூலமும் பாதுகாப்பான டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களை ஊக்குவித்து அதனூடாக இக்காலப்பகுதியில் பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கு இன்றியமையாத வகிபாகமொன்றை ஆற்றியது.** மேலும், தேசிய கொடுப்பனவுச் சபையானது நாட்டில் கொடுப்பனவு முறைமை உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்காக கொடுப்பனவு முறைமை வழிகாட்டல் 2022 - 2024 இனைக் கண்காணித்ததுடன் தேசிய கொடுப்பனவுச் சபையினால் நியமிக்கப்பட்ட பல குழுக்கள் புதிய கொடுப்பனவு தொழில்நுட்பங்கள், பாதுகாப்பான டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்கள், டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகள் தொடர்பான வாடிக்கையாளர் விழிப்புணர்வினை அதிகரித்தல் போன்ற கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் தொடர்பான கற்கைகளை மேற்கொண்டன. இது, டிஜிட்டல் முறைகளினூடான நிதி மோசடிகள் தொடர்பில் பொதுமக்களின் விழிப்புணர்வு மட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆய்வினையும் உள்ளடக்கியிருந்தது. கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பில் மத்திய வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்கள் வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு தொடர்ந்தும் பரந்தளவு விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை மேற்கொண்டன.

## பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

**2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு, இவ்வாண்டுப்பகுதியில் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அதன் மையத் தொழிற்பாடுகளை பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான பன்னாட்டு நியமங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் தொடர்ந்தும் மேற்கொண்டது.** இவ்வாண்டுப்பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு அறிக்கையிடும் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து 1,481 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டது. பகுப்பாய்வுகளின் பின்னர் 419 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் மேலதிக விசாரணைகளுக்காக அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தொடர்பான சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவர்களிடமும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளிடமும் பாரப்படுத்தப்பட்டன. அதேவேளை, 605 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டிருந்ததுடன் 134 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் மேலும் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. எஞ்சிய சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் மேலதிக நடவடிக்கைகள் தேவைப்படாதவை என வகைப்படுத்தப்பட்டன. மேலும், 2006ஆம் ஆண்டு 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 6ஆம் பிரிவின் நியதிகளில், நிதியியல் உளவறிதல் பிரிவு 2022ஆம் ஆண்டுப்பகுதியில் அறிக்கையிடப்பட வேண்டிய ஆரம்ப மட்டமான ரூ.1 மில்லியனை அல்லது அதற்குச் சமமான வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்தினை விஞ்சியமை தொடர்பில் அறிக்கையிடுகின்ற நிறுவனங்களிடமிருந்து 7.6 மில்லியன் (தற்காலிகம்) காசு கொடுக்கல்வாங்கல் 10.8 மில்லியன் (தற்காலிகம்) இலத்திரனியல் நிதிய மாற்றல்களையும் (உள்முகம் மற்றும் வெளிமுகம்) பெற்றுக்கொண்டது.

**நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்பாடுகள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் தொடர்பான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம் மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின்**

**கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பனவற்றுடன் நிறுவன ரீதியாக இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு நிதியியல் உளவறிதல் பிரிவு 2022ஆம் ஆண்டுப்பகுதியில் நிதியியல் நிறுவனங்கள் மீதும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் மீதும் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையினைத் தொடர்ச்சியாக மேற்கொண்டது.** அறிக்கையிடும் நிறுவனங்களின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இணங்குவிப்புக்களை மதிப்பிடுவதற்காக 03 இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தலத்திலான பரீட்சிப்புக்களும் 22 இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தலத்திலான கூட்டுப் பரீட்சிப்புக்களும் 22 தலத்திற்கு வெளியேயான/ தலத்திலான உடனடிப் பரீட்சிப்புக்களும் நடத்தப்பட்டன. மேலும், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் மீது ஐந்து கருத்து விளக்க மீளாய்வுகள் நடத்தப்பட்டன. 2022இல் நடத்தப்பட்ட பரீட்சிப்புக்களின் அடிப்படையில் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தினையும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகளையும் மீறியமை தொடர்பில் ஆறு உரிமம்பெற்ற வங்கிகளின் மீது ரூ.11.75 மில்லியன் கொண்ட நிதியியல் தண்டங்கள் விதிக்கப்பட்டன. அத்துடன் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம், வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம் மற்றும் அவற்றின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாத நிதியியல் நிறுவனங்களுக்கு இவ்வாண்டு காலப்பகுதியில் காரணங்களைக் காட்டுமாறு கோருகின்ற 8 கடிதங்களும் 9 எச்சரிக்கை கடிதங்களும் வழங்கப்பட்டன. பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்புக்களை அதிகரிப்பதற்கான வழிமுறைகளைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தியதன் மூலம் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்களின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வை மேலும் வலுப்படுத்தப்பட்டது.

**2022ஆம் ஆண்டுப்பகுதியில், நிதியியல் உளவறிதல் பிரிவு பன்னாட்டு பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் நியமங்களுடன் இணங்கிச் செல்கின்ற விதத்தில் நாட்டின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் அமைப்பின் காத்திரமான தன்மையினை மேம்படுத்துவதற்காக, பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான சட்டக் கட்டமைப்பிற்கு சட்டவாக்க திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.** மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவு, நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் விதந்துரைப்புக்களின் விதந்துரைப்பு 1 உடன் இசைந்து செல்லும் விதத்தில் உலக வங்கியிடமிருந்தான தொழில்நுட்ப உதவியுடன் பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டு அறிக்கையின் பெறுபேறுகளை 2023இன் முதலரைப்பகுதியில் வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவு, தொடர்பான அனைத்து ஆர்வலர்களிடையேயுமான விழிப்புணர்வினை அதிகரிக்கின்ற விதத்தில் பல்வேறு நடவடிக்கைகளையும் முன்னெடுத்தது. பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வை செய்முறைகளையும் நிறுவன ரீதியான இணங்குவிப்புக்களையும் வலுப்படுத்தும் பொருட்டு நிதியியல் உளவறிதல் பிரிவு பல்வேறு சுற்றறிக்கைகளை விடுத்ததுடன் இவ்வாண்டுப்பகுதியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியது.

## நிதியியல் துறை தொடர்பான சட்ட சீர்திருத்தங்கள்

**2022 காலப்பகுதியில் மத்திய வங்கியானது நிதி அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம், பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பன உள்ளிட்ட பல்வேறு ஆர்வலர்களின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கி மசோதாவினை வரைவதில் ஈடுபட்டிருந்ததுடன் இம்மசோதா பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு முன்னரான நடவடிக்கையொன்றாக, 2019.01.11ஆம் திகதியிடப்பட்ட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.** இலங்கை மத்திய வங்கி மசோதா அத்தகைய தொடர்பான ஆர்வலர்களுடன் சேர்ந்த மத்திய வங்கித் தொழிலுள்ள புதிய பரப்புக்களை உள்ளடக்கியது. இலங்கை மத்திய வங்கி மசோதா அதன் குறிக்கோள்களைப் பாதுகாத்துக் கொள்ளும் விதத்தில் அதிகரித்த ஆளுகை நியமங்கள், முன்னேற்றகரமான சபை அமைப்பு, மேம்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரங்கள் என்பனவற்றுடன் மத்திய வங்கியின் சுயநிர்ணயத்திற்கான ஏற்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது. இலங்கை மத்திய வங்கி மசோதா இயற்றப்பட்டதும் அது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தினைப் பதிலீடு செய்யும்.

**மேலும், மத்திய வங்கி 2022 காலப்பகுதியில் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதற்குப் பங்களிக்கும் என எதிர்பார்க்கின்ற பல சட்டங்களை வரைவதில் ஈடுபட்டிருந்தது.** புதிய சட்டங்கள் வர்த்தகப்படுத்தல், தீர்ப்பனவு செய்தலை தேறல் செய்யும் சட்டம், வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டம் என்பனவற்றை

உள்ளடக்கியிருந்ததுடன் இவை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் தீர்மானங்களின் கட்டமைப்பினை மேம்படுத்தும். மேலும், மத்திய வங்கி நாட்டின் சந்தை அபிவிருத்திகளிலிருந்து தோன்றுகின்ற பல்வேறு சவால்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரத்தினை அதிகரிக்கும் நோக்குடன் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம், 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டம், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் மற்றும் 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுச் சட்டம் என்பனவற்றிற்கு திருத்தங்களை அறிமுகப்படுத்துகின்ற செய்முறையில் ஈடுபட்டிருந்தது.

## நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு

**2022ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அவற்றின் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பினை மத்திய வங்கி தொடர்ந்தும் வலுப்படுத்தியது.** இவ்வாண்டுப்பகுதியில் மத்திய வங்கி 5,149 முறைப்பாடுகளையும் மனக்குறைகளையும் பெற்றுக்கொண்டதுடன் இவற்றில் பெரும்பாலானவை அத்தகைய நிறுவனங்களிடமிருந்த பெற்றுக்கொண்ட நிதியியல் வசதிகள் தொடர்பான சலுகைக்கான கோரிக்கைகள், உயர்ந்த வட்டி வீதங்கள் விதிக்கப்படுகின்றமை, சட்ட இசைவுத்தாமதத்துடன் தொடர்பான விடயங்கள், கோரப்படும் தகவல்கள்/ஆவணங்கள் வழங்கப்படாமை, உயர்ந்த கட்டணங்களும் தரகுகளும் விதிக்கப்படுகின்றமை என்பனவற்றுடன் தொடர்புபட்டனவாகக் காணப்பட்டன. ஆய்விற்குரிய காலப்பகுதியில் நிதியியல் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட செல்லுபடியாகக்கூடிய முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகளில் ஏறத்தாழ 75 சதவீதத்தினை மத்திய வங்கி முடித்து வைக்கக்கூடியதாக இருந்தது.

**மத்திய வங்கியினால் அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய ஒழுங்குவிதிகளின் அனைத்தையுமுள்ளடக்கிய தொகுப்பு மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவதனை இயலுமைப்படுத்தியது.** இவ்வொழுங்குவிதிகள் சந்தை நடத்தை மேற்பார்வைகளை வசதிப்படுத்துவதற்கு, மேற்பார்வையாளர்களுக்கான குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட அதிகாரங்களை வரைவிலக்கணம் செய்வதற்கு எதிர்பார்க்கின்ற அதேவேளை, நிதியியல் பணிகளை வழங்குகின்ற அல்லது பெறுகின்றவை எனக் கருதப்படக்கூடிய துறைகள் தொடர்பில் பணி வழங்குவோர் மற்றும் பெறுவோர் இருசாராருக்கும் தெளிவொன்றையும் வழங்குகிறது. ஆர்வலர்களின் ஆலோசனைக்காக ஒழுங்குவிதிகளின் வரைவு தொழிற்துறையினருக்கும் பொதுமக்களுக்கும் கிடைக்கச் செய்யப்பட்டிருக்கின்றதுடன் இறுதி ஒழுங்குவிதிகள் 2023 நடுப்பகுதியில் நடைமுறைக்குவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மத்திய வங்கி பன்னாட்டு நிதியியல் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் நிதியியல் வாடிக்கையாளர் விழிப்புணர்வு தொடர்பில் ஊடகப் பிரச்சாரமொன்றினை அபிவிருத்தி செய்யும் செய்முறையில் ஈடுபட்டிருக்கிறது. இது 2023இன் தொடக்கக் காலத்தில் ஆரம்பிக்கப்படும்.

## வைப்புக் காப்புறுதி, தீர்மான நடவடிக்கைகள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பான புலனாய்வு

**நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்யும் விதத்தில் மத்திய வங்கி இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தினை தொடர்ந்தும் முகாமைப்படுத்தியது.** உரிமம் இரத்துச் செய்யப்பட்ட/இடைநிறுத்தப்பட்ட கம்பனிகளான சென்றல் இன்வெஸ்ட்மன்ற அன்ட் பினான்ஸ் பிஎல்சி, த ஸ்ரான்டட் கிறெடிட் பினான்ஸ் லிமிடெட், ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட், த பினான்ஸ் கம்பனி பிஎல்சி, சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விசஸ் பிஎல்சி மற்றும் ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் ஆகிய நிதிக் கம்பனிகளின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் மேற்கொண்டது. இதன்படி, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம் 2022இல் 72,641 வைப்பாளர்களுக்கு ரூ.30,499.24 மில்லியனைச் செலுத்தியது. செலுத்தப்பட்ட இழப்பீட்டின் அளவு மொத்தமாகக் காப்புறுதி செய்யப்பட்ட பெறுமதியான ரூ.35,229.22 மில்லியனில் 86.57 சதவீதமாகும்.

**உத்தேச வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தில் பொருத்தமான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் தற்போது நாட்டிலுள்ள வைப்புக் காப்புறுதி பொறிமுறையின் சட்ட ரீதியான கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு மத்திய வங்கி முன்னெடுப்புக்களை மேற்கொண்டிருக்கிறது.** இவ்வரைவுச் சட்டமும் மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்டு, ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டு வரும் உரிமம்பெற்ற வங்கிகள் அதேபோன்று வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான தீர்மானங்களுக்கான சட்டக் கட்டமைப்பினை வலுப்படுத்தும் நோக்குடனான ஏற்பாடுகளை உள்ளடக்கியது. வரைவுச் சட்டம் வலியுறுத்துகின்ற இங்கேயுள்ள பல விடயங்கள் இலங்கையின் சட்ட உட்கட்டமைப்பிற்கு அறியப்படாதனவாக உள்ளன என்பதனைப் பரிசீலனையில் கொண்டு பன்னாட்டு நாணய நிதியத்தினாலும் உலக வங்கியினாலும் வழங்கப்பட்ட நிபுணத்துவமும் தொழில்நுட்ப உள்ளீடுகளும் வரைவுச் செய்முறைக்கு மிகப் பயன் நிறைந்தவைகளாகவுள்ளன. 2022

## சிறப்புக்குறிப்பு 12
## நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு : ஒரு முன்னோக்கிய பாதை

### அறிமுகம்

மக்கள் மத்தியில் காணப்படும் நிதியியல் அறிவு மட்டமும் செயற்பாட்டிலுள்ள வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்புக்களின் வலிமையும், ஒரு நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியில் முக்கிய அங்கமாகக் காணப்படுகின்ற நிதியியல் வசதிக்குட்படுத்தலை நிர்ணயிக்கின்ற இரு முக்கிய கூறுகளாகும். தொடர்ச்சியான தொழில்நுட்ப முன்னேற்றங்கள், நிதியியல் சேவைகளின் அதிகரிக்கின்ற சிக்கல்வாய்ந்த தன்மை அத்துடன் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையில் வளர்ந்துவருகின்ற போட்டித்தன்மை என்பன வாடிக்கையாளர் விழிப்பூட்டல் மீதும் போதியளவான வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு மீதும் அதிகம் அழுத்தம் கொடுப்பதற்கு ஒழுங்குமுறைப்படுத்துநர்களை நிர்ப்பந்தித்துள்ளன. ஏனையவற்றிற்கு மத்தியிலும் இம்முக்கியத்துவமிக்க துறையில் குறைபாடுகள் கணப்படுகின்றன என்பதனை நாம் கடந்து வந்த உலகளாவிய நிதியியல் நெருக்கடி வெளிப்படுத்தியமை இதற்கு சான்று பகர்கின்றது. நெருக்கடிமிக்க காலப்பகுதியில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு அவசியமான உள்ளீடான பொதுமக்கள் நம்பிக்கையினைப் பேணுவதற்கு பங்களிக்கக்கூடிய மிகவும் ஆற்றல்வாய்ந்த வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பொன்றிற்கான தேவையினை இது எடுத்துக்காட்டியது. மாறாக, ஆற்றல்வாய்ந்த நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பானது வாடிக்கையாளர் பாதுகாப்புடன் தொடர்புடைய பிரச்சனைகளின் எதிர்பார்ப்பு, அடையாளப்படுத்தல் மற்றும் தீர்வு என்பவற்றை உரியகாலத்தில் செயல்திறன்வாய்ந்த விதத்தில் வசதிப்படுத்தி, நிதியியல் முறைமை உறுதிப்பாடு மீதான ஏதேனும் தாக்கத்தினைக் குறைக்கும் என பரந்தளவில் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் பின்னணியில், நாட்டின் நிதியியல் சந்தையின் உச்சமட்ட நிறுவனமாக இலங்கை மத்திய வங்கியானது நிதியியல் வசதிக்குட்படுத்தல் மட்டத்தினை அதிகரிப்பதற்கும் நாட்டில் நிதியியல் வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்கும் அது ஒழுங்குபடுத்துகின்ற நிறுவனங்களூடாக பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டதுடன் முயற்சிகளையும் ஒருங்கிணைத்தது. இதன் விளைவாக, தற்போதைய வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பின் மட்டுப்பாடுகளையும் உலகின் ஏனைய நாடுகளில் இடம்பெறுகின்ற அபிவிருத்திகளையும் இனங்கண்டு, அனைத்து ஆர்வலர்களினதும் ஈடுபாட்டுடன் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான தொடக்க முயற்சியொன்றினை இலங்கை மத்திய வங்கி ஆரம்பித்துள்ளது.

### இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு

இலங்கையின் நிதியியல் துறையானது வேறுபட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ் பல்வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புகளுக்குட்படுகின்ற பல வகையான நிதியியல் சேவை வழங்குநர்களுடன் கூடிய பன்மைத்துவம் மிக்கதொன்றாகும். இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற நிறுவனங்கள் இலங்கையிலுள்ள நிதியியல் துறைச் சொத்துக்களின் ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு வகைகூறுவதனால் இத்துறையில் இலங்கை மத்திய வங்கியினால் எடுக்கப்படவுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள், நாட்டின் நிதியியல் வாடிக்கையாளர்கள் மற்றும் ஒட்டுமொத்த நிதியியல் முறைமை இரண்டினதும் நல்வாழ்வின் மீது குறிப்பிடத்தக்க அத்துடன் நீண்டகாலம் நிலைக்கும் தாக்கத்தினைத் தோற்றுவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த பல ஆண்டுகளாக, இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் திணைக்களங்கள், அவற்றின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற நிறுவனங்களுக்கு ஏற்புடைய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளன.

எடுத்துக்காட்டாக, நிதியியல் வாடிக்கையாளர்களுக்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்குமிடையிலான ஆரோக்கியமான உறவினைப் பேணிவளர்ப்பதனை நோக்காகக் கொண்டு, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் பின்பற்றவேண்டிய நடத்தைக் கோவையொன்றினை உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம் மீதான 2021இன் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் முதற்தடவையாக எடுத்துரைத்தது. பணிப்புரையானது வங்கித்தொழில் உற்பத்திகளை மற்றும் சேவைகளை நிதியியல் வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல், வங்கிகள் மட்டத்தில் முறைப்பாடு கையாளுகின்ற பொறிமுறையினை நடைமுறைப்படுத்தல், வங்கித்தொழில் உற்பத்திகள் மற்றும் சேவைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் புரிந்துகொள்வதை ஊக்குவித்தல், வங்கிகளின் முகவர்களிடமிருந்து பாதுகாப்பை வழங்குதல் அத்துடன் விசேட தேவைகளுடன்கூடிய நிதியியல் வாடிக்கையாளர்களுக்கான விசேட கவனிப்பு மற்றும் சிரத்தை என்பன தொடர்பில் ஒழுங்குமுறைப்படுத்தல் எதிர்பார்க்கைகளை அட்டவணைப்படுத்துகின்றது. 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் மற்றும் 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிக்குத்தகைக்குவிடுதல் சட்டப் பணிப்புரைகள் என்பன அவற்றின் நிதியியல் வாடிக்கையாளர்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதை உறுதிசெய்கின்ற விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்குமான நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பை எடுத்துரைக்கின்றது. வெளிப்படுத்தல் மற்றும் வெளிப்படைத் தன்மை, வாடிக்கையாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு, பொறுப்புவாய்ந்த தொழில் நடத்தை, முறைப்பாடு கையாளுதல் மற்றும் குறைதீர்த்தல், சமத்துவமாக மற்றும் நியாயமாக நடத்துதல், வாடிக்கையாளர் தரவுகள் மற்றும் இரகசியப் பாதுகாப்பு ஆகிய துறைகளின் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு மீதான குறைந்தபட்ச தரநியமங்களை இப்பணிப்புரைகள் குறித்துரைக்கின்றன. இவ்வழிகாட்டல்கள் சேமிப்பு, கடன்வழங்குதல் தொடர்பிலான கொடுக்கல்வாங்கல்களையும் அதேபோன்று வேறு வாடிக்கையாளர் தொடர்புபட்ட நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றன. அதேபோன்று, அரசாங்கப் பிணையங்களைக் கையாளுகின்ற முதனிலை வணிகர்களும் 1923ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் மற்றும்

1937ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் 2013இல் வழங்கப்பட்ட வாடிக்கையாளர் சாசனமொன்றைக் கடைப்பிடிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர். இத்தகைய அனைத்து முன்னெடுப்புக்கள் வாடிக்கையாளர்கள் அறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு இயலுமாகவுள்ளனர் என்றும் வெளிப்படைத்தன்மை மிக்க அத்துடன் நியாயமான நிதியியல் சேவைகளுக்கு பெறுவழிமுறையினைக் கொண்டுள்ளனர் என்றும் உறுதிசெய்வதற்கு நிதியியல் நிறுவனங்களுக்கான நியாயமானதும் திடமானதுமான தளமொன்றினை நிர்ணயித்துள்ளன.

எவ்வாறிருப்பினும், இலங்கை மத்திய வங்கியின் தற்போதுள்ள கட்டமைப்புக்களின் துண்டாடப்பட்ட அணுகுமுறை இணக்கமின்மைகளையும் சிக்கல்களையும் தோற்றுவித்து வாடிக்கையாளர் பாதுகாப்புப் பற்றிய ஒட்டுமொத்த குறிக்கோளை அடைவதைத் தடைப்படுத்துகின்றன. இதனால், இலங்கை மத்திய வங்கியானது, அதன் ஒழுங்குமுறைப்படுத்தலின் கீழான நிறுவனங்களுக்கு பிரயோகிக்கின்ற நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்தும் நோக்கில் ஒருங்கிணைக்கப்பட்ட அத்துடன் அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்தும் கொள்கைத் தீர்மானமொன்றினை மேற்கொண்டது. இப்பணிப்புரையின் முதற்படியாக அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக, 2020 ஓகத்தில் இலங்கை மத்திய வங்கியினுள் தனியான திணைக்களமொன்றாக நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் நிறுவப்பட்டது. தற்போது, நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களமானது நடுத்தரகால இலக்காக இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களுக்கு புதிய அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை வழங்கி நடைமுறைப்படுத்துகின்ற அதேவேளை, இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற நிதியியல் நிறுவனங்களின் நிதியியல் வாடிக்கையாளர்களால் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படுகின்ற அனைத்து வெளிவாரி முறைப்பாடுகளையும் மற்றும் குறைகளையும் பெற்று பரப்புவதற்கான தனியொரு தொடர்பு மையமாகப் பணியாற்றுகின்றது.

### நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு மீதான புதிய ஒழுங்குவிதிகள்

பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தினதும் உலக வங்கியினதும் தொழில்நுட்ப உதவியுடன் இலங்கை மத்திய வங்கி வரைவு ஒழுங்குவிதிகளை உருவாக்கியுள்ளது, இது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 10ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக 2023இன் நடுப்பகுதியில் வெளியிடப்படவுள்ளது. வரைவுச் செயன்முறையை வெளிப்படைத் தன்மைமிக்கதாக்கி ஆர்வலர் ஈடுபாட்டினை வசதிப்படுத்தும் பொருட்டு அவதானிப்புகளுக்காக.்.ஆலோசனைகளுக்காக பொதுமக்களுக்கும் தொழில்துறைக்கும் இவ்வரைவு ஒழுங்குவிதிகள் கிடைக்கப்பெறச்செய்யப்பட்டன. முன்மொழியப்பட்ட ஒழுங்குவிதிகள், இலங்கை மத்திய வங்கியினால் தற்போது ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற அனைத்து நிறுவனங்களையும் அதாவது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், பணத்தரகர்கள் மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் பங்கேற்பாளர்கள் ஆகியோரை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே காணப்படுகின்ற வாடிக்கையாளர் பாதுகாப்புக் கோட்பாடுகள், விதிகள் அத்துடன் வாடிக்கையாளர் பாதுகாப்புத் துறைகளில் காணப்படும் தற்போதைய நடைமுறைகள் மற்றும் சாத்தியமான கிட்டியகால அபிவிருத்திகள் என்பவற்றை தன்னகத்தே கொண்டுள்ளன. இவ்வரைவு ஒழுங்குவிதிகளின் கீழ் பின்வரும் பணிப்புரைகளுக்கு.்.துறைகளுக்கு உரிய கரிசனை வழங்கப்பட்டது.

(அ) உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம் மீதான 2011ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்.

(ஆ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு மீதான 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் மற்றும் நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள்.

(இ) ஏனைய நியாயாதிக்கங்களின் வாடிக்கையாளர் பாதுகாப்பு மீதான சிறந்த நடத்தைகளும் ஒழுங்குவிதிகளும்.

(ஈ) இலங்கையில் வாடிக்கையாளர் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் இனங்காணப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர்களின் தற்காலப் பிரச்சனைகள் மற்றும் இடைவெளிகள்/ போக்குகள்.

அதற்கமைய, இவ்வொழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தி இந்நிறுவனங்களை உன்னிப்பாக மேற்பார்வை செய்வதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு அவசியமான அதிகாரமளித்தலுடன் இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களுக்கான செயல்திறன்வாய்ந்த வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பொன்றிற்குத் தேவையான பின்வரும் முக்கிய துறைகளை இவ்வரைவு ஒழுங்குவிதிகள் உள்ளடக்குகின்றன.

(அ) இலங்கை மத்திய வங்கியின் அதிகாரங்கள், மேற்பார்வை நடவடிக்கைகள் அத்துடன் நிதியியல் சேவை வழங்குநர்களின் ஆளுகை.

(ஆ) வெளிப்படுத்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் பெறுவழி நடைமுறைகள்.

(இ) பொறுப்புவாய்ந்த தொழில் நடத்தை, முறைப்பாடுகளைக் கையாளுதல் மற்றும் குறைதீர்த்தல் பொறிமுறை.

(ஈ) போட்டிச் சூழலும் வாடிக்கையாளர் சொத்துக்களையும் தகவல்களையும் பாதுகாத்தலும்

(உ) வாடிக்கையாளர்களை நியாயமாகவும் சமத்துவமாகவும் நடாத்துதல், நிதியியல் கல்வி மற்றும் விழிப்புணர்வு

இவ்வொழுங்குவிதிகள் விசேடமாக இலங்கை மத்திய வங்கி ஒழுங்குமுறைப்படுத்தும் நிறுவனங்களின் ஏடுகள், பதிவுகள், கணக்குகள், ஆவணங்கள், மேற்பார்வை நடவடிக்கைகள் என்பவற்றை பரீட்சிப்பதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு அதிகாரமளித்து வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் சந்தை நடத்தை பற்றிய செயல்திறன்வாய்ந்த கண்காணித்தலை இயலச்செய்கின்றன. மேலும், முன்மொழியப்பட்ட இவ்வொழுங்குவிதிகள் மத்திய வங்கி ஒழுங்குமுறைப்படுத்துகின்ற நிறுவனங்களின் சந்தை நடத்தை மேற்பார்வைக்கான அடிப்படையொன்றை வழங்கும் என்பதுடன் அதேபோன்று ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை அமுல்படுத்தி நிதியியல் வாடிக்கையாளர்களை, சந்தையினை அல்லது நிதியியல் முறைமையினைப் பாதிக்கின்ற சந்தை தவறான நடத்தைக்காக ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை எடுப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையை இயலச்செய்கின்றது. மேலும், இவ்வொழுங்குவிதிகள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி இரண்டினதும் இரு படிமுறை முறைப்பாடு கையாளுதல் நடைமுறையினை சீரமைத்து நிதியியல் வாடிக்கையாளர்களால் முன்வைக்கப்படும் செல்லுபடியான முறைப்பாடுகளுக்கான நீதிமன்றத்திற்கு வெளியேயான இணக்கப்பபாடொன்றாக நிதியியல் நிறுவனங்களை பிணிக்கின்ற தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு அதிகாரமளிக்கின்றது. ஒட்டுமொத்தமாக, இவ்வொழுங்குவிதிகள் இலங்கை மத்திய வங்கியின் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்புக்களை குறிப்பாக, 2011ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள், 2018ஆம் ஆண்டின் 01ஆம் நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள், 2018ஆம் ஆண்டின் 01ஆம் நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள் என்பவற்றின் தற்போதைய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்புக்களை சர்வதேச தரநியமங்களுக்கமைவாக வலுப்படுத்தி இலங்கை மத்திய வங்கி மூலமான சந்தை நடத்தை மேற்பார்வைக்கான அடிப்படையொன்றினை நிறுவி, இலங்கையில் நம்பத்தகுந்த மற்றும் உறுதியான நிதியியல் முறைமையின் அபிவிருத்தியினை வசதிப்படுத்தி நிதியியல் வாடிக்கையாளர்களின் நம்பகத்தன்மையினை மனதிற்பதியச்செய்யும்.

**சவால்களும் முன்னோக்கிய பாதையும்**

பல்வகைமைமைமிக்க நிதியியல் சேவை வழங்குநர்களைக் கொண்ட தொகுதியொன்றிற்கு பணியளிக்கின்ற ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பொன்றினை நடைமுறைப்படுத்துவது அளவு, நோக்கெல்லை, உற்பத்தி மற்றும் சேவைகள் அத்துடன் வாடிக்கையாளர் வகுப்பினர் நியதிகளில் பாரியளவான வேறுபாடுகளைக் கருத்திற்கொண்டு, நிதியியல் நிறுவனங்களுக்கும் அதேபோன்று இலங்கை மத்திய வங்கிக்கும் அச்சமூட்டும் கடமையொன்றாக விளங்குகின்றது. இந்நோக்கில், அநேகமான பாரிய நிதியியல் நிறுவனங்கள் புதிய ஒழுங்குவிதிகளினால் எதிர்பார்க்கப்பட்டதன்படி தரநியம பொறுப்பாணைகளை நிறைவேற்றுவதற்கு அவற்றின் தொழிற்பாடுகளையும் நடைமுறைகளையும் பாரியளவில் ஏற்கனவே மேம்படுத்தியுள்ளன. எனினும், புதிய ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும் பொருட்டு அவற்றின் ஏற்கனவே காணப்படுகின்ற கொள்கைகளுக்கு, நடைமுறைகளுக்கு, தொழிற்பாடுகளுக்கு, மூலவளங்களுக்கு உட்கட்டமைப்பு மற்றும் முறைமைகளுக்கு முக்கிய மாற்றங்களை வேண்டுகின்ற பல எண்ணிக்கையான நிறுவனங்கள் இருக்கக்கூடும். அத்தகைய நிறுவனங்கள் அவற்றின் நடைமுறைப்படுத்தல் காலவரையறைக்குள் வழங்கப்பட்ட மாறுதலடைவதற்கான காலப்பகுதியினுள் இவ்வொழுங்குவிதிகளைக் கடைப்பிடிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நவெம்பர் நடுப்பகுதியில் அமைச்சரவையின் ஒப்புதலைப்பெற்ற இவ்வரைவுச் சட்டம் 2023 தொடக்கத்தில் பாராளுமன்றத்தினால் இயற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இதன்படி, மத்திய வங்கி 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணானதாக இருக்கிறது எனக் குற்றம் சாட்டப்பட்ட குறிப்பிட்ட திட்டங்கள் தொடர்பில் பல புலனாய்வுளை நடத்தியது.** மேலும், இதுவரை முடிவுறுத்தப்பட்ட புலனாய்வுகளில் ஏற்கனவே எடுத்துக்காட்டப்பட்ட குற்றம் இழைத்தோரின் வழக்கு தொடுப்புக்களுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்குச் செய்யப்பட்ட கோரிக்கைகளைப் பின்தொடர்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பொதுமக்களின் வேறுபட்ட பிரிவினரின் நிதியியல் அறிவினை மேம்படுத்தும் நோக்குடனும் குறிப்பாக தடைசெய்யப்பட்ட திட்டங்களில் இணைந்து கொள்வதனால் ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கங்கள் தொடர்பில் அவர்களுக்கு அறிவூட்டுவதற்காகவும் மத்திய வங்கி இவ்வாண்டுப்பகுதியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை சாத்தியமான சகல மார்க்கங்களினூடாகவும் நடத்தியது.

## வெளிநாட்டுச் செலாவணியின் ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை

**2022ஆம் ஆண்டுப்பகுதியில் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்தின் முகவர் என்ற ரீதியில் மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணியை ஊக்குவிப்பதற்கும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது.** இதன்படி 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்கு அவற்றின் வெளிநாட்டுத் தாய்க் கம்பனிகள் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் அதே குழுமத்திலுள்ள கம்பனிகளிடமிருந்து மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கொடுப்பனவுகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் குறுங்கால கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிகளை வழங்குகின்ற ஒழுங்குவிதிகளும் பணிப்புரைகளும் விடுக்கப்பட்டன. மேலும், வெளிநாட்டு நாணயத் தாள்களை வைத்திருக்கும் ஒருவர் ஒன்றில் அவற்றினை வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வைப்பிலிடுவதற்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு அத்தகைய நாணயத் தாளை விற்பதற்கு

அட்டவணை 8.23

**2022 ஆண்டு காலப்பகுதியில் ஏற்றுமதி பெறுகைகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புதல் மற்றும் இலங்கை ரூபாவுக்கு மாற்றுதல்**

ஐ.அ.டொ. மில்லியன்

| | கா1 | கா2 | கா3 | கா4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| திருப்பி அனுப்பப்பட்ட ஏற்றுமதி பெறுகைகளின் மொத்த அளவு (அ) | 4,286.15 | 4,370.37 | 4,575.14 | 4,524.20 | 17,755.85 |
| இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்ட ஏற்றுமதி பெறுகைகளின் மொத்த அளவு (அ) | 1,164.77 | 954.27 | 1,030.93 | 1,070.20 | 4,220.18 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

இரண்டு மாத கால மன்னிப்புக் காலமொன்று வழங்கப்பட்ட வேளையில் வதிவோரினால் வெளிநாட்டு நாணயங்களை வைத்திருப்பதற்கான ஏற்புடைத்தான உயர்ந்தபட்ச வரையறை ஐ.அ.டொலர் 15,000 இலிருந்து ஐ.அ.டொலர் 10,000 இற்குக் குறைக்கப்பட்டது. இதன்படி, மன்னிப்புக் காலத்தில் விற்பனை செய்யப்பட்ட/ வைப்புச் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயங்களின் மொத்தத் தொகை ஐ.அ.டொலர் 35.4 மில்லியனாகக் காணப்பட்டது. மேலும், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட “தங்க சுவர்க்க விசா நிகழ்ச்சித்திட்டத்தின்” கீழ் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் கீழ் மத்திய வங்கி விடுத்த பணிப்புரைகள் இத்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களிடமிருந்தான உள்முகப் பணவனுப்பல்களுக்கு உதவியது. மேலும், சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறப்பதற்கான செல்லுபடிக் காலம் நீடிக்கப்பட்டதுடன் ஏற்கனவேயுள்ள சிறப்பு வைப்புக் கணக்குகள் புதுப்பிக்கப்படுவதற்கும் அனுமதிக்கப்பட்டன. மேலும், குறிப்பிட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்காக வெளிமுகப் பணவனுப்பலை இடைநிறுத்த மற்றும் வரையறை செய்ய நிதி அமைச்சரினால் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆரம்பத்தில் விடுக்கப்பட்ட கட்டளையொன்று இவ்வாண்டுக் காலப்பகுதியில் மேலும் நீடிக்கப்பட்டது.

**இலங்கை மத்திய வங்கி முதலீடுகள், இருபுடை வர்த்தகம் என்பனவற்றை ஊக்குவிப்பதற்காகவும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்காகவும் பல்வேறு வழிமுறைகளையும் எடுத்தது.** கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார வலயத்திலுள்ள முதலீடுகளுக்கும் கொடுக்கல்வாங்கல்களுக்கும் வசதியளிக்கும் பொருட்டு முதலீட்டாளர்களுக்கும் முதலீட்டினைப் பெறுபவர்களுக்கும் கொழும்பு துறைமுக நகரத்திலுள்ள கம்பனிகளின் ஊழியர்களுக்கும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கு அனுமதிகளை வழங்குகின்ற விதத்தில் ஒழுங்குவிதிகளும் பணிப்புரைகளும் விடுக்கப்பட்டன. மேலும், இந்திய ரூபா வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றாக நிர்ணயிக்கப்பட்டது. மேலும், இறுக்கமான வெளிநாட்டு நாணய திரவத்தன்மை சூழ்நிலைக்கு மத்தியிலும் முக்கியமாக இன்றியமையாத இறக்குமதிகளின் தடங்கலற்ற வழங்கல்களுக்கு வசதியளிக்கும் விதத்தில் 29 சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கு விசேட அனுமதிகள் வழங்கப்பட்டன. மேலும், ஏற்றுமதிப் பெறுகைகளை 180 நாட்களுக்குள் இலங்கைக்குள் கொண்டு வருவதனையும் ஏற்றுமதிப் பொருட்களின் அத்தகைய பெறுகைகளை மாற்றுவதனையும் கட்டாயப்படுத்துகின்ற விதத்தில் நாணய விதிச் சட்டத்தின் கீழ் புதிய ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. இதன்படி, தொடர்ச்சியான கண்காணிப்புக்களின் காரணமாக ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புவதில் அதிகரித்த போக்கொன்று இவ்வாண்டில் அவதானிக்கப்பட்ட வேளையில் இலங்கை ரூபாவிற்கான மாற்றல்களும் இவ்வாண்டு இறுதியில் மேம்பட்டது. மேலும், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை தீவிரமாகக் கண்காணிப்பதற்காக இலங்கைச் சுங்கம் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் ஒத்துழைப்புடன் தன்னியக்கப்படுத்தப்பட்ட ஏற்றுமதி பெறுகைகள் கண்காணிப்பு முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கி முன்முயற்சிகளை மேற்கொண்டது. அதேவேளை, புலம்பெயர் படிகளின் கீழான வெளிமுகப் பணவனுப்பல்களும் இவ்வாண்டுப்பகுதியில் திறக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் ரூபாய்க் கணக்கின் எண்ணிக்கையும் குறைவடைந்திருந்த வேளையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இவ்வாண்டுப்பகுதியில் தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகளைப் பதிவுசெய்ததன் மூலம் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகளுக்கு ஆதரவளிக்கப்பட்டது.

அட்டவணை 8.24

**வெளிநாட்டு நாணய கணக்குகளின் கொடுக்கல்வாங்கல்களின் சுருக்கம்**

ஐ.அ.டொ. மில்வியன்

| கணக்கின் வகை | உள்முக பண அனுப்பல் | | வெளிமுக பண அனுப்பல் | | திசெம்பர் 31இல் உள்ளவாறான இறுதி மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | 2021 | 2022 (அ) | 2021 | 2022 (அ) | 2021 | 2022 (அ) |
| தனிப்பட்ட வெளிநாட்டு நாணய கணக்குகள் | 663.2 | 601.8 | 234.1 | 270.7 | 2,715.4 | 2,804.8 |
| வியாபார வெளிநாட்டு நாணய கணக்குகள் | 7,647.9 | 8,209.4 | 3,756.9 | 5,269.7 | 3,071.7 | 2,795.0 |
| உள்முக முதலீட்டுக் கணக்குகள் | 854.7 | 862.2 | 1,221.9 | 843.2 | 1,969.2 | 1,714.1 |
| சிறப்பியல்புவாய்ந்த வைப்புக் கணக்குகள் | 207.1 (ஆ) | 111.7 (ஆ) | 83.0 | 61.4 | 585.2 | 751.6 |
| வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் | 11.2 | 31.3 | 6.9 | 7.4 | வி/கி | வி/கி |

(அ) தற்காலிகமானது

(ஆ) உள்முகு முதலீட்டு கணக்குகள், கரைகடந்த வங்கிகளின் கணக்குகள் மற்றும் வெளிநாட்டு நாண வைப்புகளிலிருந்து பெறப்படும் நிதிகளைத் தவிர

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.25
ரூபா கணக்கிலான மூலதன கொடுக்கல்வாங்கல் மீதான பண அனுப்புதல்கள் மற்றும் இலங்கை ரூபாவிற்கு எதிரான வெளிநாட்டு செலாவணி விற்பனையும் கொள்வனவும்

| | 2021 | 2022 |
|---|---|---|
| **புலம்பெயர் நிதி மாற்றம்** | | |
| புலம்பெயர்வதற்கான கொடுப்பனவை அனுப்புவதற்காக மத்திய வங்கியுடன் பதியப்பட்ட ரூபா கணக்கிலான மூலதன கொடுக்கல் வாங்கல் மீதான பண அனுப்புதல்களின் எண்ணிக்கை | 787 | 215 |
| ரூபா கணக்கிலான மூலதன கொடுக்கல் வாங்கல் மீதான பண அனுப்புதல்கள் ஊடாக அனுப்பப்பட்ட வெளிச் செல்லுகை (ஐ.அமெ.டொ.மில்லியன்) | 4.5 | 0.9 |
| **வெளிநாட்டு செலாவணி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் (ஐ.அ.டொ. மில்)** | | |
| வெளிநாட்டு செலாவணி விற்பனைகள் (படிவம் 1) | 11,974.43 | 11,158.81 (அ) |
| வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகள் (படிவம் 2) | 12,039.72 | 12,141.28 (அ) |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**இவ்வாண்டுகாலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் செயலாற்றம் மத்திய வங்கியினால் மிக நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டதுடன் செலாவணி வீதத்தின் மீது ஏற்படக்கூடிய ஏதேனும் தேவையற்ற அழுத்தத்தினைக் குறைக்கும் நோக்குடன் உயர்ந்த செலாவணி வீதங்களை வழங்குவதனை தடைசெய்யும் பொருட்டு நாணய மாற்று வியாபாரத்தில் மாத்திரம் ஈடுபடுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு பணிப்புரைகளும் விடுக்கப்பட்டன.** இதன்படி, இவ்வாண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 159.8 மில்லியன் வங்கித்தொழில் முறைமையில் வைப்புச் செய்யப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 10.5 மில்லியன் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களினால் விற்பனை செய்யப்பட்டது. இது, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணிசமான மேம்பட்ட செயலாற்றமொன்றாக விளங்கியமைக்கு பொருளாதார நிலைமைகள் படிப்படியாக உறுதியடைந்தமையும் ஆண்டின் பிற்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் அதிகரித்தமையும் காரணங்களாக அமைந்தன.

## கொடுகடன் தகவல்

**அநேக பெறுமதிகூட்டல்களுடன் கூடிய அதிநவீன கொடுகடன் தகவல் முகாமைத்துவ முறைமையினை நடைமுறைப்படுத்தியதன் மூலம் இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் 2022 ஆண்டுப்பகுதியில் முக்கிய மைல்கல்லொன்றினை அடைந்தது.** எனவே, ஒன்பது உறுப்பினர் கடன்வழங்கல் நிறுவனங்களின் பங்கேற்புடன் 2022 மேயில் ஆரம்பிக்கப்பட்ட இப்புதிய முறைமையின் முன்னோடி பரீட்சிப்பு நடவடிக்கைகள் தொடர்புபட்ட உறுப்பினர்களிடமிருந்தான நேர்க்கணிய பிரதிபலிப்புக்களுடன் 2022 யூலையில் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது. அதன் பின்னர் புதிய முறைமையின் பழைய முறைமையுடனான சமாந்தர நடவடிக்கைகள் 2022 ஓகத்தில் தொடங்கியமையானது உறுப்பினர் கடன்வழங்கல் நிறுவனங்களின் அனைத்து பயன்படுத்துநர்களும் புதிய முறைமையுடன் பரீட்சயமாகிக் கொள்வதற்கு புதிய முறைமையை அணுகுவதனை இயலுமைப்படுத்தியது. கொடுகடன் தகவல் முகாமைத்துவ முறைமை 2022 திசெம்பரில் முழுமையாகத் தொடங்கப்பட்டது. புதிய முறைமையானது கொடுகடன் தகவல் பணியகத்தின் செய்முறைகளுக்கு பெருமளவு வினைத்திறனையும் பன்னாட்டு ரீதியான நடைமுறைகளையும் சாதனச் சொத்துப்பட்டியல்களுக்கு விரிவாக்கத்தினையும் கொண்டு வந்த வேளையில், கடன்வழங்கல் சொத்துப்பட்டியலின் சிறந்த முகாமைத்துவத்திற்காக கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு புரட்சிகரமான இடர்நேர்வு முகாமைத்துவத்தினையும் கொடுகடன் மதிப்பீட்டு உத்திகளையும் வழங்கியது. இதற்கு மேலதிகமாக, இம்முறைமை பாரம்பரியமற்ற தரவு சேகரிப்பிற்கான பணியகத்தின் இயலுமையையும் மேம்படுத்தும்.

**அதேவேளை, கொடுகடன் தகவல் பணியகம், 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடன்வழங்கல் உறுப்பினர் நிறுவனங்களுக்கு 6.1 மில்லியன் கொடுகடன் அறிக்கைகளை வழங்கியதன் மூலம் தேசிய கொடுகடன் தகவல் பதிவகம் என்ற அதன் சட்டபூர்வமான வகிபாகத்தினைத் தொடர்ந்தும் ஆற்றியது.** எனினும், 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் வழங்கப்பட்ட கொடுகடன் அறிக்கைகளில் 27 சதவீதம் கொண்ட வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்டது. 2022இல் உறுப்பினர் கடன் வழங்கும் நிறுவனங்கள் 5.6 மில்லியன் வாடிக்கையாளர் கொடுகடன் அறிக்கைகளையும் 0.4 மில்லியன் கூட்டாண்மை கொடுகடன் அறிக்கைகளையும் பெற்றுக்கொண்டன. மேலும், கொடுகடன் தகவல் பணியகம் "தொகை கோரிக்கை" மாதிரியினூடாக கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு 729,635 கொடுகடன் அறிக்கைகளை வழங்கியது. அதேவேளை, சுயவிசாரணை கொடுகடன் அறிக்கைகளுக்கான கேள்வி (ஐ.அறிக்கைகள்) 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 13.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

## இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதிக்கான வழிகாட்டலை நடைமுறைப்படுத்தல்

**தொடர்பான ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் இலங்கை மத்திய வங்கி 2022 மேயில் இலங்கை பசுமை நிதி வகைப்படுத்தலொன்றைத் தொடக்கியது.** வகைப்படுத்தலானது, பசுமை/ சூழல் நிதியிடல் சாதனங்களுக்கும் பணிகளுக்குமான நிதிகளைத் திரட்டிக் கொள்வதில் நிதியியல் நிறுவனங்களுக்கு வழிகாட்டல்களை வழங்கும் நோக்குடன் சூழல் ரீதியான நீடித்துநிலைத்திருக்கக்கூடியது என கருதப்படக்கூடிய பொருளாதார நடவடிக்கைகளின் விபரமான பகுப்பொன்றினை வழங்குகிறது. வகைப்படுத்தலானது, ஐரோப்பிய மற்றும் சீன வகைப்படுத்தல்கள் இரண்டினையும் இணங்குவிக்கின்ற நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதியின் பொது வகைப்படுத்தலின் பன்னாட்டு தளத்தினை அடிப்படையாகக் கொண்டு 2019இல் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின்

8

சிறப்புக்குறிப்பு 13
இலங்கையில் நிதியியல் பாதுகாப்பு வலையை வலுப்படுத்தல்

1. அறிமுகம்

நிதியியல் பாதுகாப்பு வலைகள் என்பது சாதாரண பொருளாதார நிலைமைகளில் வினைத்திறன்மிக்க மற்றும் உறுதியான வங்கித்தொழில் முறைமையை ஊக்குவிப்பதற்கும் நிதி நெருக்கடியின் விளைவுகளை நிர்வகிப்பதற்கும் நாடுகின்ற நிறுவனங்கள், சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றின் தொகுப்பாகும், நிதியியல் பாதுகாப்பு வலையானது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் நிதியியல் உறுதிப்பாட்டையும் ஊக்குவிக்கும் பரந்த குறிக்கோளுடன் முன்மதியுடைய ஒழுங்குபடுத்தல்கள், மேற்பார்வை, தீர்மானம், இறுதிக்கடன் ஈவோன், வைப்பு காப்புறுதி மற்றும் நிதி அமைச்சின் வகிபாகம் அல்லது திறைசேரியின் தொழிற்பாடுகள் ஆகியவற்றினை உள்ளடக்குகின்றது. நிதிப் பாதுகாப்பு வலைகளானது நெருக்கடி தடுப்பு பொறிமுறைகளுக்கு ஆதரவளித்தல், நெருக்கடியின் போது நிதியளித்தல் மற்றும் ஊக்கத் தொகைகளை வழங்குவதன் மூலம் ஆற்றல்வாய்ந்த பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளை ஊக்குவித்தல் என்பவற்றிற்கானதொரு வழிமுறையாக பொருளாதாரமொன்றிற்கு முக்கியமானதாக காணப்படுகின்றன.

எந்தவொரு பொருளாதாரத்தினுடைய தொழிற்பாட்டிலும் நிதியியல் முறைமை முக்கியமான பங்கு வகிக்கின்றது. நிதி நிறுவனங்களானது நிதியியல் இடையேற்பாடடை வழங்குகின்ற அதேவேளை அவற்றின் பன்முகப்படுத்தப்பட்டதும் சிக்கலானதுமான வைப்பு பொறுப்பு கணக்கின் மூலம் அதிக இடர்நேர்வுகளை எடுத்துக்கொள்ள முனைகின்றன. எனவே, நவீன உலகப் போக்கு பற்றிய குறைவான அறிவுடைய வைப்பாளர்களைப் பாதுகாப்பதற்கு பொருளாதாரமொன்றிற்கு நிதிப் பாதுகாப்பு வலை நடவடிக்கைகள் மிக முக்கியமானதாக விளங்கி வருகின்றது. ஒரு நாட்டின் மேற்பார்வைக் கட்டமைப்பைப் பொறுத்து, நாட்டின் நிதிப் பாதுகாப்பு வலைக்குள் பல நிறுவனங்கள் முக்கிய வகிபாகம் வகிக்கின்றன. இருப்பினும், சில நாடுகளில், மத்திய வங்கிகளானது வங்கி ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் தீர்மானமெடுத்தல் ஆகிய பிரத்தியேகமான பொறுப்பைக் கொண்டுள்ளதுடன் மேலும் வெளிப்படையான அல்லது மறைமுகமான வைப்புக் காப்பீட்டுப் பாதுகாப்பையும் வழங்குகின்றன.

இலங்கையில், அண்மைய ஆண்டுகளில் நிதியியல் முறைமையானது குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உட்பட்டுள்ளதுடன் நிதியியல் முறைமையின் அதிகரித்து வரும் சிக்கலான தன்மை, நிதியியல் அதிர்ச்சிகள் மற்றும் நெருக்கடிகள் என்பவற்றிற்கு மிகவும் பாதிக்கப்படக்கூடியதாக ஆக்கியுள்ள அதேவேளை நிதியியல் முறைமையின் தாக்குபிடிக்கும்தன்மையை வலுப்படுத்துவதற்கும் நிதியியல் முறைமையில் வைப்பாளர்களினதும் வேறு பங்குதாரர்களினதும் நலன்களைப் பாதுகாப்பதற்கும் ஆற்றல்வாய்ந்த நிதியியல் பாதுகாப்புத் தேவையை வலியுறுத்துகின்றது. நாட்டின் நிதியியல் முறைமையின் வலிமையையும் வினைத்திறனையும் உறுதி செய்வதற்காக, இலங்கை மத்திய வங்கியும் நிதி அமைச்சும் நிதியியல் பாதுகாப்பு வலையில் முதன்மை ஆர்வலராக நெருக்கமாக கூட்டிணைந்துள்ளன.

2. மத்திய வங்கியினதும் நிதி அமைச்சினதும் வகிபாகம்

இறுதிக் கடன் ஈவோன், வங்கிகளினதும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினதும் மேற்பார்வை அதிகாரி, தீர்மான அதிகாரி மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளினதும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் வைப்பாளர்களின் காப்புறுதி வழங்குநர் போன்ற தொழிற்பாடுகளூடாக இலங்கை மத்திய வங்கி நிதியியல் பாதுகாப்பு வலை பொறிமுறையில் முக்கிய வகிபாகத்தை வகிக்கிறது. மறுகரத்தில், நிதி அமைச்சானது சாதாரண பொருளாதார நிலைமைகளின் போது நிதியியல் துறைசார் கொள்கைகளை அமைப்பதற்கு பொறுப்பாகவும் மற்றும் நிதி நெருக்கடிகளான காலப்பகுதியில் நெருக்கடி முகாமைத்துவத்தில் முக்கிய வகிபாகத்தை வகிக்கின்ற நிதியியல் பாதுகாப்பு வலையில் ஒரு முக்கிய பங்கேற்பாளராகக் காணப்படுகின்றது.

3. இறுதிக் கடன் ஈவோன்

நிதியியல் ரீதியான குழப்பக் காலப்பகுதியில், தமது நாளாந்த தொழிற்பாடுகளுக்கு அவசியமான நிதியைப் பெற்றுக்கொள்வதில் வங்கிகள் சவால்களை எதிர்கொள்ளலாம் என்பதுடன் அவற்றின் இறுதிக் கடன் ஈவோனான இலங்கை மத்திய வங்கியை அணுகலாம். வங்கிகள் ஒன்றுக்கொன்று கடன் வழங்கத் தயங்கும் சந்தர்ப்பங்களிலும், மற்றும் வைப்பாளர்கள் தங்கள் வங்கிக் கணக்குகளிலிருந்து அவர்களது நிதியங்களை மீளளெடுக்கின்ற போது இது நிகழலாம். அத்தகைய சூழ்நிலைகளில், நிதியியல் சந்தைகளின் மிதமான தொழிற்பாட்டை ஊக்குவிப்பதற்கும் உறுதியான நிதியியல் முறைமையை பேணுவதற்கும் இலங்கை மத்திய வங்கி முக்கிய பொறுப்பாக கொண்டிருப்பதால், இறுதிக் கடன் ஈவோனாக இலங்கை மத்திய வங்கி தொழிற்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி பொதுவாக நிதியியல் பீதியைத் தூண்டுகின்ற, நாணய மற்றும் வங்கி உறுதிப்பாட்டை அச்சுறுத்துகின்ற அவசரகாலப்பகுதியில் இறுதிக்கடன் ஈவோன் தொழிற்பாட்டினை வழங்குகின்றது. அத்தகைய சூழ்நிலையில், அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பில் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு வரைவிலக்கணம் செய்யப்பட்ட எந்தவொரு பிணைய உறுதியுடன் பிணையளிக்கப்பட்டு வங்கிகளுக்கு அதிவிசேட கடன்களை அல்லது முற்பணங்களை வழங்க இலங்கை மத்திய வங்கிக்கு தற்றுணிவைக் கொண்டுள்ளதுடன் தேவைக்கேற்றவாறு அத்தகைய கடன்களை அல்லது முற்பணங்களை மீளப்புதுப்பிக்கலாம்.

தற்பொழுது, வங்கிகளானது அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுவழிக்கான ஏதேனும் விசேட தேவைகளை பூர்த்திசெய்ய வேண்டியதில்லை இருப்பினும் ஏற்புடைய வட்டி விகிதங்கள், தவணைக்காலம், புதுப்பித்தல்கள், பிணைய உறுதி மற்றும் ஏனைய தொடர்புடைய விடயங்கள் போன்றவற்றை தீர்மானிப்பதில் இலங்கை மத்திய வங்கி முழு தற்றுணிவைக் கொண்டுள்ளது. எவ்வாறிருப்பினும், ஒரு உரிமம்பெற்ற வங்கி கடன்தீர்க்கும் ஆற்றல் அல்லது கடன்தீர்க்கவகையற்றதாக வரக்கூடியதாக கருதப்படுமாயின்

அல்லது எதிர்காலத்தில் கடன் தீர்க்கும் ஆற்றலுடையதாவதற்கு நியாயமான வாய்ப்பு இல்லையாயின், விதிவிலக்கான சந்தர்ப்பங்களைத் தவிர அத்தகைய வங்கி அவசரகாலக் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு தகுதியற்றதாகக் கருதப்படும்.

மத்திய வங்கிகளால் வழங்கப்படும் அவசரகாலக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் கடன்தீராற்றலைக் கொண்ட வங்கிகளில் உள்ள தூய்மையான திரவத்தன்மை பிரச்சனைகளை எதிர்கொள்ளும் ஒரு நடவடிக்கையாக பொதுவாக பார்க்கப்படுகிறது. இருப்பினும், நடைமுறையில் இத்தகைய நிலைமைகள் அரிதாகவே காணப்படுகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், வங்கிகள் திரவத்தன்மை பிரச்சனைகளை எதிர்கொள்ளும்போது, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கடன் தீர்க்கும் ஆற்றல் தொடர்பாக சில நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றன. ஒரு நிறுவனத்தின் கடன் தீர்க்கும் ஆற்றலை மதிப்பிடுவதற்கு வழமையாக காலமெடுப்பதுடன் முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளால் அவை உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 4. முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்புகள்

முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தலானது, நிதி நிறுவனங்கள் கடைப்பிடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற தரநியமங்கள் மற்றும் கொள்கைகளை நிறுவுகிறது. மேற்பார்வைக் கட்டமைப்பின் கீழ், நிதித் துறையின் பாதுகாப்பு மற்றும் உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டின் குறிக்கோளை அடைந்துகொள்ளல் ஆகியவற்றை உறுதிசெய்வதற்கு இத்தரநியமங்களும் கொள்கைகளும் நடைமுறைப்படுத்துவதை இது கண்காணிக்கிறது.

இலங்கையின் வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பானது 1948ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் மற்றும் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் ஆகியவற்றில் முதன்மையாகக் குறித்துரைக்கப்பட்டுள்ளது. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கவும், அவற்றுக்கு முன்மதியுடைய பணிப்புரைகள், தீர்மானங்கள், கட்டளைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றை உரிமம்பெற்ற நிறுவனங்களுக்கு வழங்குவதற்கும், மேற்பார்வை மற்றும் பரீட்சிப்புக்களை நடத்தவும் மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தவும், பலவீனமான உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை தீர்க்கவும் இலங்கை மத்திய வங்கி அதிகாரம் பெற்றுள்ளது. வங்கி மேற்பார்வைக்காக பாசல் (டீயளநட) குழுவால் நிறுவப்பட்ட சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற மேற்பார்வை தரநியமங்களை இலங்கை மத்திய வங்கி பின்பற்றுகிறது. சாத்தியமான நெருக்கடி நிலைக்குத் தயாராவதற்கு, வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் முறிவடைவதை தீர்ப்பதற்குமான வழிமுறைகளை உள்ளடக்கிய அவசரகாலத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துமாறு வங்கிகளையும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களையும் மேற்பார்வையாளர்கள் கோருகின்றனர்.

### 5. வைப்புக் காப்புறுதி முறைமை

வைப்புக் காப்புறுதி வழங்குநர் ஒருவரின் வகிபாகமானது விசேடமாக வங்கி முறிவடைகின்ற சந்தர்ப்பத்தில் நிதியியல் முறைமையில் பொதுமக்களின் நம்பிக்கையை உறுதி செய்வதன்மூலம் அதன் உறுதிப்பாட்டினைப் பேணுவதாகும். வைப்புக் காப்புறுதி வழங்குநர், வங்கி மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் தோல்வியடைந்தாலும், காப்பீடு செய்யப்பட்ட நிதியங்களை உடனடியாக பெற்றுக்கொள்வதனை வைப்பாளர்களுக்கு உறுதியளிக்கிறார்கள், அதன்மூலம் வங்கி மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் வைப்பாளர்களுடைய விலகலிற்கான சந்தர்ப்பங்களையும் மற்றும் இதன்பயனாக, ஒரு பரந்த பொருளாதாரத்தின் மீதான கசிவுத்தாக்கத்தைக் கொண்டிருக்கும் பரவலுக்கான இடர்நேர்வினைக் குறைத்து நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணி வளர்க்கின்றனர்.

பொதுவாக வைப்புக் காப்புறுதி முறைமைகள் குறுகிய முறைமைகள் (கொடுப்பனவுப் பெட்டி) முதல் பல்வேறு சேர்க்கைகளுடன் இடர்நேர்வு அல்லது நட்டத்தைக் குறைத்தல் போன்ற பரந்த அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள், பல்வேறு கட்டளைகளைக் கொண்டிருக்கும் வைப்புக் காப்புறுதி முகவர்கள் எனப்படும் நிறுவனங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. சில வைப்புக் காப்புறுதி முகவர்கள் சில வைப்புக் காப்புறுதி முகவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட "கொடுப்பனவுப் பெட்டி பொறுப்பாணை" என்பதைக் கொண்டிருக்கலாம், இது நிதியியல் நிறுவனம் தோல்வியுறும் சந்தர்ப்பத்தில், காப்பீடு செய்யப்பட்ட வைப்பாளர்களின் மீளளிப்புக்களில் கவனம் செலுத்துகிறது. ஏனைய வைப்புக் காப்புறுதி முகவர்கள் சொத்துகளைப் பிரித்தல், பிரிஜ் வங்கியொன்றைத் திறத்தல், திறந்த வங்கி உதவியை வழங்குதல், பிணை எடுத்தல் போன்ற நிதியியல் நிறுவனங்களின் தீர்வு நடவடிக்கைகளுக்கு நிதியியல் உதவியை வழங்குதல் தொடர்பான பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களைக் கொண்ட மேம்படுத்தப்பட்ட "கொடுப்பனவுப் பெட்டி பொறுப்பாணையைக்" கொண்டிருக்கலாம்.

'வைப்புக் காப்புறுதி முகவர்கள் நட்டத்தை அல்லது இடர்நேர்வைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள நேரடியான பொறுப்பாணையொன்றைப் பயன்படுத்தலாம். நட்டக் குறைப்பாளர்கள் தொழிற்பாட்டற்றுக் காணப்படும் வங்கிகளின் நிலையைத் தீர்ப்பதற்கான செலவைக் குறைக்கும் குறிக்கோளுடன் செயல்படுகின்ற அதேவேளை இடர்நேர்வுக் குறைப்பாளர்கள் ஒட்டுமொத்த நிதியியல் முறைமையின் இடர்நேர்வைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

### 6. இலங்கை வைப்புக் காப்புறுதியும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டமும்

இலங்கையின் வைப்புக் காப்புறுதி முகவர் என்பது இலங்கை வைப்புக் காப்புறுதியும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டம் என அழைக்கப்படுகின்றதுடன் இலங்கை மத்திய வங்கியின் கண்ணோட்டத்தின் கீழ் செயற்படுவதாகும். நிதியியல் முறைமையில்

8

பொதுமக்களுடைய நம்பிக்கையை நிலைநாட்டுவதை நோக்கமாகக்கொண்டு, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டமானது நாணய விதிச் சட்டம், வங்கித்தொழில் சட்டம் மற்றும் தற்போதுள்ள நிதித்தொழில் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின்படி இலங்கை மத்திய வங்கியினால் கட்டாய வைப்புக் காப்புறுதி முறைமையாக 2010 இல் நிறுவப்பட்டது. தற்போது, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டமானது 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்ட ஒழுங்குவிதிகளினால் கட்டுப்படுத்தப்படுகிறது.

இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டமானது உரிமம்பெற்ற வங்கி மற்றும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் தொழிற்பாடற்ற சந்தர்ப்பத்தில், சிறு வைப்பாளர்களைப் பாதுகாப்பதற்கான பொறிமுறையொன்றை எடுத்துக் காட்டியுள்ளது. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டமானது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம் எனப்படும் முன்னிருந்த (நுஒ யுவெந கரனெ) நிதியினைப் பேணி வருவதுடன் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்திற்கான நிதியின் முதன்மை வழக்கமான ஆதாரமாக உறுப்பினர் நிறுவனங்களால் செலுத்தப்படும் கட்டணத்தொகையாக காணப்படுகின்றது. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் உறுப்பினர் நிறுவனங்களான இலங்கையிலுள்ள அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்திற்கு காப்புறுதி கட்டணத்தொகையை முறையே அவற்றின் மூலதன போதுமை விகிதத்தின் அடிப்படையில் காலாண்டிற்கு ஒரு தடவையும் மற்றும் மாதாந்தம் நிலையான விகிதத்திலும் செலுத்த வேண்டும். தற்போது, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டம் ஒரு கொடுப்பனவுப் பெட்டி பொறுப்பாணையுடன் தொழிற்படுவதுடன் நெருக்கடியைத் தடுப்பிற்கானதும் முகாமைத்துவத்திற்கானதும் கருவியாகவும் செயல்படுகிறது.

### 7. நிதியியல் பாதுகாப்பு வலையை வலுப்படுத்துதல்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவதற்கு நிதியியல் பாதுகாப்பு வலையின் சரியான செயல்பாடு இன்றியமையாததாகக் காணப்படுவதுடன் அதனை வலுப்படுத்துவதற்கான வழிகளையும் வழிமுறைகளையும் ஆராய்வது கட்டாயமானதாகும். கடந்த கால நிதியியல் நெருக்கடிகள், உலகம் முழுவதும், பிராந்திய மற்றும் தேசியளவில் போதுமான பாதுகாப்பு வலை ஏற்பாடுகளை வைத்திருப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளன. நிதியியல் நெருக்கடிகளின் போது சந்தை நம்பிக்கையை அதிகரிப்பதற்கு, நன்கு தொழிற்படும் நிதியியல் பாதுகாப்பு வலையின் அவசியத்தை இது வலியுறுத்திக் காட்டுகிறது. நிதியியல் உறுதிப்பாட்டையும் மீளெழுச்சியையும் நிலைநிறுத்துவதற்கு மேம்படுத்தப்பட்ட பிராந்திய ஒத்துழைப்பு அவசியமான காலங்களில் ஒரு முக்கிய பாதுகாப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நிதியியல் பற்றாக்குறை கடுமையான சிக்கல்களையும் மேலதிக செலவுகளையும் ஏற்படுத்தும். ஆகையினால், தீர்மானமெடுக்கும் அதிகாரசபை தேவையான திரவத்தன்மை வழங்கும் தீர்மான நுட்பங்களை நாடலாம். இதற்கு மேலதிகமாக, போதியளவு நிதியிடல் இல்லாதபோது, தீர்மானமெடுத்தல் செயல்முறையில் தாமதம் ஏற்படுவதற்கு வழிவகுக்கலாம். தீர்மானமெடுக்கும் அதிகாரசபையொன்று நிறுவனத்தின் தீர்மானத்தை பிற்போடும் போது, சொத்துகளின் தரம் தொடர்ந்தும் மோசமடையக்கூடும் என்பதுடன் தார்மீக இடர்நேர்வு பிரச்சனை மேலும் உயர்வடையும்.

நிதியியல் பாதுகாப்பு வலையமைப்பின் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் அதை ஒழுங்குபடுத்தும் சட்டக் கட்டமைப்பை நெறிப்படுத்துவதும் பலப்படுத்துவதும் அவசியமாகவுள்ளது. சிக்கலான, குழப்பமான மற்றும் பெரும்பாலும் வெளிப்படைத் தன்மையற்ற கட்டமைப்பு காரணமாக தற்போது, வங்கித் தீர்மானத்தை நிர்வகிக்கும் சட்டக் கட்டமைப்பு சிதறடிக்கப்பட்டுள்ளது, மேலும், இலங்கையில் பின்பற்றப்படும் வங்கிகளுக்கான நீதிமன்ற உந்துதல் நடைமுறைகள் மெதுவானதாகக் கருதப்படுகிறது, இது வங்கியொன்றின் பங்குதாரர்கள் வங்கியைத் தீர்ப்பதற்கு கட்டுப்பாட்டாளரின் அதிகாரத்தை சவால் செய்தால் தீர்வு செயல்முறையை தாமதப்படுத்தலாம். வங்கி இணைப்புகளில் ஈடுபட்டுள்ள அதிகாரத்துவ செயல்முறையானது வங்கிகளின் தீர்மானத்தை மேலும் சிக்கலாக்குவதோடு நிச்சயமற்ற தன்மையையும் உருவாக்குகிறது, இது நிதியியல் முறைமையை சீர்குலைக்கும். இதற்கு தற்போதைய கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வது மற்றும் வங்கி தீர்மானம் மற்றும் இணைப்புகளுக்கு மிகவும் திறமையான மற்றும் நெறிப்படுத்தப்பட்ட செயல்முறையைப் பின்பற்றுவது அவசியமாகும்.

நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டின் சிறந்த செயல்திறனுக்கு வைப்புக் காப்புறுதி முறைமை வலுப்படுத்துவது இன்றியமையாதாகும். கடந்த 10 ஆண்டுகளாக, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டமானது "கொடுப்பனவுப் பெட்டி" செயற்பாட்டினை செயலாற்றி வருகின்றது. இருப்பினும், வைப்பாளர்களுக்கு சரியான நேரத்தில் பணத்தைச் செலுத்துவதற்கான அதன் முயற்சிகளில், வைப்பாளர்கள் தொடர்பான போதிய தகவல் பகிர்வு ஏற்பாடுகள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளில் தனிப்பட்ட அடையாள எண்ணின் கீழ் வைப்புத்தொகையாளரின் தகவலைப் பராமரிக்கத் தவறியதன் காரணமாக இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்ட சவால்களை எதிர்கொள்கிறது. இச்சவால்களை எதிர்கொள்வது மற்றும் வைப்புத்தொகையாளர்களுக்கான வலுவான தகவல் பகிர்வு மற்றும் அடையாள அமைப்புகளை செயல்படுத்துவதன் மூலம் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் செயற்றிறனை மேம்படுத்துவதில் நீண்ட தூரம் செல்லவும் மற்றும் இறுதியில், நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை வலுப்படுத்தவும் முடியும். உலகளவில், பரந்தளவிலான பொறுப்பாணைகளுடன் கூடிய வைப்புக் காப்புறுதி முறைமைகள், வங்குரோத்திற்குட்பட்ட வங்கிகளுக்குத் தீர்வு காண்பதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளன. இவ்வேறுபாடு, தூய்மையான கொடுப்பனவுப் பெட்டி அமைப்புகளுடன் ஒப்பிடும் போது, காப்பீட்டாளருக்கு செலவுகளை

நிவர்த்தி செய்வதற்கான அதிக திறனை வழங்குகிறது. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டம் தோல்வியுற்ற நிறுவனத்தைத் தீர்ப்பதற்கு "குறைந்த செலவு" அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும். இவ்வணுகுமுறையானது அரசாங்கம், ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்புகள், மத்திய வங்கி மற்றும் வைப்புக் காப்பீட்டாளர் ஆகிய பாதுகாப்பு வலை பங்கேற்பாளர்கள் மத்தியில் நெருக்கமான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு என்பனவற்றை உள்ளடக்குகிறது. போதுமான அதிகாரங்கள், தொழிற்பாட்டுச் சுதந்திரம் மற்றும் தற்செயல் நிதியளித்தலுக்கான உறுதியான ஆதாரங்களுடன், போதுமான பரந்த பொறுப்பாணைகளைக் கொண்ட வைப்புத்தொகை காப்பீட்டாளர்கள், மக்களின் நம்பிக்கையை வளர்ப்பதிலும், பேணுவதிலும் மற்றும் நிதியியல் நெருக்கடிகளை கையாள்வதிலும் மிகவும் திறம்பட செயற்பட்டுள்ளனர் என்பதை அனுபவத்தினூடாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அசாதாரண சூழ்நிலையில் வங்கிகளின் முறைமையில் தோல்வி ஏற்படின், நிதியியல் உறுதிப்பாடு பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, வைப்புக் காப்பீட்டாளர் மட்டுப்பாடற்றதும் மற்றும் விரைவான அணுகலுடன் காப்பு (டியஉமளவழி) நிதியுதவியுடன் இருப்பது அவசியமாகும். ஒட்டுமொத்தமாக, வைப்புத்தொகைக் காப்பீட்டு முறைமையின் வெற்றியானது, வைப்பாளர்களுக்கு நம்பகமான மற்றும் பயனுள்ள பாதுகாப்பை வழங்கும் ஆற்றலில் தங்கியுள்ளது.

நிதியியல் பாதுகாப்பு வலையை வலுப்படுத்துவதில், வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தேவைப்பாடுகளுடன் இணக்குதல் வேண்டும். புதிய வங்கித்தொழில் சட்டத்தின் இறுதிப்படுத்தி பின்பற்றலின் போது, இக்காரணி கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

எனவே, பாதுகாப்பு வலையின் இருப்பானது தார்மீக இடர்நேர்விற்கு வழிவகுக்கின்றது, இது நிதியியல் இடர்நேர்வுகளை எதிர்கொள்பவர்களுக்கு மத்தியில் இழப்புகளில் இருந்து பாதுகாக்கப்படும் அதேவேளை, தாம் மேற்கொள்ளும் இடர்மிகு முதலீடுகளினால் ஏற்படும் பலனைப் பெறுவார்கள் என்று நம்பவைப்பதன் மூலம் இடர்மிகு நடத்தையை ஊக்குவிக்கிறது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அனைத்து வகைகளுக்கும் ஒரே மாதிரியான கட்டணத்தை அறவிடுவதன் மூலம் தார்மீக இடர்நேர்வுகள் அதிகரிக்கப்படலாம். இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டம், தார்மீக இடர்நேர்வுக்கு இடையேயான பரிமாற்றத்தை நிர்வகிப்பதற்கும், ஏற்கனவே பலவீனமாக இருக்கும் வங்கிகள் மீது உயர்ந்தளவான மிகைகளின் மேலதிக சுமையை இடுவதற்கு ஒரு பொறிமுறையை செயல்படுத்தும்போது, இடர்நேர்வு அடிப்படையிலான மிகைகளை விதித்தல் வேண்டும். இருப்பினும், சந்தை அடிப்படையிலான இடர்நேர்வு மிகைகளைச் சுமத்துவது, உயர்ந்தளவான காப்பீடுகளின் சுமையால் ஏற்கனவே பலவீனமான வங்கிகளின் பங்கு விலைகளை எதிர்மறையாக பாதிக்கலாம். அதற்கமைய, இடர்நேர்வு அடிப்படையிலான மிகைகளை அறிமுகப்படுத்துதல், சில வைப்புத்தொகை வகைகளை காப்பீட்டிலிருந்து விலக்குதல், தீவிர கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறை மற்றும் நெருக்கடியான நிறுவனங்களின் சரியான நேரத்தில் தலையீடு மற்றும் தீர்வு போன்ற நிதியியல் உறுதிப்பாடு மற்றும் சந்தை துறை ஆகியவற்றுக்கு இடையேயான சமநிலையை உறுதிசெய்யப் பொருத்தமான கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றன. கடன்தீராற்றலற்ற நிதியியல் நிறுவனங்களை தோல்வியடைய அனுமதித்து கடன்தீராற்றலற்ற நிலைக்கு அருகில் வரும் செலவுகளைச் சுமத்துதல் நிதியியல் இடர்நேர்வுகளை எதிர்கொள்பவர்களை ஒழுங்குமுறைப்படுத்தி, பாதுகாப்பு வலையின் வடிவமைப்பிற்குள் தார்மீக இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் சந்தைக்கு மிகச் சிறந்த வழியாகும் தார்மீக அபாயம் மற்றும் நிலையான நிதியியல் முறைமை ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு நியாயமான சமநிலையானது, சந்தை ஒழுங்குமுறைப்படுத்தும் நடத்தையை அனுமதிக்கும் அதேவேளையில் முறையான இடர்நேர்வை ஏற்படுத்தும் தோல்விகளுக்கு மிகக் குறைந்த விதிவிலக்கை அனுமதிக்கும். ஆகையினால், கடன்தீராற்றலற்ற வங்கிகள் பொதுவாக தோல்வியடைய அனுமதிக்க வேண்டும் என்பதுடன் வங்கி திறந்த நிலையில் இருக்க உதவினால் பங்குதாரர்கள் தமது பங்குகளை இழக்க நேரிடும். விதியொன்றாக நிலையானதொரு நிதியியல் முறைமைக்கும் தார்மீக இடர்நேர்விற்குமிடையிலான இச்சரியான சமநிலை, பாதுகாப்பு வலை என்பது கடன்தீராற்றலற்ற நிறுவனங்கள் வீழ்ச்சியடையக்கூடிய ஒரு வலையாக இருக்கும், மேலும் கடன்தீராற்றலற்ற நிறுவனங்கள் தோல்வியடையும் அளவுக்கு வீழ்ச்சியடைவதைத் தடுக்கும் தளமாக இருக்காது என்பதனை உறுதிசெய்கிறது.

### 8. நிதியியல் பாதுகாப்பு வலையை வலுப்படுத்தவும், முன்னேற்றவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள்

தற்போது, இலங்கையின் நிதியியல் பாதுகாப்பு வலையை வலுப்படுத்த இலங்கை மத்திய வங்கியினால் கணிசமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரங்களை விரிவுபடுத்துவதும், நிதியியல் நிறுவனங்களுக்கான சிறப்புத் தீர்மான முறையை அமைப்பதன் மூலம் தீர்மானக் கட்டமைப்பை மேம்படுத்துவதும், தீர்மானக் கருவிகளை விரிவுபடுத்துவதும், வைப்புத்தொகைக் காப்பீட்டை மேம்படுத்துவதும், அவசரகால திரவத்தன்மை உதவியை மேம்படுத்துவதும் முக்கியமானதாக உள்ளது. புதிய வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் இறுதியாக்கல் மற்றும் ஏற்றுக்கொள்ளல் இவ்விலக்குகளை அடைய உதவும். பாரியளவிலான மற்றும் நவீன நிதியியல் நிறுவனங்கள் இறுக்கமான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தேவைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்றாலும், வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு ஒரே மாதிரியான வங்கிச் செயல்பாடுகளை நடத்துவதை உறுதிசெய்வது முக்கியமாகும். ஏற்கனவே பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மத்திய வங்கி சட்டமூலம், நிதி நிறுவனங்களின் தீர்வுக்கு பொறுப்பான அதிகாரமாக இலங்கை மத்திய வங்கியை அங்கீகரிக்கும் அதே வேளையில், முன்மொழியப்பட்ட வங்கிச் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் விரிவான மீட்பு மற்றும் தீர்மான திட்டமிடல் செயல்முறை, தீர்மானத்திற்கான தூண்டுதல்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு ஆகிய இரண்டும் பயன்படுத்தக்கூடிய தீர்மானம்

8

அதிகாரங்கள் ஆகியவற்றை விபரிக்கின்றது. பாதுகாப்பு வலை நடவடிக்கையாக, நிதி நிறுவனத்தின் தீர்மானம்

i. கொடுப்பனவு, கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் உட்பட நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு

ii. உரிமம்பெற்ற வங்கிகளின் முக்கியமான செயல்பாடுகளின் தொடர்ச்சி

iii. பொது நிதியியல் ஆதரவைக் குறைப்பதன் மூலம் பொது நிதிகளைப் பாதுகாத்தல்

iv. அத்தகைய வங்கிகளின் வைப்பாளர்களுக்கான பாதுகாப்பு மற்றும்

v. சொத்துக்களின் மதிப்பின் தேவையற்ற அழிவைத் தவிர்ப்பது மற்றும் கடனாளிகளுக்கு ஏற்படும் இழப்புகள் மற்றும் தீர்வுக்கான ஒட்டுமொத்த செலவுகளைக் குறைக்க முயற்சித்தல்.

ஆகியவற்றை உறுதிசெய்யும்.

இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்திலிருந்து நிறுவனமொன்றின் வைப்பாளருக்கு வழங்கப்படும் அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை ரூ.200,000 இலிருந்து தற்பொழுது ரூ.1,100,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டம் சென்றல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, த ஸ்டான்ரட் கிறடிட் பினான்ஸ் லிமிடெட், ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட் த பினான்ஸ் கம்பனி பிஎல்சி மற்றும் ஈரிஐ பினான்ஸ் லிமிடெட் ஆகிய உரிமம் இரத்துச்செய்யப்பட்ட. இடைநிறுத்தப்பட்ட ஆறு நிதி நிறுவனங்களின் காப்பீடு செய்யப்பட்ட வைப்பாளர்களுக்கு இழப்பீடாக செலுத்தி வருகிறது.

முன்மொழியப்பட்ட வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், சட்டப்பூர்வமாக நிறுவப்பட்ட வைப்புக் காப்புறுதி முறைமை, தற்போதுள்ள "கொடுப்பனவுப் பெட்டி" பொறுப்பாணைக்கு அப்பால் விரிவாக்கப்பட்ட பொறுப்பாணையுடன் கிடைக்கும். மேலும், தற்போது சோதனைக் கட்டத்திலுள்ள வைப்பாளர் வகையான தரவு சேமிக்கும் முறைமையை செயல்படுத்துவதன் மூலம் வைப்புக் காப்புறுதி முறைமையுடைய செயல்பாட்டுத் திறன் மற்றும் செலுத்துதல் தயார்நிலை உறுதிசெய்யப்படுகிறது. வைப்புக் காப்புறுதி முறைமையினால் இடர்நேர்வு அடிப்படையிலான காப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்துவது, நிதியியல் நிறுவனங்கள் அதிகளவிலான இடர்நேர்வு எடுப்பதைத் தவிர்ப்பதை உறுதிசெய்யும் மற்றும் காப்பீடு செலுத்துவதில் நியாயத்தை பிரதிபலிக்கும். மேலும், பன்னாட்டு நிதி நிறுவனங்களின் மாற்று நிதியியல் ஆதாரங்களுடன் வைப்புக் காப்புறுதி முறைமையின் நிதி போதுமான அளவு உறுதி செய்யப்படும் மற்றும் அரசாங்கத்துடன் காப்பு நிதி ஏற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் நிதி தற்காலிக நிதியிடல் தீர்க்கப்படும்.

இதற்கு மேலதிகமாக, புதிய அவசர கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்புக்கான ஒரு வரைபு இலங்கை மத்திய வங்கியினால் சரியான நேரத்தில் செயல்படுத்தப்படும், இது எந்தவொரு நிதி பாதுகாப்பு தேறிய வழிமுறைகளிலிருந்து எந்தவொரு தார்மீக இடர்நேர்வையும் தவிர்ப்பது மற்றும் இறுதியில் பிணையங்களுக்கு எதிராக கடன் வழங்குவதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் ஐந்தொகையில் எதிர்மறையான தாக்கம் தவிர்க்கப்படுகிறது.

நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு உத்தரவாதம் அளிப்பதற்கும், வங்கி தொழிற்பாடுகளைத் தீர்ப்பதற்கான செலவைக் குறைப்பதற்குமாக, மூலதனம் தீர்ந்து போவதற்கு முன்னர், கடன்திராற்றலற்ற வங்கிகளைத் திறந்து வைப்பதை தடுப்பதற்கும் தோல்வியடைந்த வங்கிகளை விரைவாக மூடுவதற்கும், முன்மொழியப்பட்ட விதிமுறைகள் மற்றும் சட்டங்கள் போதுமான நடவடிக்கைகளை எடுப்பதை இலங்கை மத்திய வங்கி உறுதி செய்தல் வேண்டும். திரவத்தன்மை பிரச்சனைகளிலிருந்து தப்பிக்கக்கூடிய பிரச்சனையுள்ள வங்கிகளுக்கு மாத்திரமே கடன் வழங்க அனுமதிப்பதன் மூலமும், நிதியியல் நிறுவனங்களை உடனடியாகத் தீர்ப்பதன் மூலமும் தள்ளுபடி- தளத்தினூடான கடன்வழங்குவதில் இலங்கை மத்திய வங்கி தற்றுணிபைக் குறைப்பதன் மூலம் இதனை அடையமுடியும்.

நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதிக்கான வழிகாட்டலை நடைமுறைப்படுத்துவதன் ஒரு பகுதியாக அபிவிருத்தி செய்யப்பட்டது. பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம் வகைப்படுத்தலை அபிவிருத்தி செய்வதற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்கியதுடன் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, சுற்றாடல் அமைச்சு மற்றும் வேளாண்மை அமைச்சு என்பன உட்பட ஆனால் அதற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிராத பரந்தளவிலான ஆர்வலர்களின் பங்கேற்புடன் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**2022ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கூடிய வழிகாட்டலை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் மற்றைய அநேக வழிமுறைகளிலும் மத்திய வங்கி ஈடுபட்டிருந்தது.** இலங்கையின் பசுமை நிதி வகைப்படுத்தலுடன் இசைந்து செல்லும் விதத்தில் நீடித்துநிலைத்திருக்கும் நிதி நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பதற்கான வழிகாட்டல்களை கூட்டிணைக்கின்ற விதத்திலும் அத்தகைய ஏதேனும் நடவடிக்கைகளுக்காகவும் நிதியியல் துறைக்கு ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினை வழங்குகின்ற தேவையினைப் பரிசீலனையில் கொண்டும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு பணிப்புரையொன்றையும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு ஒழுங்கு விதியொன்றையும் மத்திய வங்கி விடுத்தது. மேலும், மத்திய வங்கி, நிதி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட நாட்டிற்கான பசுமை முறிகளை வெளியிடுவதற்கான பசுமை முறி கட்டமைப்பொன்றினை அபிவிருத்தி செய்யும் செய்முறையில் ஈடுபட்டிருந்தது. ஆசியா மற்றும் பசுபிக்கிற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார

மற்றும் சமூக ஆணைக்குழு மூலதனச் சந்தைகளின் முன்னேற்றத்திற்காக இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கும் நிதிக்கான வழிகாட்டலில் அடையாளம் காணப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கையாகவுள்ள பசுமை முறி கட்டமைப்பிற்கு தொழில்நுட்ப உதவியை வழங்குகிறது. மேலும், மத்திய வங்கி நாட்டில் நீடித்துநிலைத்திருக்கும் நிதியியல் முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம், ஆசிய மற்றும் பசுபிக்கிற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு உள்ளிட்ட பன்னாட்டு முகவர்களுடனும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ரீதியான தொடர்பான மற்றைய ஆர்வலர் குழுக்களுடனும் நெருக்கமாகத் தொடர்ந்தும் பணியாற்றுகிறது.